


# கவியரங்கில் கந்தவனம்

கிராளை. செ. சு

12-2-73

# கவியரங்கில் சந்தவனம்

# கவியரங்கில் கந்தவனம்



அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13, (இலங்கை)

அரசு வெளியீடு: 33

முதற் பதிப்பு: 5 அக்டோபர் 1972

விலை: ரூ. 8-00

உரிமை நூலாசிரியருக்கு

# KAVI ARANKIL KANDAVANAM

*(A collection of poems recited on several stages by Poet Kandavanam.)*

**Publishers :**
**ARASU** Publications,
231, Wolfendhal Street,
Colombo-13.

திரு: வி. மார்க்கண்டு
அவர்களுக்கு
இந்நூல்

சிறுவனா யிருந்த போதுஞ்
சிறப்புற வளர்ந்த பின்னும்
உறுதுணை யாக நின்றென்
உயிர்கலந் துலவி நாளும்
பெறுமதி நோக்கி டாத
பேருத விகளி னாலே
சேரிநலஞ் செய்யும் அண்ணர்
திருமணச் செம்மல் திண்ணர்
சீர்க்குநு ணாவி லூரிற்
செந்தமிழ் மன்றம் வைத்தோர்
ஊர்க்குயி ரான சேவை
உவந்துசெய் யொப்பில் தொண்டர்
யார்க்குநல் லன்பர் நண்பர்
ஆண்மைகொள் ளாற்ற லாளர்
**மார்க்கண்டர்** தமக்கிந் நூலை
மனமுவந் தளிக்கின் றேனே.

—வி. கந்தவனம்

# பதிப்புரை

ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பின் பலவாய வளங்களையும் வண்ணங்களையும் வகைகளையும் நூலுருவிலே இலக்கியச் சுவைஞனுக்குக் கிட்டுமாறு செய்தல் வேண்டும் என்ற சத்தியத்தின் தளத்திலேயே 'அரசு வெளியீடு' நிறுவப்பட்டது.

இதுவரையில் நமது வெளியீடாக முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. இலக்கியத்தின் எந்த ஓர் உப பிரிவையும் அலட்சியஞ் செய்யாது அவ்வத் துறைகளைச் சங்கைப்படுத்தும் வகையிலே நூல்களை வெளியிட்டுள்ளோம் என்பது மன நிறைவினைத் தருகின்றது.

இலக்கியத்தின் ஒரு வடிவமான கவிதைத் துறையை மட்டும் எடுத்துக்கொண்டால், அதன் பல்வேறு வண்ணங்களைக் காட்டும் வகையிலே 'அரசு வெளியீடு' நூல்கள் எட்டு வெளிவந்துள்ளன. எட்டும் எட்டு வகைத்து என்பது உவகைக்குரியது. கீதையின் சாரமாயும் இந்துத் தத்துவத்தின் சேகரமாயும் பகவத் கீதை வெண்பா சமைந்தது. தற்காலத்திலே வழங்கும் தனிப்பாடற்றொகுதியாயும் தற்காலக் கவிதைச் சங்கதிகளைத் தொனிப்பதாயும் அண்ணல் கவிதைகள் அமைந்தது. இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய மரபு விசாரணையாக இலக்கிய உலகம் விளைந்தது. கவிதைத் துறைக்கொரு புதிய செய்யுள் வடிவத்தை மஹாகவியின் குறும்பா அறிமுகப்படுத்தியது. நபிமொழி நாற்பது நபிபெருமானாரின் நல்வாசகங்களை வெண்பாவாக இசைத்தது. கி. பி. 1642-ஆம் ஆண்

டளவில் கத்தோலிக்க கிறிஸ்தவப் புலவர் ஒருவரினால் இயற்றப்பட்ட நூலொன்று அழிந்துவிடலாகாது என்ற அக்கறையினால் ஞானப்பள்ளு வெளிவந்தது. ஈழம்-தமிழகம்-மலேசியா-சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகளைச் சேர்ந்த நூற்றொரு கவிஞரின் கவிதை முயற்சியாக காந்தி பாமாலை பொலிந்தது. குறுமை-புதுமை-எளிமை ஆகிய இலக்கணங்களுக்கு அப்பையா காவிய இலக்கியமாய் அமைந்தது.

இப்பொழுது 'அரசு வெளியீடு'வின் முப்பத்து மூன்றாவது நூலாகவும், கவிதைத் துறை சார்ந்த ஒன்பதாவது நூலாகவும் கவியரங்கில் கந்தவனம் வெளிவருகின்றது. கவிதைத் துறையில் முற்றும் புதியதோர் அனுபவமாக இந்நூல் தமிழ்ச் சுவைஞருக்கு வாய்க்கின்றது. பல சுவைகளும் ஒன்றிழைய, கவிஞரும் சுவைஞரும் ஒரு சேரக் கேட்டின்புற்ற கவியரங்கப் பாடல்களின் தொகுப்பே இந்நூல். கவிதைத் துறையின் இந்தப் புதுக்கோலத்தின் தலைமை மகனாக உயரும் கவிஞர் கந்தவனத்தின் இந்நூலை வெளியிடுவதிலே, வெளியீட்டாளன் என்ற முறையில் மட்டும் அல்லாமல், நண்பன் என்ற முறையிலும் பெருமிதம் அடைகின்றேன்.

**எம். ஏ. ரஹ்மான்,**
அரசு வெளியீடு

*5-10-1972.*

## கவியரங்கத் தலைவர்

கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு மக்கள் மத்தியில் நிலவிவரும் மதிப்பையும் புகழையும் நான் நன்கு அறிவேன்.

அவரது கவிதைகள் உணர்ச்சியை ஊட்டுவன; எழுச்சியைத் தருவன; வளர்ச்சியை நாட்டுவன.

கந்தவனத்தின் கனத்த புகழுக்குக் காரணம் கவியரங்குகளே எனின் மிகையாகாது. பல கவியரங்கங்களிலே அவரை நான் பார்த்திருக்கிறேன்; இரசித்து ஆர்த்திருக்கின்றேன்.

கவியரங்கங்களிலே கந்தவனத்தின் எடுப்பான நிலை இணையில்லாதது. அரங்குக்கு வேண்டிய தகைமைகள் அனைத்தும் அமையப் பெற்றவர். உடுவில் மாநாட்டிலே இதனை நான் உற்றுக் கவனித்தேன். அந்த மாநாட்டிலே பெயர் பெற்ற கவிஞர்களுக்கெல்லாம் தலைமை தாங்கிக் கவியரங்கை அவர் கலைத்துவ நடையில் நடாத்தி அதனை ஓர் உன்னத நிகழ்ச்சியாக்கி முடித்த வகைகண்டும், அந்த நிகழ்ச்சியை அங்கு திரண்டிருந்த ஆயிரம் ஆயிரம் மக்கள் ஆர்த்துச் சுவைத்துப் போற்றிய நிலைகண்டும் உளமார உச்சி குளிர்ந்தேன். அவர் உண்மையிலேயே கவியரங்கத் தலைவர்தான்.

இத்தகைய திறமை மிகுந்த கவிஞரின் பெருமையை நானே பல கூட்டங்களில் எடுத்துக் கூறி

மகிழ்ந்திருக்கின்றேன். இந்தியாவிலும் அவரது நூல்களைப் பல அறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் அறிமுகப் படுத்தியிருக்கின்றேன்.

கவியரங்கங்களிலே கவிதைகளைக் கல்லாதாரும் விளங்கும் வண்ணம் எடுத்துச் சொல்லும் ஓர் காந்த சக்தி கந்தவனத்திடம் உண்டு. கவியரங்கங்கள் மூலம் சாதாரண மக்கள் மத்தியில் கவிதா இரசனையை வளர்த்துவரும் பெருமை அவருக்குண்டு. அதுமட்டுமல்ல. மக்களைத் தட்டி எழுப்பி உரிமை உணர்வை ஊட்டி வருகிறார். பெருமை நிலையை எடுத்துச் சொல்லுகிறார். கெட்ட பழக்கங்களைச் சாடுகிறார்: நல்ல நெறிமுறைகளை நாட்டுகிறார்.

கந்தவனத்தின் கவியரங்கக் கவிதைகள் நூலுருவம் பெறுவது குறித்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அப்படி ஒரு நூலை அவரது இரசிகப் பெருமக்கள் ஆவலுடன் எதிர்பாத்தவாறுள்ளனர்.

அவரின் வளர்ச்சியில் அதிகம் அக்கறை உள்ளவன் என்ற முறையில் அவரது அரங்கப் பாடல்கள் நூல் வடிவில் வரும் இவ்வேளையில் பாட்டால் தொடர்ந்து தமிழ் மக்களையும் தரணியையும் அவர் பாலித்து விளங்க அன்போடு வாழ்த்துகின்றேன்.

**வீ. என். நவரத்தினம்**
பா. உ., சாவகச்சேரி

சாவகச்சேரி
2.10.72.

## இரசிகர் கூட்டமுள்ள கவிஞர்

ஈழ நாட்டில் - முக்கியமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ் விழாக்களிலெல்லாம் கவியரங்கம் எனப்படும் சிறப்பு நிகழ்ச்சி விசேட அம்சமாக இடம் பெறுவது வழக்கமாகிவிட்டது. கவியரங்கம் இல்லாத விழா இல்லை என்னும்படியாகி விட்டது. பேச்சாளர்களிலும்பார்க்கக் கவிஞர்கள் முதலிடம் பெற்றுவிட்டார்கள். சிற்றூர், பேரூர் நகரங்களிலெல்லாம் கவிஞர்களின் பெயர் ஒலிக்கத்தொடங்கிவிட்டது. கல்லூரிகளில் எல்லாம் கவிஞர்களின் பெயர்கள் 'அடிபட'த் தொடங்கிவிட்டன. இது ஒரு நல்ல அறிகுறி' என்றே நான் கருதுகின்றேன்.

இந்தக் கவியரங்க நிகழ்ச்சிக்கு ஓர் 'உயிர்ப்பு'க் கொடுத்து இரசனைக்குரியதாக்கிய பெருமையில் கவிஞர் கந்தவனத்துக்கு முக்கிய பங்குண்டு. சென்ற ஆறு வருடங்களாக யாழ்-இலக்கிய வட்டக் கவிஞர்களின் துணையோடு அவர் இந்த அரும்பணியை ஆற்றியுள்ளார். கந்தவனம் இல்லாத கவியரங்கம் சோபிக்காது என்ற நிலைமைக்கு அவர் உயர்ந்துள்ளார். 'இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.'

கவியரங்கங்களிலே பாடும் கவிதைகளுக்குச் சில முக்கியமான அம்சங்கள் தேவை. வாசிக்கும் போதே பொருள் விளங்கக்கூடிய எளிமை, பலவித சந்தங்கள் மாறிவரும் தன்மை, மட்டுக்குமிஞ்சாக நகைக்சுவை, புதிய புதிய உவமை பல விதமான உக்திமுறை, தெளிவான வாசிப்பு, அளவான பாடல்கள் என்பவைதான் அவை. இசையோடுபாடி கவியரங்கங்களைச் சிறப்பிப்

போர் சிலர் உளர். வாசிப்பு மூலம் கலை கட்டச்செய்து வெற்றி பெறும் கவிஞர்களும் இருக்கின்றனர். இரண்டாவது முறையைக் கையாளும் கவிஞர்கள் பொது மக்களைக் கவர்ந்து வெற்றிபெறுவது என்பது சிரமமான காரியம். இந்தச் சிரமமான காரியத்தில் கவிஞர் கந்தவனம் வெற்றி பெற்றதைக் கண்டு உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சில பேச்சாளர்களின் பேச்சைக் கேட்க அவர்களுக்கென இரசிகர் கூட்டம் உண்டு. அப்படிக் கவிஞர் கந்தவனத்தின் கவிதைகளைக் கேட்டு இரசிக்கவென ஓர் இரசிகர் கூட்டம் இருக்கிறது. இது அவர் அரிதில் முயன்று பெற்றபெரும் பேறு. அவருடைய நாகரிகமான நகைச்சுவை, கிராமாந்தரச் சொற்களைக் கையாளுந்திறன், புதிய புதிய உவமைகள், வாசிக்கும் முறை என்பன அவரை மற்றைய கவிஞர்களிலும் பார்க்கத் தனித்தவராக-உயர்ந்தவராக-இரசிகர் முன் நிறுத்துகிறது.

அவருடைய கவியரங்கப் பாடல்கள் 'ஏனிந்தப் பெருமூச்சு?' 'கீரிமலையினிலே' 'உய்யும் வழி' நூலாக வெளிவந்திருக்கின்றன. எனினும் அவருடைய முழுத் திறமையையும் அறிய கவியரங்கில் கந்தவனம் என்ற இந்த நூல் உதவும் என்றே நான் நம்புகிறேன். அவரது கவிதைகளைக் காதாலே கேட்டு இரசித்த இரசிகர்கள் ஆறுதலாக இருந்து வாசித்து இரசிக்கும் வண்ணம் அதனைத் துணிவோடு அரசு வெளியீடு அதிபர் திரு. M. A. ரஹ்மான் அவர்கள் தந்திருக்கிறார். கவிஞரின் இந்த நூல் இரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையுமென்பது திண்ணம்.

— இரசிகமணி கனக செந்திநாதன்

குரும்பசிட்டி,
2.10.72

## மக்கள் கவிஞர்
## மந்திர சக்தியர்

கவிஞர் கந்தவனம் அவர்களை நண்பராகவும் ஆசிரியத் தோழனாகவும் உறவாடிப் பழகியிருக்கிறேன். ஆனால் அவர் கவியரங்குகளிற் பாடும்போது எல்லாம் எனக்கு என்றுமில்லாத ஒரு புதிய அநுபவத்தைத் தந்துகொண்டிருப்பதை நினைத்து நான் பெரிதும் மகிழ்கிறேன்.

கவிஞர் கந்தவனம் மேடையில் எழுந்து நிற்கின்றார் என்றவுடன் வழமையான கரகோசத்தைவிடச் சபையில் ஏற்படும் முகமலர்ச்சியும் சிரிப்பொலியும் சபைக்கும் மேடைக்கும் ஒரு புதிய பற்றையும் பாசத்தையும் ஒரு நொடிப் பொழுதில் ஏற்படுத்தி விடுகின்ற மந்திர சக்தியையும் தன்வயப்படுத்தும் ஆற்றலையும் காண்போர் உள்ளத்தில் என்றும் நிலை பெறச் செய்வர்.

இவருடைய கவிதைகளில் சொட்டும் மனிதாபிமானமும் உள்ளதை உள்ளபடி சொல்லும் நெஞ்சுரமும், நகைச்சுவையும் அனைவரின் மேம்பாட்டையும் நாடி நிற்கும் பொதுநலப் பான்மையும் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற பேரார்வமும் தன்நோக்கங்களை நிலை நிறுத்தக் கையாளும் கவிதா யுக்தி முறையும் அவரை ஓர் விரைந்து வளரும் மக்கள் கவிஞனாகப் பரிணமிக்கச் செய்யத் துணைநிற்கும் என்பது உறுதி.

படித்தோர் ஏற்கும் வகையில் பாமரர் சொல் வழக்கை உயர்ந்த இலக்கியமாக ஆக்கித் தமிழை ஓர் உண்மையான இன்ப மொழியாகக் கவிஞர் அள்ளிப் படைக்கும் அற்புதக் காட்சிகள், ஈழநாட்டின் கவியரங்குகள் எங்கும் தொடர்ந்து ஒலிக்க வாழ்த்துகிறேன்.

**வ. பொன்னம்பலம்**

*அளவெட்டி,*
*10.7.1972*

## எமக்கெல்லாம்
## சொந்தவனம்

கந்தவனம் அவர்களின் பெருமையைக் கவியரங்கத்தில் மாத்திரமன்று, எந்த அரங்கிலும் கண்டு கொள்ள முடிகிறது. இது இவருக்கு என்று அமைந்த ஒரு தனிச் சிறப்பாகும். உரையரங்கிலும், கருத்தரங்கிலும், விவாத அரங்கிலும், எழுத்தரங்கிலும், நாடக அரங்கிலும், ஆசிரிய அரங்கிலும், சமய அரங்கிலும் நாம் அடிக்கடி இவரைச் சந்திக்கின்றோம்.

நுண்மாண் நுழை புலங் கொண்டு காலமும் இடனும் வாரிதின் நோக்கி அவையறிந்து கவிபாடுபவர் எங்கள் கந்தவனக் கவிஞர். இதனால் அவருடைய பேச்சிலும் கவிதையிலும் ஈர்ப்புக் கொள்வோர் பலர். காஞ்சிபுர மெய்கண்டாராதீனக் குரு மகா சந்நிதானமவர்கள் இவருடைய பேச்சையும் கவிதையையும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் கேட்டு மகிழ்ந்து தலையசைத்து ''இந்தக் கந்தவனம் எமக்கெல்லாம் சொந்த வனம்'' என்றார். மணம் வீசும் கவி மலர்களை அள்ளி அள்ளித் தருகின்ற வனம் இது. கேட்டாரைப் பிணிக்குந் தகமை அவர் கவிதைகளுக்குண்டு. எல்லாவற்றிலும் மேலாகப் போற்றவேண்டியது அதனை அவர்கள் சபையிலே வாசிக்குந் திறனே என்பதை யாவரும் அறிவர்.

சுவை தோன்ற நகை தோன்றப்பாடுவது மன்றி செந்தமிழிலும் சேரித் தமிழிலும் சந்தர்ப்பத்துக் கேற்றபடி கவிதை சொல்வது இவருடைய பெருஞ் சிறப்பாகும். நகையின்றித் தெய்வீகக் கவிதைகள்

பாடுவார். சுவை தோன்ற இலக்கியச் கவிதைகள் பாடுவார்; நகை தோன்றச் சீர்திருத்தக் கவிதைகள் பாடுவார், இன்று வரை இவர்கள் அரங்கேற்றியுள்ள கவிதைத் தொகுப்புகள் பலப்பல, அவை யனைத்தையும் தமிழ் கூறு நல்லுலகம் என்றென்றும் பாராட்டிப் போற்றும் என்பதில் மிகை யொன்றுமில்லை.

"கற்றறியாப் பாமரரும் கலைதோய்ந்த
நெஞ்சினரும் கற்று வல்ல
முற்றறிவு மேதைகளும் மெச்சுகின்ற
கவி வல்லார் முழுது மாய்ந்த
நற்றவத் தோர் தம்மாலும் நனி காணு
நல்லடக்கம், அன்பு, சால்பு
பெற்றவராம் இவர் பெருமைச் சீர்பாட
நான் பெரிய புலவராமோ."

**தங்கம்மா அப்பாக்குட்டி**

**யூனியன் கல்லூரி**
**தெல்லிப்பழை**
**3. 7. 1972**

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | ஏனிந்தப் பெருமூச்சு? | 25 |
| 2. | பாரதி | 38 |
| 3. | கனவுலகம் | 47 |
| 4. | வள்ளல் நல்லதம்பி | 58 |
| 5. | அருள்வாக்கி | 66 |
| 6. | பகிடிவதை | 74 |
| 7. | எழுந்து திசைதிசை விளங்கவே | 83 |
| 8. | உய்யும் வழியிவர்க் கோது | 97 |
| 9. | என்னுங்க உங்களைத் தாங்க | 106 |
| 10. | நாவலர் பெருமான் | 117 |
| 11. | நவராத்திரி | 127 |
| 12. | வாருங்கள் போவோம் | 140 |
| 13. | பண்புடையார்ப் பட்டுண்டுலகம் | 148 |
| 14. | ஆசுகவி வேலுப்பிள்ளை | 157 |
| 15. | எழுதுகோல் தெய்வம் | 162 |
| 16. | எது மாண்பு? | 170 |

# முன்னீடு

ஏழாண்டுக்கு முன்னர் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கம் நடத்திய தமிழ் விழாவின் கவியரங்கிற்கு நான் தலைமை தாங்கினேன். அப்பொழுது இந்நூலில் இடம் பெறும் வள்ளல் நல்லதம்பி என்னுங் கவிதை அரங்கேற்றப்பட்டது. இருவரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அன்றுதான் பொசிந்தது. அன்று அரும்பு வைத்த பழக்கம் இன்று இலக்கிய நட்பாக முற்றியுள்ளது.

அன்றுதான் கந்தவனத்தைக் கவியரங்கிற் கேட்டேன். மனங் குளிர்ந்தேன். கால ஓட்டத்திலே அவருடைய உள்ளமும் பண்பும் குளிர்வானது என அறிந்து களிக்கலானேன். வித்துவக் காய்ச்சலினுலும், 'முதுகுசொறி' அணியினுலுந் துன்புருத பண்பாளர். நட்பிற்கு இனிய இயல்பினர். 'ஈழகேசரி'யை நிறுவிய புரவலர் பொன்னையா பிறந்த குரும்பசிட்டியை மையமாகக் கொண்டு, இரசிகமணி கனக-செந்திநாதன், ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோரின் அநுசரணையுடன் புனிதமான தமிழ்ப்பணி புரியும் செம்மனத்தர். இலக்கியம்-சமுதாயம்-அரசியல் பற்றிய நோக்குகளிலே அவருக்கும் எனக்கும் கணிசமான கருத்துவேறுபாடு உண்டு. இதனை இருவரும் அறிவோம். எனினும், யார் வரித்த மதம் ஏற்றது என்பதை நிறுவும் தர்க்க சம்வாதங்களிலே நாம் நேரத்தை அநியாயப்படுத்தியது கிடையாது. கோஷங்களும் தந்திரோபாயங்களும் இயக்கத்தின் பெயராற் செய்யப்படும் பித்தலாட்டங்களும் சாதனைகளாக நிலைக்கப் போவதில்லை. ஈற்றிலே நாங்கள் விட்டுச் செல்லும் இலக்கிய ஆக்கங்களே இலக்கிய உலகிலே எங்களுக்குள்ள இலக்கிய

அந்தஸ்தினை நிர்ணயிக்கும் என்பதிலே இருவரும் ஒத்த கருத்துடையவர்களாய் இருக்கின்றோம். எனவே, எங்களுடைய பார்வைகள் மாறுபட்டிருப்பினும், ஒரு வருடைய அபிப்பிராயத்தை மற்றவர் மதித்து நட்புப் பாராட்டவும் முடிகின்றது. இந்தப் பண்பு மட்டும் நம் இலக்கியகாரர்களின் மத்தியிலே மலருமானால், எத்தகைய ஓர் உவப்பான சூழ்நிலை உருவாகும்? தற் போதைக்கு இத்தகைய சூழ்நிலை முகிழ்வதற்கான அறிகுறியைக் காணோம். மிக மிகச் சாமான்ய (பல வேளைகளிற் பூஜ்ய) ஆற்றல்களுடன், வேறு வசதி களைத் துணைக்கிழுத்து, இலக்கியத் திருத்தவிசிலே ஓர் இடம்பிடிக்க ஆலாப்பறக்கும் சில்லறைகள் மலிந் துள்ள இன்றைய தலைமுறையின் சமுதாயத்திலே இந் தப் பண்பை வளர்த்தல் சிரமசாத்தியம் என்ற யதார்த்த நிலையும் விளங்குகின்றது. இருப்பினும், எதிர்காலத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கந்த வனம் என்னைப்போல தன் சுய ஆற்றலிலே நம்பிக்கை வைத்துள்ளார். எனவே, சங்கைபான நட்பும் நிலவு கின்றது. இந்தச் சங்கையைச் சங்கைப்படுத்தும் ஓர் உந்துதலினாலும் இந்த முன்னீடினைக் கந்தவனம் என் னிடம் கேட்டிருக்கலாம் என்றுந் தோன்றுகின்றது.

கவியரங்கங்களிலே அரங்கேற்றப்படும் கவிதை கள் கேட்குநர்க்கு ஒரு கிளுகிளுப்பினை ஊட்டிக் காற் றுடன் கலந்து மடிந்து விடுதல் தகாது. அவற்றை நூலுருவிற் பேணினாற்றான் கால ஓட்டத்திலே அவற் றின் இலக்கிய மதிப்பு நிறுவப்படும். இத்தகைய ஒரு சத்தியப் பிடிமானத்துடன், ஒரு முன்னோடியாகவுந் தமிழ் செய்கின்றார் கந்தவனம். அவருடைய கவியரங் கக் கவிதைகள் முன்பும் நூல்களாக வெளிவந்துள் ளன. இதோ, இப்பொழுதும் வெளிவருகின்றது. இன்ஷா அல்லாஹ், இன்னும் வெளிவர வேண்டும்.

இன்றைய சமுதாயத்தின் விழாக் கோலங்களுள் ஒன்ருகவே கவியரங்கங்கள் விருத்தியடைந்துள்ளன என்று சிலர் பேசியும் எழுதியும் வருகின்ருர்கள், கவியரங்கங்களிலே பங்கு பற்றும் கவிஞர்கள் பலர் கூட இத்தகைய எண்ணத்தின் வசப்பட்டுத்தான் கடை நடத்துகிருர்கள். எனவே, தமிழ்க் கவிதை மரபினைப் பற்றிய சில உண்மைகளை இங்கு ஞானப் பிரகாசஞ் செய்தல் தகும்.

கவி என்பதற்குப் பழைய சொல் பா, இதன் அடியிலிருந்து பிறந்தது பாட்டு. இச்சொற்கள் செய்யுளைச் செவிவழி கேட்டுச் சுவைக்கும் பண்பை உணர்த்தும்.

> 'பா வென்பது, சேட் புலத்திலிருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாட மோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யு ளென்று உணர்தற் கேது வாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை'

எனப் பாவின் இயல்பை பேராசிரியர் விளக்கினர். அச்சிட்ட செய்யுள் எழுத்துக்கள் சொற்கள் ஆகியவற்றின் கூட்டமாகவே காட்சி தரும். அதனை வாயாற் பாடிச் செவி வழியாக அதன் ஓசை யமைதியைக் கேட்டு, அதன் ஓசையின் வாயிலாக உணர்த்தப்படும் பொருளை எல்லாம் முற்ருக உணரும்போதே அஃது உயிர்ப்புள்ள கவிதையாக நமக்குச் சுவை யூட்டுகின்றது. எனவே, செய்யுளைச் செவிவழியாகக் கேட்டு உணரும் பண்பு, அதன் பிரிக்க முடியாத இயல்பு என்பது தெளிவாகும்.

கவிஞர்கள் ஏன் கவிதைகள் எழுதுகின்ருர்கள்? உள்ளத்திலே கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை அடக்க

முடியாது அவன் அவற்றைச் சொற்களிலே வடித்து விடுகின்ருன்; அதுவே கவிதையாகின்றது என்பர் ஒரு மதத்தினர். உணர்ச்சி பல வகைத்து. எனவே, உணர்ச்சி என்ற சொல்லுக்கு ஒரு வரையறை தேவை. வாழ்க்கையைப் பிரகாசப்படுத்துவதற்கும், சுவைஞனின் அநுபவத்தை அகலிப்பதற்கும் அந்த உணர்ச்சி வழி சமைத்தல் அவசியம். இல்லாவிட்டால், உணர்ச்சி வசப்பட்டு வாய்க்காரப் பொன்னம்மா ஓசை இசைத்து வசை பொழிவதுங் கவிதையாகி விடும் அல்லவா? இம்மதத்தின் கவிஞன் தான் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற சேதனை இன்றி, ஆன்ம திருப்தி என்று ஓர் சங்கதியையும் நுழைத்துவிடுகின்ருன். அவன் தனது கவிதையை மற்றவர்கள் படித்தாலென்ன விட்டாலென்ன; பாராட்டினுலென்ன பழித்தாலென்ன; தனக்குப் பரிசில் கிடைத்தாலென்ன கிடைக்காவிட்டாலென்ன என்று யோகிபோல் இருந்துவிடுவான். அத்தகைய கவியோகியர் கவிதைச் சந்தையிலே மிக ஒறுப்பு.

பொதுவாகக் கவிஞன் ஆன்ம நிறைவோடு நிற்பதில்லை. தன் உணர்ச்சி சுவைஞனின் உணர்ச்சியைத் தாக்குதல் வேண்டும்; அவருடைய வாழ்க்கையை உவகைப்படுத்துதல் வேண்டும்; அவனுடைய அநுபவம் அகலித்துத் தன் அநுபவத்துடன் சங்கமித்தல் வேண்டும்; — இத்தகைய வேட்கைகளுக்குக் கவிஞன் மசிவான். தான் ஒரு சமூகப் பிராணி — சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் — என்ற சேதனை உறைக்கும். அப்பொழுது சுவைஞனைப் பற்றிய சிரத்தை வலுக்கும். சுவைஞனுடன் தோழமை கொள்ளும் விழைவு வளரும். 'கவிதை வாழ்க்கையிலிருந்து தப்பியோடும் சகாயம் அல்ல. அது வாழ்க்கையை பெரிதுபடுத்தவும் பண்படுத்தவும் உதவும் பசளை. சுவைஞன் தான் ஒரு போதும் நினைத்துப் பார்க்காத அளவுக்கு வாழ்க்கை

மிகமிகச் சுவாரஸ்யம் உள்ளது என்ற பிரமிப்பை அவனுக்கு ஊட்டுதல் வேண்டும். புதிய வாய்ப்புகள், மேலும் அதிகமான பற்றுகள், மேலும் அதிகமான சுருதிகள், மேலும் அதிக அழகுகள் எல்லாம் வாழ்க்கையில் இருப்பதைச் சுவைஞனுக்கு உணர்த்துதல் வேண்டும். சுவைஞன் அறியாத அளவுக்கு நமது பாசங்களுக்கும் கற்பனைகளுக்கும் இடம் உண்டு என்பதைச் சுவைஞன் அறிந்து பிரமிப்பும் களிப்பும் அடைதல் வேண்டும்'—இத்தகைய இலக்கிய சத்தியத்தின் ஞான விடிவும் வாய்க்கும். இலக்கிய சத்தியத்துடனும், சமுதாய உணர்வுடனும், கவிதைக்கே உரித்தான ஓசைப் பண்பு பேணிட பாடும் கவிஞன் பொது மக்களின் உள்ளத்திலே இடம்பெறுவான். மக்கள் நயக்கும் பாவலனாய் உயருவான். மஹாகவி பாரதி கூட 'பாட்டுத் திறத்தால் இவ்வையம் பாலித்திட வேண்டும்' என்றல்லவா பாடினான்? இதுவே கவிஞன் பின்பற்றத் தக்க மதம் என்று நான் கருதுகின்றேன்.

பிறிதொரு மதத்தினரான கவிஞர் கூட்டத்தை உருவாக்கும் பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசியற் கோஷங்களை மக்கள் மத்தியிற் பரப்பும் ஒரு சாதனமாகக் கவிதையுட்பட இலக்கிய வடிவங்கள் பயன்படுதல் வேண்டும் என்பது இந்த மதத்தவரின் வாதம். சுவைஞனுடன் தோழமை கொள்ளுவதற்கு அப்பாலும், கவிதைக்குப் பிரசார பண்பும் இருக்கிறது. ஆனால், பிரசாரம் கவிதையின் உயிர்ப்பினைத் திருகிக் கொல்லுமானால்? 'இலக்கிய நயமுள்ள பிரசாரம் இலக்கியமாக உயரும்; இலக்கி நயமில்லாத பிரசாரம் பிரசாரமாகவே வீழும்!' — இது தான் உண்மை. கலைப் பண்பை இழந்த பிரசாரக் கவிதைகள், மக்களைக் கவருஞ் சக்தி அற்றனவாய், காலப்போக்கில் வெறுஞ் சொல்லடுக்குகளாய் நின்று வற்றும்.

இனி, செவி வழியாகக் கவிதையைக் கேட்டின் புறும் மரபுக்கு வருவோம். பண்டைக் காலத்திலே பாவலர்க்குப் பரிசில் வழங்கியும் உண்டியும் உடையும் அளித்தும் புரத்தனர் புரவலர். அத்தகைய புரவலர் தமது அவையிலே புலவர்களை வைத்தும் ஆதரித்தனர். அன்னர் அவைக்களப் புலவர்கள். அப்புலவர்கள் தம்மை ஆதரித்த புரவலர்களைப் புகழ்ந்து பாராட்டினர். புகழும் பொழுது பாடாண் திணை பேணினர். பாடப் பெறும் தகுதியுடையோரையே பாடியதால் அவர்கள் பொய்யில் புலவராய் உயர்ந்தனர், அவர்கள் புதிய புதிய கவிதைகளைப் புனைந்தும் பாடிக்காட்டினர். அவற்றைப் புரவலர்களும் அவையிலுள்ளோருங் கேட்டு மகிழ்ந்தனர். இவ்வாறு கவிதை இன்பத்திற் களிக்கும் புரவலர்களை நாடி நாட்டின் பல்வேறிடங்களிலுமிருந்து பாவலர் வந்து தாம் புனைந்த பாட்டுக்களைப் பாடிக்காட்டுவர். அவற்றையும் அவையோர் கேட்டு மகிழ்வர். அக்காலத்திலே தமிழ்ச் சங்கங்கள் உருவானதற்கு இந்த வழக்கமே மூலகாரணம் என்று அறிஞர் கருதுவர். மதுரையிலிருந்து அரசாண்ட பாண்டிய மன்னர் இலக்கியச் சுவையுடையராயும் தமிழ்ப் பற்றுடையராயும் விளங்கினர். இதனல், அவர்கள் தமது அவையிலே புலவர்களை வைத்துப் புரந்தனர். புலவர்கள் தங்குவதற்குச் சங்க மண்டபமுஞ் சமைத்துக் கொடுத்தனர். அங்கே ஒழுங்காகக் கவியரங்கங்கள் நடைபெறும். மன்னரும் மன்னரவையோரு மன்றிப் பொதுமக்களும் இக்கவியரங்கங்களிற் கலந்து கவிதை இன்பம் நுகர்ந்தனர்.

'மதிமொழி இடன்மலே வினைவர்போல் வல்லை
செதுமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புலன வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர,

என்னுங் கலித்தொகை சான்று. புலவர்கள் 'புலன் நா உழவர்' எனப்படுகின்றனர்; புலமை அமைந்த நாவாகிய ஏரால், கேட்போரின் செவியாகிய வயலிலே உழுது பயிரிடுந் தொழிலையுடையவர் என்பது பொருள் இப்புலவர் புதிது புதிதாய்ப் பாடுஞ் செய்யுள்களே 'புதுமொழி' எனச் சுட்டப்படுகின்றது. மொழிக்கு வளஞ் சேர்த்து, புத்துயிர் ஊட்டி, புதிது புதிதாய்க் கவி செய்யும் புலவரின் படைப்பினைப் புதுமொழி எனக் குறித்தல் பொருந்துமல்லவா? இந்தப் புது மொழியைப் பாண்டிய மன்னன் தான் மட்டுமே நுகராமல் சபையிலுள்ள மற்றேருடன் சேர்த்து நுகர்ந்தான் என்பது 'கூட்டுண்ணும்' என்ற தொடராற் பெறப்படும்.

'நிலனுவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனுவிற் பிறந்த சொற் புதிதுண்ணும் பொழு
தன்றே'

மன்னனும் அவையோரும் மட்டுமன்றி, மதுரை மாநகரில் வாழ்ந்த மக்கள் எல்லோருமே இப்புது மொழி இன்பத்தை நுகர்ந்து களித்தார்கள் என்பது தெளிவாகின்றதல்லவா? மதுரை நகரத்துப் பொது மக்கள் கலந்து கொள்ளுவதற்கு இக் கவியரங்கங்கள் குறிப்பிட்ட காலங்களிலே நடை பெற்றிருத்தல் வேண்டும். கலித் தொகைப்பாட்டால் இத்தகைய கவியரங்கங்கள் வேனிற் காலத்தில் நிகழ்ந்தனவென அறிகிறேம். வேனிற்காலம் இன்ப நுகர்ச்சிக்கு வாய்ந்த காலம். காதலின்பத்தோடு மட்டும் அமைந்து விடாமல், கவிதை இன்பத்திலும் அம்மக்கள் திளைத்தனர் என்பது அவர்களுடைய நாகரிக உயர்வை நமக்குக் காட்டி நிற்கின்றது. மன்னரும் மக்களும் இவ்வாறு புலவர் பாடும் புதுச் செய்யுள் களைக் கூடியிருந்து கலந்து சுவைக்குங் கூட்டத்துக்குப்

'புணர் கூட்டு' என்ற பெயர் சங்க காலத்தில் வழங்கியது.

> தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
> நிலந்தரு திருவின் நெடியோன்'

என்று மதுரைக் காஞ்சியிலே புணர் கூட்டு என்னுஞ் சொல்லாட்சியைக் காண்கிறோம். கவிதையைப் பாவலர் பாடிக்காட்ட, அதனைக் கேட்கும் அவை கவிஞரோடு கலந்து கூடி அவர் பெற்ற இன்பத்தைத் தாமும் பெற்று மன நிறைவெய்திய காட்சியைப் 'புணர்கூட்டு' என்ற சொல் நம் மனக்கண்ணுக்குக் கொண்டு வருகின்றது.

கலைவல்ல புலவர்கள் தமக்குள்ளே கூடித் தாம் பாடியவற்றை மற்றவர்க்கும் படித்துக்காட்டி அவர்களுடன் கலந்து ஆராயும் வழக்கமும் அக்காலத்து இருந்தது. சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் தமது காவியத்தைத் தமது நண்பரும் தமிழறிந்த புலவருமான தண்டமிழ்ச் சாத்தனுருக்குப் பாடிக் காட்டினர் என்ற செய்தியை,

> 'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
> உரைசா லடிகள் அருள மதுரைக்
> கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்'

எனச் சிலப்பதிகாரப் பதிகம் குறிக்கின்றது.

இவ்வாறே,

> 'இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்

மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனே'

எனக் கூலவாணிகன் சாத்தனாரும் தாம் பாடிய மணி மேகலை துறவு என்ற காவியத்தை இளங்கோ வேந் தனுக்கு பாடிக் காட்டினார் என்று மணிமேகலை பகருகின்றது.

இப்பதிகக் கூற்றுகளிலுள்ள வரலாற்றுண்மை களை விட்டாலுங்கூட, இவை அக்கால வழக்க மொன்றைக் குறிப்பிடுகின்றன என்பதில் ஐயமில்லை. தான் பாடிய கவிதையை மற்றவர்களுக்கும் பாடிக் காட்டி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் என்ற ஓர் அவா பாவலனின் நெஞ்சத்தில் இயல்பாக எழும். மக்கள் சமுதாயமாக வாழும் ஓர் அமைப்பிலே, சமுதாயத்தின் குரலாக — பொது மக்களின் பிரதிநிதியாக — விளங்குபவன் கவிஞனே. ஆகவே, அவன் மற்றவரின் அங்கீகரத்தைப் பெற விழைகின்றான். மற்றவர்கள் அதனை ஏற்றுப் பாராட் டும் போதே மனநிறைவும் முழுமையாக வாய்க்கின் றது. தன்னை அங்கீகரிப்பவர்கள் தன்னைப் போன்ற இலக்கியச் சுவைஞராக, இலக்கியவாணராக, மக்கள் நயக்கும் பாவலராக இருத்தல் வேண்டும் என்று அவன் விரும்புவதும் இயல்பே. அவர்களும் அழுக் காறற்ற உள்ளத்தோடு அவனுடைய படைப்பை ஆராய்ந்து, அதிலுள்ள நிறைகளை உளமாரப் பாராட்டி, குறைகளைக் களைவதற்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகள் கூறுதல் கடன். அத்தகைய சிரத்தை கவிஞனுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாகும். இஃது ஓர் இலட்சியச் சூழ்நிலை.

'நவலருந் தொல் கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி'

'தொல்கேள்வித் தன்மை யுடையார்', 'எஃகுடையார்', 'இகலிலர்' என்ற தொடர்கள் சுட்டத் தக்கன. புலமைக் காய்ச்சலோ, போட்டி பொறுமையோ, சுயப்பித்தோ பகைமையோ, போலிப் புலமையோ இலாத புலவர் கூட்டம். இத்தகைய நிலைமை உகந்தது. இலட்சியமாக வரிக்கத் தக்கது.

இவ்வாறு புலவரும் அறிஞரும் கூடிய அவையிலே ஒருவர் புதிதாகப் பாடிய செய்யுளைப் பாடிக்காட்டி அங்கீகாரம் பெறுவதே அரங்கேற்றம். இத்தகைய அரங்கிலே ஆராய்ச்சியும் நடைபெறும். புதிதாகப் பாடிய செய்யுளிலே குறை குற்றங்கள் இருப்பின் அவற்றை மற்றும் புலவர் எடுத்துக் காட்டுவர். பாடிய புலவர் குறையென ஒப்புக்கொண்டால் அவற்றைத் திருத்தி அமைத்துக் கொள்வார். இல்லையெனில், அவற்றுக்கு அமைதி கூறித் தமது கொள்கையைச் சாதிப்பார். பின்பே அவருடைய ஆக்கத்தை அவையோர் ஏற்றுக் கொள்வர். இவ்வாறு அரங்கேற்றும் வழக்கம் சங்ககால முதலாகத் தமிழ் நாட்டில் நிலவி வந்தது.

இடைக் காலத்திலே சேக்கிழார் தமது பெரிய புராணத்தையும், கம்பர் தமது இராம காதையையும், கச்சியப்ப சிவாசாரியார் தமது கந்த புராணத்தையும் இவ்வாறு அரங்கேற்றினர் என்ற கதைகள் வழங்குகின்றன. இத்தகைய அரங்கேற்றங்களிலே, முன்னர் கூறியது போல, 'இகலிலர்,' 'எஃகுடையார்'

குழுவினால் எல்லாம் இனிய முறையிலே நடைபெறும். மனித இயல்பிற்குரிய இழிந்த குணங்கள் தலையெடுக்கு மானால் — அதாவது, புலமைக் காய்ச்சலும் போட்டியும் பொறாமையும் போலிப்புலமையும் தலையெடுக்கு மானால் — அரங்கேற்றம் இளம் புலவருக்கு வேதனையைத் தருவதாகவும் மாறிவிடும். எவ்வாறாயினும், பிழை மலிந்த செய்யுள்கள் மக்களிடையே பரவாமல் இருப்பதற்கு இத்தகைய அரங்கேற்றங்கள் பயன்பட்டன என்ற அளவிலே நாம் அமைதி கொள்ளலாம்.

புரவலர் புலவர்களை ஆதரித்த காலத்தில், அறிஞர் அவையைக் கூட்டி அரங்கேற்றத்தை நடத்துவதற்கு அவர்களே ஏற்பாடுகள் செய்தார்கள். அந்தச் சூழ்நிலை மாறிய காலத்திலே அரங்கேற்றங்கள் அருகின. இந்த நிலை தோன்றியபோது தனிப்பட்ட புலவர் சிலர், பிறர் செய்யும் நூல்களிலே குறை காட்டிக் கண்டனம் செய்யத் தலைப்பட்டனர். இங்கு நடுநிலை தவறிக் கட்சி சார்ந்து கண்டனஞ் செய்த இழி நிலையையுங் காண்கின்றோம். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மாதவச் சிவஞான முனிவர் என்னும் பெரும் புலவரே இத்தகைய தவறிழைத்துள்ளார் என்பதை அறியும் போது, மற்றையோர் என்ன செய்திருக்க மாட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்கம் என்னும் நூலுக்கு இலக்கண விளக்கச் சூறாவளி எழுதிய சிவஞான முனிவர் நடுநிலை திறம்பிவிட்டார் என்றே இக்கால அறிஞர் கருதுகின்றனர். இவற்றை உணராது, பிறர் செய்யும் நூல்களிலே குறைகாட்டிக் கண்டனஞ் செய்து, ஒட்டுண்ணி இலக்கியம் பண்ணுவதே தமிழ்த் தொண்டு என சமகாலத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகம் ஏமாற்றப்படுவதைப் பார்த்து,

சத்திய இலக்கிய நெஞ்சிலர் வியாகூலம் அடையவே செய்வர்.

ஆனால், போலிப் புலமை கண்டிக்கத் தக்கது. இம்மரபு நக்கீரர் காலந் தொட்டு இன்றுவரை தமிழ் கூறு நல்லுலகில் இருந்து வருகின்றது.

இக்காலத்தில் அச்சு வசதிகள் அதிகரித்துள்ளன. பத்திரிகைகளினதும் சஞ்சிகைகளினதும் எண்ணிக்கைகள் பெருகிவிட்டன. அவற்றின் துணை பற்றியும் கவிதைகள் மலிந்து விட்டன. வெறும் வசனத்தை எழுதி, அதனைக் கவிதை எனச் சாதிக்கும் செப்படிவித்தைக்கும் வசதி வாய்த்துள்ளது. இப்படிப் புழுத்துப் பெருகியுள்ள 'கவிதை'களிலே பெரும்பாலானவை காலமென்னும் வெள்ளப் பெருக்கிலே அள்ளுப்பட்டுப் போகும் என்பது திண்ணம். உயிர்ப்பும் கலைப்பண்பும் பொருந்திய கவிதைகள், சமகால விமர்சனத் தரகர்களின் வித்தார யுக்தித் துணையின்றியே கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும். இன்னும் ஒன்று. கவிதைப் பெருக்கத்தின் பேறாய்க் கவியரங்குகள் மலிந்துவிட்டன. இத்தகைய கவியரங்குகளில் நல்ல கவிதைகளும் இடம் பெறுகின்றன. கவிதை மணம் சுடுகளவும் இல்லாத சொல்லடுக்குகளும் இடம் பெறுகின்றன. பொருள் நயமோ, ஓசைச் சிறப்போ, கவிதை உயிர்ப்போ இல்லாத கவிதையாயினும், மேடையிலே நிற்கும் கவிஞர் இராகமாலிகையிலே பாடிவிட்டால், அவையோர் கைதட்டி ஆரவாரஞ் செய்து ஆமோதித்துவிடுவர். அல்லது, இடக்கராகவும், கிண்டலாகவும், நையாண்டியாகவும் சில பல தொடர்களை எடுத்துக் கூறிவிட்டால் அவற்றுக்கும் ஆரவாரஞ் செய்து அவையோர் வரவேற்பர். கவியரங்குகளிலே பங்கு பற்றும் கவிஞர்களுட் பெரும்பாலோர் இத்தகைய வரவேற்பையே விரும்புகின்றனர். இதனால், நல்ல கவி

தைகள் பெருகுவதற்குப் பதிலாக, போலிக் கவிதைகள் குறை மாசப் பிண்டங்களாகப் பிறந்து புழுக்கின்றன.

தமிழ் மொழி வளமுடையது. கவிதைக்கு வாய்ப்பான மொழியுங்கூட. இதன் இலக்கண அமைதி கவிதைக்கு ஒருபோதுந் தடையாய் இருந்ததில்லை. இந்த நுட்பத்தை அறியாதவர் — தமிழின் இலக்கண அமைதியை உணராதவர் — அதனைக் கற்றுக் கொள்வதிலே அக்கறையும் பொறுமையும் அற்றவர், 'இலக்கணம் வேண்டாம்; அது கவிஞனுடைய சுதந்திரத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கின்றது' என்று போலி நியாயம் சோடித்து, பொதுமக்களை ஏமாற்றி, போலிச் சரக்கை அசல் சரக்கு என்று சொல்லி விற்பனை செய்ய முயல்கின்றனர். இந்த அவல நிலையை நாம் காணும் போது 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை' எனத் தொடங்கும் படிக்காசுப் புலவரின் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது. இதைக் குறிப்பதினால் பழைய இலக்கண அமைதிகளை அப்படியே பேணுதல் வேண்டுக் என்ற மதத்தினருக்காக நான் வழக்குரைப்பதாகக் கொள்ளத் தேவையில்லை. மொழி சதா வளர்ந்து கொண்டிருக்கின்றது மனித அறிவுகளும் சிந்தனைப் பாங்கங்களும் துரித வளர்ச்சிகளும் மாற்றங்களும் அடைந்து வரும் பொழுது, கவிதை வடிவங்களிலும் புதிய அமைதிகளும் சுருதிகளும் வந்து பொருந்தி வளமும் வனப்பும் ஊட்டுதல் தக்கது அன்று தொட்டு இன்றுவரை தமிழ்ச் செய்யுள் அடைந்துள்ள வளர்ச்சி இந்த உண்மையை எண்பிக்கும். ஆனல், அவற்றிற்கும் புதிய இலக்கண அமைதிகளும் நேர்த்தியாகத் தேறும் என்பதை நாம் மறந்து விடலாகாது.

கவியரங்குகள் பெருகட்டும். உளமார வரவேற்போம். ஆனல் நல்ல வல்ல புலமை துலங்குவதற்கும்

போலிப் புலமை மழுங்குவதற்கும் அவை துணை நிற்றல் வேண்டும். 'கவிதை என்றால் என்ன? கவிதையின் உயிர்ப்பு என்ன? கவிதை இலக்கணம் என்ன? கவிதையின் தனிப் பண்புகள் என்ன? பயன் என்ன? புதிய தேவைகள் எவை? ஏன்? இவற்றிற்குத் தோதான புதிய மாற்றங்கள் என்ன?' - இவை போன்ற ஆராய்ச்சிகளும் கவியரங்கங்களில் நடைபெறுதல் சேமமெனத் தோன்றுகின்றது. அத்தகைய ஆராய்ச்சிகளாலே கவிதை பற்றியும், கவிதை நயப்புப் பற்றியும் பொது மக்கள் உண்மையான தரிசனம் பெறுவர். நல்ல கவிதைகள் தோன்றுவதற்கும், நாட்டிலே அவை பொது மக்களின் உள்ளத்தை வளப்படுத்துவதற்கும் இத்தகைய உவப்பான சூழ்நிலை உருவாகுதல் ஏற்றது.

இத்தகைய உவப்பான சூழ்நிலையை உருவாக்க உழைக்கும் கவிஞர்களிலே கந்தவனம் முன்னணியில் நின்றுழைத்தல் பாராட்டிற்குரிய சங்கதி. கவியரங்கங்களிலே கந்தவனம் எவ்வாறு சிரத்தையுடன் கவிதைப் பணியாற்றுகின்றார் என்பதை நிறுவ இந் நூல் உதவுகின்றது.

கந்தவனத்தின் பண்பு அத்தகையது. அவர் பழைமையிலும் மரபிலுங் காலூன்றி நிற்கின்றார். அதே வேளையில், புதிய மாற்றங்களை அங்கீகரிக்காத பண்டித மனப்பான்மையை அவர் வாலாயப்படுத்தவும் இல்லை. ஓசை அமைதிக்கு முக்கியத்துவங் கொடுப்பதற்காக, இலக்கண அமைதியைத் தளர்த்த அவர் பின்னிற்கவில்லை. கவியரங்கிற்காகச் செய்யுள் புனையப்படுகின்றது என்பதையும், கேட்குநருடைய செவிப்புல இன்பத்தையும் மனத்திற் கொண்டு, இலக்கண அமைதிகளை மீறுவதிலும் அவர் ஓர் அமைதியினைப் பேணுகின்றார். ஓசை நோக்கியும், கவியரங்கங்களின் சூழ்நிலை கருதியும் பிராந்திய வழக்குகளைக் கந்தவனம் கையாளுவ

திலே ஒரு நயம் இருக்கின்றது. எளரும் தமிழின் சக்தியைப் பயன்படுத்தக் கவிஞர் முந்துகின்றார். அதே சமயம் முகங்காட்டி மறையும் போலி நாகரிகங்களைப் பயில்வோரைக் காணும் பொழுது கவிஞரின் நெஞ்சு குமுறுகின்றது. அவருடைய தமிழ்ப் பற்றுத் தூயது. தமிழ் மணங் கமழ்வது. சமுதாயத்தின் கோணல் மாணல்களை அவர் அங்கதச் சுவையுடன் சாடும் பாங்கம் கொள்ளை இன்பத்தினைப் பயக்க வல்லது. தமிழ்ச் சுவையின் காரணமாக அவரைக் கவியரங்கங்களிலே அடிக்கடி பார்க்கவும், தமக்கென அவர் வகுத்து வளர்த்துள்ள தனித்துவப் பாணியிலே கவிதைசளை அவரே மொழியக் கேட்கவும் என் மனம் அவாக் கொள்ளும்.

ஓரிரு ஆண்டு இடைவேளைக்குப் பின்னர், சென்ற சித்திரைத் திங்களில், மணிபல்லவக் கலாமன்றத்தினர் நயினாதீவில் ஒழுங்கு செய்த கவியரங்கத்திலே கந்தவனத்தின் கவிதைகளை நுகர்ந்தநுபவிக்கும் வாய்ப்பு எனக்கு மீண்டுங் கிட்டியது. கவியரங்கிலே கவி மொழியும் வித்தையிலே அவர் பெற்றிருக்கும் உயர்ச்சியும் வளர்ச்சியும் என்னை வியப்பிலும் ஆனந்தத்திலும் ஆழ்த்தின. 'கவியரங்கக் கவிதைகளை வளப்படுத்தியவன் நீ ஒருவன்' என்று உளமாரப்பாராட்டினேன்.

ஈழநாட்டின் பல்வேறு இடங்களிலே, பல்வேறு சந்தர்ப்பங்களிலே, கவிஞர் கந்தவனம் மொழிந்த பதினாறு கவிதைகள் இந்தத் தொகை நூலிலே இடம் பெறுகின்றன. களம் காலம் ஆகியன பற்றிய விபரங்கள் ஒவ்வொரு கவிதையின் அடியிலும் சிரத்தையுடன் தரப்பட்டுள்ளன. அவை கந்தவனத்தின் கவியரங்க வளர்ச்சியை அறிந்து மகிழ்வதற்கு உதவும். அவர் இன்று அடைந்துள்ள முதிர்ச்சியின் — நான் அன்று

நயினாதீவிலே கேட்டநுபவித்த முதிர்ச்சியின் — தரிசனத்தை இனி வரப்போகும் அவருடைய நூல்கள் மேலும் நிறுவும்.

'கவிஞர் கந்தவனத்தின் மேடைக் கவிதைகளைக் கற்போருக்கு ஓர் எச்சரிக்கை செய்தல் அவசியம். மேடைக் கவிதைகள் நூலுருப் பெறும்பொழுது அவற்றின் 'கம்பீரம்' சற்றே குன்றிவிடுகிறது. கவிஞனின் குரல், கவிமொழிந்திடும் பான்மை, கவிஞனின் தோற்றம், குழுமியுள்ளோரின் மனநிலை ஆகியன ஒன்று சேர்ந்து மேடைக் கவிதைக்கு ஒருவகை மெருகும், வனப்பும், கம்பீரமும் ஊட்டுகின்றன. ஏட்டில் அதே கவிதை இடம்பெறும் பொழுது, சொல்லும், நயமும், கருத்தும் மட்டுமே சுவை நல்குகின்றன. கவிஞர் கந்தவனத்தின் கம்பீரமான குரலையும், 'கணி'ரென்று கவி மொழியும் ஆற்றலையும் மனதிற் கொண்டு வாசித்தால் மட்டுமே இக்கவிதைகளின் முழுச் சுவையையும் நுகர முடியும்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் மலைநாட்டு எழுத்தாளர் இர. சிவலிங்கம் ஆற்றுப்படுத்தினார். இதனைச் சுவைஞர் கருத்திற் கொள்ளுதல் தக்கது.

கவிஞர் கந்தவனத்தின் தமிழ்ப் பணி தொடர்க.

எஸ். பொன்னுத்துரை

மட்டக்களப்பு,
2. 10 72.

# ஏனிந்தப் பெருமூச்சு?

## வணக்கம்

மன்னும் உலகத்தில்
வளமார் செம்மொழிகள்
மாண்டு மடங்கிவிட
மாருய் நம்மொழியாள்
இன்னும் இருக்கின்ருள்
என்றும் இருப்பாளே
என்னே ஓ! விந்தை
ஈன்றும் பல மொழிகள்
கன்னித் தமிழாகக்
கடவுள் மொழியாக
கரையிற் கடலாக
கார்மே கம்போல
கன்னல் அமிழ்தாகக்
கள்ளுக் கனிச் சோலைக்,
களிக்கும் வண்டாகும்
கற்ருேர் விருந்தாக

கண்ணின் மணியாகக்
காணும் பொருளாகக்
காக்கும் உயிராகப்
பூக்கும் உடலாக
எண்ணும் நினைவாக
இன்ப மனையாக
இணையிற் கலையாக
இயக்கம் மூன்றாக
விண்ணின் விழியாக
விளங்கும் மதியாக
வீற்றே இருக்கின்றாள்
வீணர் குறிவைத்தே
பண்ணும் பயனில்லாப்
பாழும் செயலெல்லாம்
பண்பாய்ப் பொறுத்தென்றும்
பாரில் உயர்ந்தோங்கித் —

தன்னைத் தனியாகத்
தானே புகழோடு
தக்கார் பலதந்து
தாங்கிச் செல்கின்ற
அன்னை தமிழுக்கும்
அவையின் சுவையூட்டும்
அறிவுத் தலைவிக்கும்
ஆற்றற் பெரியோர்க்கும்
என்னைக் குறைவின்றி
எல்லா வழியாலும்

இனிதே பயனுக்கி
இன்பம் பெறுகென்னும்
தென்னைக் குணத்தாலே
தெரிவிக் கின்றேனென்
செந்நீர் களித்தாடச்
செம்மை வணக்கத்தை!

## மிக நன்றி

முட்டி வானத்தை
மொய்த்துத் தழுவும்பல்
முகட்டு மலைக்கூட்டம்
முழுக்க நிறைந்தாகா
கட்டிக் கண்பார்வை
கருத்தைக் கவர்ந்துள்ளம்
களிக்கச் செய்கின்ற
கவினுர் தண்காட்சி
கொட்டு கொட்டென்று
கொட்டி இயற்கைத்தாய்
கொஞ்சித் தான்பெற்ற
குழவி அழகோடு
மட்டில் மகிழ்வெய்தும்
மாண்புத் தமிழன்பர்
மானத் தமிழ்வீரர்
மாடாய் உழைத்தீழ—

நாடு செழித்தோங்க
நன்றாய் வழிகோலும்
நல்லார் வல்லார்கள்
நாட்டிற் சிலவீணர்
பேடி களைப்போல
பேயர் பித்தர்போல்
பிதற்றும் பழிச்சொல்லைப்
பெரிதாய்க் கருதாமல்
ஓடும் மீன்விட்டு
உறுமீன் வரும்வேளை
வாடும் கொக்காகக்
கூடும் நற்காலம்
நாடி இருப்பாரிந்
நாட்டார் வளத்திற்கு
நாளும் உயிராகும்
நம்மோர் வாழ்கின்ற—

அட்டன் நகரத்தில்
அம்மே ளிலப்பள்ளி
ஆற்றும் விழாக்கூட்டும்
அறிஞர் அவையேறி
சிட்டுக் குருவிப்பேர்ச்
சிந்தைக் கவிமூவீர்
கட்டிக் கவிகாட்டும்
கெட்டித் தனமென்று
தொட்டெடம் உள்ளத்தைத்
தோழர் திருச்செந்தூர்

தோன்றல் சிவலிங்கம்
தூண்டில் போட்டிங்கே
கட்டிக் கொணர்ந் திட்டார்
காட்டும் கலையன்புக்
கரும்புக் கனித்தேனிற்
களித்தோம் மிகநன்றி!

## புதிய செயல்

விதியும் ஒன்றிட்டார்
விழாநாள் அன்றேதான்
விரிப்போம் தலைப்பென்றார்
வியந்தோம் அல்லோம்நாம்
புதிது செயலென்றே
புரிவார் தமைநன்றாய்ப்
பூக்கும் நெஞ்சோடு
புகழ்ந்தோம் ஏனென்றால்
இதுபோல் ஒருபோதும்
ஈழக் கவியாளர்
இழுக்கப் படவில்லை
இயற்றக் கவிமேடை
எதுதான் என்றாலும்
எமக்கென் னென்றேநாம்
இருந்தோம் இருக்கின்றாள்
இன்பக் கலைவாணி!

## கவிஞர் இயல்பு

ஒன்றிவ் வரங்கத்தில்
உரைக்க விழைகின்றேன்
உணர்வீர் அன்பர்காள்
உண்மை சென்றெண்ணிக்
கன்று வாய்வைக்கின்
காணும் தாய்ப்பாலை
கவிஞர் அதுபோலே
கருதின் கலைத்தாயும்
என்றும் இரங்கித்தன்
இன்பப் பால்வார்ப்பாள்
கொன்று பிழிந்தாற்றூன்
கொடுக்கும் கரும்பல்லர்
என்றெவ் வாறெதுவென்
இவைகள் அவ்வப்போ
நின்றே யாட்கொள்ளும்
நிலைமைக் குள்ளாகும்!

துங்கப் பெருமுண்மை
துலங்க உலகத்தார்
துன்பக் குறையாவும்
துடைத்தே எந்நாளும்
எங்கும் எழிலின்பம்
இலங்க வழிகோலி
ஏற்றம் படைத்தென்றும்
இனிதாய் நிலைக்கின்ற

தங்கக் கவிபாடத்
தண்சூழல்வேண்டும்
தனியாய் மனம்சென்று
சரியாய்ப் பொருள்கொண்டு
பொங்கும் உணர்வெல்லாம்
பொதியிற் தரவல்ல
பொழுதும் மனப்போக்கும்
போற்றும்படி வேண்டும்!

இங்கே வாஇந்தா
இதுதான் தலைப்பிப்போ
இயற்று கவியென்றால்
இயற்றாமலும் போவார்
தங்கும் நிலைக்கேற்பத்
தலைமைக் கவியாரும்
சாற்றும் கவிஎன்ன
சந்தைப் பொருளாமோ?
பொங்கும் கடலேனும்
பொங்கா தெப்போதும்
பொழியும் மழையேனும்
பொழியா தெப்போதும்
திங்கள் முழுதாகத்
திகழா தென்றென்றும்
சிறப்புக் கவியாரும்
சிறக்கார் எப்போதும்!

# இட்ட தலைப்பு

அப்பா அடடா ஊ
அளந்தேன் நெடுநேரம்
அவையின் பெரியோரே
அடியேன் மன்னிப்பு
இப்போ இவரிங்கே
இயற்றும் கவிஎன்று
இட்ட தலைப்பீது
"ஏனிப் பெருமூச்சு"
தப்போ சரியோநான்
தருமிவ் விடைதன்னைத்
தயவாய்க் கேட்டாய்க
தாங்கும் உளத்தோடு!
முப்பாற் றமிழ்த்தாயும்
மூத்தோர் குடியாரும்
முயன்றே வீச்சாக
மூச்சாய் ஓங்கட்டும்!

## ஏனிந்தப் பெருமூச்சு?

ஏனிந்தப் பெருமுச்சு
ஏனிந்த வசைவீச்சு
ஏனிந்த வெளிப்பூச்சு
ஏனிந்த ஏமாற்றம்
ஏனிந்த இடர்வாழ்வு
ஏனிந்த இழிவான
மானம்போம் மயக்கங்கள்
மக்காள்நீர் சிந்திப்பீர்!

தோட்டத்துத் தொழிலாளர்
சோராத பெரு வீரர்
நாட்டிற்பல் லாண்டாக
நாட்டாத தொழிலில்லை
ஈட்டிப்பல் வழியாலே
இருப்புக்குப் பொருள் தந்து
வீட்டுக்கு விளக்காக
விளங்கும்நம் உயிரானோர்—

காடென்றும் வீடென்றும்
கல்லென்றும் முள்ளென்றும்
பாடெல்லாம் பட்டிங்கே
பகலென்றும் இரவென்றும்

மாடாக உழைக்கின்றார்
மணிநேரம் ஓய்வில்லை
நாடெல்லாம் தேன்பாய
நடுகின்றார் முதற்கல்லை!

காற்றென்றோ மழையென்றோ
கடும்வெயிற் களைப்பென்றோ
கூற்றென்றுங் கூறாதார்
குன்றாத வலுவுள்ளார்
நூற்றுப்பல் லாண்டாக
நோகாது நோக்கோடு
ஆற்றிப்பல் ஆக்கங்கள்
அயராது செய்திட்டார்!

ஊனாலும் உயிராலும்
உழைக்கின்றார் கண்டிட்டோம்
ஆனாலும் பாருங்கள்
அவர்க்காக ஏதேனும்
மேனாளில் இந்நாளில்
மேலாக யாரேனும்
ஆனவாய் செய்தாரா
அதனாலே பெருமூச்சு!

தலைவர்கள் சரியில்லை
சரியான வழியில்லைக்

குலை வெங்கள் குடும்பங்கள்
குடைகின்றார் குடைகின்றார்
நிலைமைநீர் எழுத்தாகும்
நீங்காத துயராகும்
அலைவன்றோ உலைவன்றோ?
அதனாலே பெருமூச்சு!

கருமைக்கும் கருமைமூ
கண்றாவி வாழ்வந்தோ!
உரிமைக்கும் இடமில்லை
உறவுக்கும் இடமில்லை
பெருமைக்கும் வழியில்லை
பெரிதாய்ஓர் ஒளியில்லை!
அருமையிவ் வாழ்வென்றார்
அதனாலே பெருமூச்சு!

காட்டுக்குள் விலங்கும்மேல்
கானல்நீர் எண்ணங்கள்
சாட்டுக்கு வாழ்கின்றோம்
சாகாமற் சாகின்றோம்
கூட்டுக்குட் கிளியானோம்
குருடர்போல் தவிக்கின்றோம்
வீட்டுக்கு வாருங்கள்
விளங்கும்நம் பெருமூச்சு!

''கல்லைத்தான், மண்ணைத்தான்,
காய்ச்சித்தான் குடிக்கத்தான்''
புல்லைத்தான், பூண்டைத்தான்
பொசுக்கித்தான் புசிக்கத்தான்
தொல்லைதீர் கடவுள்தான்
சொல்லித்தான் தந்தானா?
அல்லற்பட் டாற்றாது
அழுகின்றோம் அம்மூச்சு!

ஒன்றல்ல இரண்டல்ல
ஒருகோடி துன்பங்கள்
இன்றல்ல நேற்றல்ல
ஏறும்பல் ஆண்டாக
நின்றெம்மை அறுக்கின்ற
நீலிப்பேய்ச் செயல்கோடி
ஒன்றாகக் கொன்றாலும்
ஒழியாத பெருமூச்சு!

## வேறு

ஏக்கமுற்ற எங்களாரை
ஏற்றிவைக்கும் மூச்சிது!
நோக்கமற்ற போக்குக்கண்டு
நொந்தெழுந்த மூச்சிது!

ஊக்கந்தந்து ஆக்கம்காண
உருவெடுத்த மூச்சிது!
தூக்கம்போக்கித் தூக்கிவைக்கும்
தூயவீர மூச்சிது!!

அட்டன்
ஹைலண்ட்ஸ் கல்லூரித்
தமிழ் விழா,
16-3-1963.

## வணக்கம்

பெரியோரே எனதன்புக்
குரியோரே வணக்கங்கள்!

வீச்சான நினைவெல்லாம்
மூச்சான கவியாக்கிப்
பேர்பெற்ற பாரதிக்குச்
சீர்பெற்ற மாத்தளையில்
ஏற்றவொரு விழாவெடுத்துப்
போற்றியதில் அவன்வழியில்
வாழ்ந்துவரும் வான்கவிஞர்
ஆழ்ந்தவனை அறிந்ததினால்
முதன்முறையாய் இந்நகரில்
இதமுடனே இடம்பெறும்பேர்க்
கவியரங்கால் அவனுணர்வைப்
புவியரங்கிற் பரப்பிவிடத்
தலைமையினைத் தாங்குமென்று
கலைநண்பர் பணித்துவிட்டார்!

அன்னவர்க்கு என்னுடைய
இன்னமுதப் பெருநன்றி!

தும்பிக்கை யான்தாளில்
நம்பிக்கை கொண்டிங்கே
முன்கவியாய் முத்தமிழீர்
என்கவிதை எடுக்கின்றேன்—

## பாரதி

பாரதிதான் பாமரரைப்
படித்துக் கொண்டான்
பாரதிதான் எளிமையினைப்
படைத்துத் தந்தான்
பாரதிதான் பொதுவுடைமைப்
பாதை கண்டான்
பாரதிதான் பாரதிதான்
பாரில் என்றே
பாரதிரக் கலவாய்போற்
பலவாய் நாளும்
பாரதியின் பேருதிரப்
பகட்டுக் கொள்கை
ஊரெதிரில் விரித்திட்டார்
உணர்ந்தோர் என்போர்
பாரதியார் உண்மையினைப்
பார்ப்பீர் இன்றே!

## வேறு

ஓலம் ஒழித்திடுவீர் — பாரதி
உண்மை இயல்பிதுதான்
சாலத் தெரிந்திடுவீர் — கருத்தினைச்
சார்புகள் ஏதுமின்றி!
காலத்தில் ஊறியொரு — கவிநடை
கண்டு கருத்துக்களைக்
கோலக் கவிதைகளில் —உறுதிகைக்
கொண்டு பொழிந்துவிட்டான்!

இந்தத் தனியியல்பே — அவன்பெயர்
ஏற்றி வளர்ப்பதுவாம்
மந்த அறிவுகொண்டு — அவன்திறம்
மாறிப் புரிந்ததும் ஏன்?
சிந்தை விரிந்தவர்க்கு — எளிமையும்
சீரிய வேறியல்பும்
முந்தி இருந்தபெரும் — புலவரில்
முற்றுறக் கண்டிடலாம்.

என்ன இருந்திடினும் — கதைகளை
எப்படிக் கட்டிடினும்
முன்ன மிருந்தவரைப் — பாரதி
மூடி மறைக்கவில்லை!

சொன்ன உரைகளிலே — அவன்திறன்
சொட்டும் அழகினைநான்
இன்னும் சிலசிறிதாய் — இவ்விடம்
இப்படிக் கூறிடுவேன் —

## வேறு

பாரை அதிர வைத்து
ஊரை உணர்ந்து செத்த
பேரை எழுப்பி விட்டவன் — மிக்க
நீரைக் கிழித்து நின்று
வீரம் கொழித்து வென்று
வேரை இறுக்கி விட்டவன் — தக்க
கூரை சிறக்க வைத்தவன்!

ஒட்டிக் கவிகள் நிதம்
கட்டுங் கவிஞர் தமைக்
குட்டிக் குழப்பி விட்டவன் — ஆயின்
சட்டம் பிறந்து நிற்கக்
கட்டுஞ் சிறந்து பொற்புப்
பட்டுக் கவிகள் கட்டினன் — வாயின்
மெட்டுக் கவைகள் கொட்டினன்!

விந்தை மனிதர் களின்
கந்தல் கதைகள் தள்ளிச்

சிந்தை துணிந்து எண்ணினான் — புரியச்
சந்தம் பிரித்து வல்ல
முந்தும் நடையில் நல்ல
தந்தக் கவிகள் தந்தவன் — அரிய
சொந்தச் சுவை பரப்பினான்!

உற்ற நிலை தெரிந்து
பற்றி வயி றெரிந்து
சற்றும் பொறுத்தி டாதவன் — நொந்து
சுற்றும் உணர்ச்சி தனில்
முற்றும் முழுகி யதன்
பெற்றி கவியிற் கட்டினான் — சொந்த
வெற்றி முழக்க எட்டினான்!

கண்ணுக் கெதிரி லுள்ள
புண்ணைக் களைய மருந்
தெண்ணித் துணிந்து விட்டவன் — பொங்கு
கண்ணன் அருள் தெரிந்து
பெண்ணின் பொருள் புரிந்து
மண்ணுக் குகந்த செய்கைகள் — இங்கு
பண்ணும் எனக்க தறிஞன்!

கருமை கழற்றி விட
உரிமை உரிமை என்று
குரலைக் கொடுத்து நின்றவன் — உற்ற
பெருமை விளக்கி யதன்

அருமை புகட்டி அட
ஒருமை ஒருமை என்றவன் — எற்றி
எருமைத் தனத்தைக் கொன்றனன்!

மொழியைப் புறக் கணித்து
பழியைச் சுமந்து கொண்டு
குழியிற் கிடந்த பேயரை — தட்டி
எழுமின் எழுமின் என்று
விழியைக் கொடுத்து நின்று
வழியை வகுத்து வைத்தனன் — பட்ட
எழிலைப் படைத்துத் தந்தவன்!

நிலையை உணர்த்தி மக்கள்
தலையை நிமிர்த்தித் தமிழ்க்
கலையை வளர்க்கப் பாரதி — உள்ள
மலையின் உறுதித் திறன்
சிலையிற் பயன் படுத்திப்
புலையர் புழுத்த செயலார் — கள்ள
வலையைக் கொளுத்தி விட்டவன்!

போற்றும் அவன் உணர்ச்சி
போற்றும் அவன் கிளர்ச்சி
போற்றும் புரியும் நடையை — கற்றுப்
போற்றும் அவன் துணிச்சல்
போற்றி அவன் கனவை
ஆற்றும் செயலில் என்கிறேன் — மற்றச்
சேற்றுக் கதைகள் நமக்கேன்?

## கைகயை யாவது . . .

முடிந்த தென்னுரை
முழுக்கக் கூறினல்
விடிந்தும் மீறிடும்
விட்டு நண்பரைப்
படிந்த கொள்கையைப்
பகர இவ்விடம்
மடிந்த ழைக்கநான்
மகிழ்வு கொள்கிறேன்.

அந்த நாட்களில்
ஆன்ற புலவர்கள்
வெந்து பாடிலென்
விரும்பிப் பாடிலென்
தந்த யானைகள்
தக்க பரிசுகள்
தந்த வள்ளல்கள்
தகைமை கண்டுநாம் —

சிந்தை களிக்கிருேம்
சிறக்கப் பேசுவோம்
இந்த நாட்களில்
எம்மை யாரிவண்
முந்தி வாழ்த்துவார்
முயல ஊக்குவார்
சந்து பொந்தினில்
தவண்டை அடிக்கிருேம்!

ஒன்று செய்யுமின்
ஒருவ ரொருவராய்
என்றன் நண்பர்கள்
ஏற்ற பொருள்களை
நன்று கூறிட
நயந்து கேட்டபின்
ஒன்றி யுங்களின்
உவகை காட்டிடக் —

கையை யாவது
கருணை மக்களே
உய்யக் கவிஞர்கள்
ஓங்கித் தட்டுமின்
வைய நல்லறம்
வாழ்வ தவர்களால்
செய்யு மாக்கமும்
சேர்வ தவர்களால்!

## முடிவாக

என்ன யான்முடி வாக இயம்புவேன்
இங்கு கூடிய இன்றமிழ் மக்களே
தன்னைத் தானறி யாதத மிழனும்
தக்க மானத்தை விற்குந்த மிழனும்
உன்னி ஓர்கணம் ஒற்றுமைப் பண்பினை
உணர்ந்தி டாத உளுத்தரும் உணர்ச்சிகள்

இன்னு மின்றி இழிவுப் பிணங்களாய்
இருப்பின் பாரதி பாடலை இன்றைக்கே—

சென்று ஊன்றிப்ப டித்திடின் செம்மையாய்ச்
சேருங் கையுடன் செந்தமிழ் மானமே
அன்று பாரதி சொன்ன அருமொழி
இன்று மப்படி யேஎமக் காகுமாம்
நன்று யாவுமென் நண்பர் நவின்றதை
நயந்து கேட்டிருந் தேநல மெய்தினீர்
நன்றி யாவர்க்கும் நற்றமிழ் வாழ்கவே
சென்று நான்வரு வேனின்வ ணக்கமே!

மாத்தளை இலக்கிய வட்டம்
பாரதி விழா,
புனித தோமையர் கல்லூரி
6-10-1963.

# கனவுலகம்

## அவையடக்கம்

காவல் மிகச்செய்து
    கவிதை உலகத்தின்
  கற்பைநிலை நாட்டிக்
    கற்றோர் புகழ்ந்தேற்றும்
பாவிற் பெரியோனைப்
    படைத்துச் 'சிலம்பொலி'யைப்
  பாங்கிற் றிகழ்கின்ற
    பண்பு வழிகாட்டும்
'நாவற் குழி'யூரோய்!
    நட்புக் கவிஞர்காள்!
  நற்பே ரறிஞர்காள்!
    நாட்டின் நலமெண்ணி
ஆவல் மிகமுந்தி
    ஆற்றுஞ்செயற் பெரியீர்!
  அவையின் மற்றன்பீர்!
    அழகுத் தமிழ் வணக்கம்!

## நன்றி

செங்குந்த இந்துசெந்
தமிழ்போற்றும் விழாச்சபைச்
செயலாளர் நண்பர் சிற்பி
பொங்கும்நல் அன்புடன்
புரிந்தேற்றி என்திறன்
புகழ்மிக்க இவ்வி ழாவில்
பங்கொன்றைத் தந்தனர்
பாட்டாலே என்கனுப்
படைக்கின்ற உலகு பாட
அங்கச்செந் நீர்மகிழ்ந்
தார்த்தாட விழாச்சபை
அன்பர்க்கு இனிய நன்றி!

## என்னுரை

கலியாணத் தடல்புடல்
கவனத்தை ஈர்த்தால்
கவிகட்ட ஏற்ற நேரம்
மலிவாகக் கண்டிலேன்
மணக்கோலம் மாறிடா
மயிலென்னைக் கொன்ற போதும்
சலியாது பெற்றநல்
தகவான பயிற்சியாற்
சரியாகச் சிந்தை வென்று
பொலிவாகப் புனைந்தபாப்
பொருள்கண்டு வாழ்வினிற்
போற்றினுற் போதும் வெற்றி!

## கடவுள் வணக்கம்

பணிவு தந்தாய் நல்ல
பண்பு தந்தாய் யாவும்
படிக்க வைத்தாய் உன்னைப்
பிடிக்க வைத்தாய்
துணிவு தந்தாய் உள்ளத்
தூய்மை தந்தாய் நின்று
தூக்கி விட்டாய் என்னை
ஆக்கி விட்டாய்
அணுக விட்டாய் பொருளை
அறிய விட்டாய் உண்மை
ஆய வைத்தாய் நுண்மை
தோய வைத்தாய்
பணிய வைக்க உண்மைப்
பாக்க ளினால் இந்தப்
பாரினைக் காரென்னைப்
பிள்ளை யாரே!

## கனவுலகம்

விடுப்பின்றி நொடிப்பின்றி
விண்ணுணக் கதையின்றி
விளையாட்டிற் சென்றாலும்
விழற்பேச ஆளின்றி

எடுப்பின்றித் தொடுப்பின்றி
இயல்பான தலைகெட்டு
எடையேறும் வீம்பின்றி
ஏமாற்றச் செயல்விட்டு
நடிப்பின்றி அடிப்பின்றி
நரியற்குப் பெயர்பட்டு
நம்மக்கள் நாள்தோறும்
நன்றாகத் தாம்கற்ற
படிப்பொன்றிப் பார்போற்றப்
பண்போடு மன்போடும்
பழகாரோ கனவிங்கு
பயன்காணப் பலிக்காதோ?

வெறியாடி விசரர்போல்
விடிவின்றி வாழாது
வெகுளாது வெஃகாது
வெருவந்த செய்யாது
அறிவோடு அடக்கத்தோ
டருள்கொண்டு மருள்கொன்று
அழுக்காறு இன்னாச்சொல்
அவாவின்றி அறவாழ்வில்
நெறிநின்று பொறிவென்று
நேர்ப்பாதை நினைவோடு
நிகரற்ற நிலையான
நிறைவான முறையான

குறிகொண்ட குறள்வாழ்க்கை
கொடிகட்டிப் பறக்காதோ
குறையேது மில்லாத
குலமொன்று பிறக்காதோ?
பறைகொட்டிப் பலகற்றும்
பகட்டான பாழ்வாழ்வில்
பறந்தோடும் பதட்டத்தால்
நம்முன்னோர் கறந்திட்ட
முறைவிட்டுத் தாம்பெற்ற
முயற்குக்கால் மூன்றென்று
முழுமூச்சாய் வழக்காடும்
முழுப்பேயர் முதலாக
மறைவொட்டி மற்றோரை
முற்றாக மண்ணாக்கி
மகிழ்வோடு தாம்மட்டும்
வாழ்கின்ற கொடியோரும்
கறைபட்டுந் திருந்தாத
மடயோரும் கடையோரும்
கையோடு கட்டோடு
கட்டையிலே போகாரோ!

நல்லாராய் மட்டும்நாம்
நடந்திட்டாற் போதாது
நலிவுக்கும் மெலிவுக்கும்
அலைவுக்கும் காலாகும்
பொல்லாரைப் புலையோரைப்
புலிப்போலப் பொடியாக்கி

பொருளோடு சிந்தித்துப்
பொன்றாத துணிவோடு
வல்லாராய்த் திட்டங்கள்
வகுத்திங்கே வடிவாக
வளர்ச்சிக்குத் தடையாகும்
வழியாவும் விழிப்போடு
கொல்லாரோ வெல்லாரோ
குறிக்கோள்கள் நிலைநாட்டிச்
செல்லாரோ வினைகோடி
செய்யாரோ உய்யாரோ!

ஊக்கத்தால் உணர்வாலே
உழைப்பாலே உயர்வான
நோக்கத்தால் நுடங்காது
நொடியொன்றில் நமக்குள்ள
ஏக்கத்தை இடர்ப்பாட்டை
இருள்வாழ்வைப் பொறுப்பின்றி
எனக்கென்ன உனக்கென்ன
எனும்போக்கில் இருப்போரின்
தூக்கத்தைத் தோள்கொட்டித்
துடைத்துள்ள திறனெல்லாம்
தொகுத்துப்பல் தொழிலாலே
துடிப்போடு நிலையான
ஆக்கங்கள் அழகாக
அளவின்றித் தரவல்ல
ஆற்றல்வாய்ந் தோராட்சி
அந்தோநான் காணேனே?

அலைகின்றார் நம்மோர்கள்
ஆளுக்கோர் வழிசென்றே
அருகில்வான் மதிகூட
அணுகிற்று இவர்பாடோ
உலைகின்றார் சாதியிலே
வேற்றுமைகள் உருவாக்கி
உயர்வில்லை இனமெல்லாம்
ஒன்றென்னும் உணர்வில்லை
மலைகின்றார் மடிகின்றார்
பிரிவாலே மாக்கள்சீ!
மதிப்பில்லை உலகத்தார்
மடப்பட்டம் தரலானார்
குலைவின்றி இனமொன்றிக்
கூட்டாகக் குலமோங்கக்
குடையொன்றின் கீழ்வாழ்க்கை
குடும்பம்போற் கொள்ளாரோ?

குடிக்கின்றார் குடிக்கின்றார்
நம்மைத்தான் குடிக்கின்றார்
குலமொன்றைப் பதினெட்டாய்க்
குலைக்கின்றார் கலைக்கின்றார்
அடிக்கின்றார் அடிக்கின்றார்
மண்ணைத்தான் அடிக்கின்றார்
"ஆ"வென்று கைநோக
அழுகின்றார் விழுகின்றார்
கடிக்கின்றார் கடிக்கின்றார்
தம்கைதான் கடிக்கின்றார்

துடிக்கின்றார் துவள்கின்றார்
படுக்கின்றார் படுநோயில்
கெடுக்கின்றார் தமிழ்மானம்
முடிக்கின்றார் புகழ்யாவும்
படிக்கின்றார் படிக்கின்றார்
என்னத்தைப் படிக்கின்றார்?

பையத்தான் திறக்குங்கண்
பயனில்லை வருங்காலம்
பாழாகும் இப்போதே
படர்கின்ற நிலையிங்கு
உய்யத்தான் புரியாரோ
உடன்உண்மை தெரியாரோ
உயிர்மானம் விற்றிங்கே
ஓட்டார்பின் ஓடேந்தி
நையத்தான் புடைத்தாலும்
நாமார்க்குங் குடியென்று
நங்கூரம் இடுகின்ற
நாணற்ற குணங்கொன்று
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்தெங்கள் வண்டமிழர்
தெய்வம்போற் திகழாரோ
திசையெல்லாம் புகழாதோ!

சீறாரோ சான்றோர்கள்
நீறாக முறைகேடு
திறக்காரோ தம்கண்கள்
சிறக்காரோ செயற்பட்டு

ஊறுதோ எல்லோரும்
ஒன்றென்னும் பெருநோக்கம்
உணராரோ வருங்காலம்
ஒழியாரோ விழற்கோலம்
பாறுதோ அடியோடு
பைந்தமிழர் படுந்துன்பம்
பண்பில்லாப் பகையென்றுற்
பாய்ந்தோடி ஓர்மூச்சில்
நூறுகக் கீறுரோ
நொறுக்காரோ பொசுக்காரோ
ஆறுதோ மனமந்நாள்
ஆகாகா பொன்னுளே!

வளமில்லா மொழிகள்பல்
வல்லாரை ஈன்றன்னர்
வாடாத ஊக்கத்தால்
வளர்ந்தோங்கப் பார்மீதில்
இளநல்லாள் தமிழன்னை
இருந்தாண்டாள் கொடிகட்டி
இறுமாப்பாய் முற்காலம்
இப்போதோ அவள்மக்கள்
பிளவெல்லாம் தலைக்கொண்டார்
பெற்றாளைப் பேணுத
பிழைவிட்டார் பிறகென்ன
பெயர்பட்டு நிலைகெட்டு
அளவில்லாத் துயர்கொண்டாள்
அதற்கிங்கே தம்மைத்தாம்

அறியாத தமிழர்தாம்
அடிக்கல்லாய் அமைந்திட்டார்!

கருவானாள் கன்னித்தாய்
கனவானாள் நினைவானாள்
கலையானாள் கடலானாள்
கடவுள்போல் நிலையானாள்
உருவானாள் உயிருக்கும்
உடலுக்கும் மேலானாள்
உணர்வானாள் ஓமானாள்
ஒண்சுவைகள் ஊற்றானாள்
முருகானாள் உலகத்து
முறையெல்லாம் அவளானாள்
மூன்றானாள் சான்றானாள்
மூச்சானாள் பேச்சானாள்
சரியாய்த்தம் தாய்பற்றித்
தமிழ்மக்கள் புரிவாரோ
தனியாகத் தமிழுக்குத்
தருவாரோ கொலுவொன்று!

## சிந்திப்பீர்

ஊன்தோயும் செந்நீர்நம்
உயர்தமிழில் நீரன்றேல்
நான்காணும் கனவிங்கே
நம்மோரால் நடக்காது

ஏன்காணும் எடுக்கின்றீர்
இழவுக்கிவ் வீண்பேச்சு
என்றென்போல் நோக்குள்ள
இரண்டொருவர் கேட்பாரேல்
நான்கேட்பேன் மறுகேள்வி
நற்றமிழன் முறைபற்றி
நன்ருக நடந்தார்யார்
நடக்கத்தான் வைத்தார்யார்
வான்போற்றும் குறள்பெற்றும்
வடித்தாரா அவ்வாழ்க்கை
வழியுண்டு விழியில்லை
வருகின்றேன் சிந்திப்பீர்!

## வேறு

படித்துவிட்டேன் கவிதை
முடித்துவிட்டேன் செவியை
மடுத்திருந்தீர் நன்றி
அடுத்ததொன்று பொருளைப்
பிடித்திருப்பீர் செயலில்
நடத்துவீரேல் கனவை
வடித்துநிற்பீர் விடையைக்
கொடுத்துவைப்பீர் வணக்கம்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி
செங்குந்த இந்துக் கல்லூரித்
தமிழ் விழா,
12-9-64.

# வள்ளல் நல்லதம்பி

## வணக்கம்

எழுத்தாற் பேச்சால் இன்முகத்தால்
ஏற்றக் கற்றோர் வளர்புகழால்
கொழுத்தாய் வீணாய் இலக்கியத்தைக்
குழப்புங் கூடா மன்மதரை
விழித்தே நெற்றிக் கண்ணினை நீ
வீழ்த்தித் தனியோர் பாதையிலே
பழுத்தாய் வெளவால் படையெடுக்கப்
பயனோ டெழுதும் பொன்னுத்துரை—

அழகுக் கவியால் நம்மவரை
ஆக்கி அருளுங் கவிப்பெரியீர்
வழமை நாட்டில் நிலைத்திருக்க
வாடா துழைக்கும் வல்லவர்காள்
பழமைப் புகழிற் பண்பாட்டில்
பாருக் கெடுத்துக் காட்டாக
அழியா நோக்கம் ஊக்கத்தில்
அயரா உழைப்பில் ஆக்கத்தில் —

தென்னந் தோப்பு மந்திகளின்
        தெரியாத் தனத்தால் இளநீர்போய்ப்
பென்னம் பெரிய கடல்நீரைப்
        பெரிதாய் இனிக்கச் செய்கின்ற
மன்னும் வளமார் நீர்கொழும்பில்
        கன்னல் தமிழிற் களித்துமதம்
கன்னம் பொழியும் ஊரவர்காள்
        களிப்பால் வணக்கஞ் செலுத்துகிறேன்!

பத்தே முக்கால் மணிஇரவு
        பார்த்தார் கவிஞர் இருவரில்லை
வைத்தார் கண்ணை என்தலையில்
        வாப்பா பாடு கவிதையென்றார்
செத்தே னல்லேன் விநாயகரைச்
        சிந்தித் தெழுந்தேன் விறுவிறென்று
முத்தாய் வித்தாய் முகிழ்ந்தவற்றை
        மூச்சாய் வீச்சாய் வடித்துவிட்டேன்!

## பாடேன்; படிக்கின்றேன்

நண்பர் பலரிங்கு
தண்பேர் இசைகட்டி
நன்றாய்க் கவிபாடிச்
சென்றார் சுவைத்திட்டீர்
கானக் குயிலென்று
நானும் பாவித்துக்
கவியை இசைத்திட்டால்

குவியுங் கல்வந்து
அவையில் இருப்போர்கள்
இவனெங் கிருந்துற்ற
கழுதை அருமந்த
பொழுதும் பழுதென்று
போதும் எனமுந்திக்
காதை மிகப்பொத்திப்
பதறிச் சால்வையினை
உதறித் தோளிட்டு
ஓடிப் போவார்கள்
பாடேன் படிக்கின்றேன்.

## வள்ளல் நல்லதம்பி

இண்டைக் கிங்கே நாம்கவிதை
இயம்ப இருந்தால் நல்லதம்பி
பண்டைக் காலப் பாரியைப்போல்
பார்க்கா தள்ளித் தந்திருப்பார்
கண்டத் தொண்டர் இன்முகத்தைக்
களிக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை
உண்டிங் கென்ன உரைப்பதற்கு
உலகம் அறியும் அவர்செயல்கள்!

கொள்ளை அன்பைப் பெய்வதில்நீர்
கொழும்பார் நாளும் உய்வதற்காய்
துள்ளிச் சேவை செய்வதிலே
துடிப்பாய்க் கொடுமை கொய்வதிலே

வள்ளல் நல்ல தம்பியைப்போல்
வாழ்வார் யாரோ எல்லையின்றி
அள்ளி அள்ளி வழங்குவதில்
அவருக் கிணைஇந் நாள்அவர் தான்!

சைவம் தழைக்க நீர்கொழும்பில்
தளரா துழைத்த நல்லதம்பி
வையம் போற்றும் பண்புவழி
வாழ்ந்தார் தனக்கென்றி ல்லாமல்
ஐயோ இறைவா சிவப்பழத்தின்
அருமை காட்டி அழைத்துவிட்டாய்
உய்யும் வழிகள் உருப்படியாய்
ஒன்றுஞ் செய்யத் தெரியவில்லை!

நல்லார் நாட்டில் யாவருக்கும்
நாவில் தவழும் மொழியினிக்கும்
பொல்லாச் சாதி வேற்றுமைகள்
பொசுக்கிக் கசக்கி ஒற்றுமையிற்
செல்லா தோரைச் சேர்த்திழுத்து
சிறக்கத் தமிழர் சேவைசெய்த
வல்லார் இன்றைக் கில்லையென
வாழ்க்கை வெறுப்புத் தட்டுதந்தோ!

தோற்றம் எளிமை ஊரவரின்
துயரைத் துடைக்குந் துணிச்சலுண்டு
சீற்றம் இல்லை எப்பொழுதுஞ்
சிரிப்புக் கதைகள் பயனுதவாச்

சேற்றுச் செயலில் ஈடுபடார்
திறந்த விரிந்த மனம்தமிழர்
ஏற்றம் கனவு நம்மவர்கள்
என்றும் மறவா நல்லதம்பி!

## கனவு பலித்தது

ஆடையில் அக்கறை
சற்றுமில்லை — வெறும்
ஆடம் பரங்கள் பிடிக்கவில்லை
மாடியில் வாழ்ந்து
பதுங்கவில்லை — மக்கள்
வன்துயர் கண்டு ஒதுங்கவில்லை
கோடையைக் கண்டிடும்
பூண்டுகள்போல் — எழுங்
கொடியவர் செத்தனர் அவர்குணத்தால்
பேடியர் யோடியர்
பேயரெல்லாம் — தங்கள்
பெட்டைத் தனம்விடுங் கோயிலுள்ளம்!

சொன்னதைச் சொன்னதைச்
சொட்டுஞ்சுவை — இன்றிச்
சொல்பவ ரல்லர்நம் நல்லதம்பி
சொன்னதைச் செய்கையிற்
காட்டிப்பல — உயர்
தொண்டுகள் செய்தவர் நல்லதம்பி

உன்னத வாழ்க்கையி
லுவந்தஅந்த — அரும்
ஒப்பற்ற வீரரின் ஓர்கனவு.
அன்னை தமிழ்ப்புகழ்
காட்டிவிழா — ஒன்று
ஆகப் பெரிய அளவினிலே —

நாட்டிட வேண்டுமென்
றாசைகொண்டார் — அந்த
நாள்வர முன்அவர் வீடுகண்டார்
நாட்டினில் உள்ளவர்
கூடிவந்தார் — அவர்
நன்று நினைத்ததைச் செய்கையிலே
காட்டிடக் கச்சையைக்
கட்டிநின்றார் — அவர்
கனவு பலித்ததைக் கண்டுவிட்டோம்
ஏட்டினில் ஓரிடம்
பெற்றுவிட்ட — இந்த
இனிய விழாஅவர் நினைத்தவிழா!

நின்று விளங்கிடும்
நீர்கொழும்பீர் — திறன்
கொன்று பொசுக்கிடும் வேற்றுமையேன்
ஒன்றி உருப்பட
வேண்டுமையா — வெறும்
ஊத்தைக் குணங்களைத் தாண்டுமையா

நன்று கொள்வோமொரு
கொள்கையிங்கு — எங்கள்
நல்லதம்பி வழி பற்றியதில்
சென்றுபல் சேவைகள்
செய்திடுவோம் — புகழ்
திசைகள் விளங்கிட உய்திடுவோம்!

## வாழ்க!

மேன்மைகொள் சைவ நீதி
விளங்கிட உழைத்து நாளும்
வான்புகழ் வள்ளு வன்றன்
வழியினில் நின்று வாழ்ந்து
தான்பிறர்க் காய செம்மல்
தண்ணெழில் நீர்கொ ழும்பின்
கோன்புகழ் எங்கு மென்றும்
கொலுவிருந் தாள்க வாழ்க!

## நன்றி! வணக்கம்!

ஏடுதாங்கி ஏற்றப் போகும்
இனிய பேர்வி ழாவில்
ஆடிநெஞ்ச மார்க்க வான்ற
அரிய பெரியர் முன்னே
பாடிநல்ல தம்பி புகழைப்
பாரில் நாட்டி விட்டேன்
நாடுபோற்ற வையம் ஏற்ற
நன்று வாழ்க அன்னார்!

பாடவேண்டுங் கவிதை யென்று
    பணித்த நண்பர் கட்கும்
நாடி இந்து இளைஞர் வாய்ப்பை
    நல்கி நின்ற தற்கும்
கூடிவந்து கவிதை கேட்டுக்
    கொழுத்த உங்க ளுக்கும்
பீடுகொண்ட நன்றி நீங்கள்
    நீடு வாழ்க வணக்கம்!

நீர்கொழும்பு
இந்து வாலிபர் சங்கத்
தமிழ் விழா,
30-1-65.

# அருள் வாக்கி

## கடவுள் வணக்கம்

அருள்வாக் கியனரின்
ஆன்ற பெரும் புகழின்
சுருள்நீக்கி யஞ்சுவையாய்த்
தூண்டிவிட —இருள்நீக்கி
என்றன் விநாயகனே
எழிற்பொருளே தாவெனக்கு
நன்றாய்க் கவியூறும் நா.

## அவையடக்கம்

ஒப்பில் லாததோர்
உயர்ந்த புலவனர்
அப்துல் காதிரின்
ஆன்ற புகழ்க்கொடி
இப்ப ரப்பினில்
இலங்கி வீசிட
செப்ப மாகவே
சேவை செய்திடும் —

ஆற்றல் தலைவ! நல்
ஆன்ற புகழுடை
ஊற்றுக் கவிஞர்காள்
ஓங்க அவையெழில்
வீற்றி ருக்குமெம்
மேன்மை அறிஞர்காள்
போற்று மன்பர்காள்
பூர்த்த வணக்கங்கள்!

## நன்றி

அருமிளம் பிறைப்பேர் வல்லார்
அன்புசால் 'இரகு'ப ணிக்க
பெரியநம் புலவர் பெற்றி
பீடெலாம் பாட நல்ல
அரியதோர் வாய்ப்பை இங்கு
அளித்தனர் விழாவெ டுத்தோர்
உரியவான் நன்றி அன்னார்க்
குவகையால் நவிலு கின்றேன்!

## விழாச் சிறப்பு

மாவலித் தாயின் அரைவணைப்பிற் – புகழ்
மாநில மெங்கும் மிகப் பரப்பி
காவற் தந்தைமலை பேணிவருங் – கலைக்
கண்டிம கள்செய்த பேறுமென்னே!

மேலைக் கடல்தனிற் செங்கதிரோன் — இன்று
வீழ்ந்திடப் பிந்திய காரணமென்?
சோலையி னூடு தயிர்த்திரள் போல் — மதி
தோன்றிய தேபகல் வேளையிலே!

கான மயில்களும் ஆடுவதேன் — குயில்
காதினை ஆ! குளிப் பாட்டுவதேன்?
மானுக் கருள்செய்த மன்னன்நபி — ஒளி
வாய்மையில் மாந்தர்கள் கூடியதேன்?

## அப்துல் காதிர்

ஆயிரத்து எண்ணூற்று
அறுபத்தி யாறில்
ஆ.பி.அல் லாபிச்சை
ராவுத்த ருக்கும்
தூயகுண அம்மைகவ்
வாஉம்மா வுக்கும்
தோன்றியொரு தவவொளியாய்ப்
போப்பிட்டி யாவில்
ஆயஇளங் கல்விதமிழ்
ஆர்வத்தைத் ஊட்ட
அருநூல்கள் கற்றுநபி
அருள்மீறப் பெற்று
போயகல முன்இனிய
குதலைமொழி, செம்மைப்
பொருட்கவிதை பொழிந்தக்தை
வியந்துலகம் போற்ற —

பதினுறில் அரங்கத்திற்
பலபேரை வீழ்த்திப்
பாவேந்தர் "அருள்வாக்கி"
எனும்பட்டம் வாங்கி
நிதியான அறிவோங்கத்
தமிழ்நாடு சென்று
நிகரற்ற முத்துபா
வாப்புலவர் தன்னை
இதமாகப் பணிந்தேற்றி
இருக்கின்ற நூல்கள்
யாவுங்கற் ருராய்ந்து
ஐயமறத் துங்க
முதுஞானி யாய்மாறிப்
பத்திக்கடல் மூழ்கி
முத்தான பெருநூல்கள்
முப்பதின் மேலாய்—

தமிழன்னைக் கணியாகத்
தவஞ்செய்து தந்தோன்
தண்கண்டி யூர்போற்றித்
தகவான நான்கு
கமழ்கின்ற மாலைகள்
பதிகங்கள் கும்மி
கனிவான சிந்துகள்
காரணப் பிள்ளைத்
தமிழோடு கோவைநற்
தீபம்பு ராணம்

தலையான சந்தத்தி
ருப்புகழ் என்னும்
அமிழ்தத்தை அழகாக
அளித்தமெய்ஞ் ஞானி
அருவாக்கி அப்துல்கா
திர்ப்புலவர் கண்டீர்!

## அருள்வாக்கி அற்புதங்கள்

கடவுட் புலவர் அப்துல் காதிர்
காட்டச் சான்று பலவாம்
திடப்பற் றோடு அண்ணல் நபியின்
செம்மை அருளிற் சேர்ந்து
மடமை நீங்க நோய்கள் போக
மனிதன் மனித ஞக
கடமை என்று வேண்டும் போது
காட்டிப் புதுமை வென்ருர்!

கண்டி நகரிற் தொழுகை முடித்துக்
காதிர் வெளியில் வந்தார்
அண்டி யாகூப் பென்னு மன்பர்
அடைய நல்ல பேறு
உண்டி உண்ண வீட ழைத்தார்
உவந்த அப்துல் காதிர்
கொண்டு சென்ருர் குறித்த நாளிற்
கூட எட்டுப் பேரை!

எட்டுப் பேரைக் கண்ட யாகூப்
பேங்கிப் போனுர் புலவர்
மீட்டும் வருவர் என்று தானே
மனைவி சமையல் செய்தாள்
திட்டம் போட முயலப் புலவர்
தீரும் பசியை என்ருர்
சட்டி முட்டி தடவி யாவும்
தட்டிக் கொட்டி வைத்தார்!

காதிர் உண்மை காணும் மேதை
களித்து நண்ப ரோடு
போதும் போது மென்ன உண்டும்
புதுமை! சோறுங் கறியும்
மீதி இன்னு மிருக்கக் கண்டு
வியந்து விழுந்து தொழுது
சேதி யாகூப் போடி உள்ள
தெருக்கள் ஓதி மகிழ்ந்தார்!

## வேறு

காட்டுத் தீயெனக் காதிர் நற்புகழ்
கடிதிற் பரவ எங்கும்
நாட்டு மக்களும் ஆற்றல் காணவே
நயக்கி ருர்க ளென்று
கேட்டுச் சான்றவர் புலவர் வேந்தனைக்
கெஞ்சி நின்ற போது
காட்டு வேனென நாட் குறித்தனர்
கடல் திரண்ட கூட்டம்!

எட்ட வேயொரு விளக்கி ருந்தது
எண்ணெய் திரிக ளோடு
தட்டி யேற்றவங் கில்லேக் காணுந்தீப்
பெட்டி புலவர் உற்றுக்
கட்டினர் மனம் கடவுளின் குணம்
கவிதை பாடிவிட் டார்
சட்டெ னத்திரி பற்றி யேசுடர்
விட்டெ ரிந்த தம்மா!

## வேறு

பெய்தனர் தேவர் பூக்கள்
பெய்தது வானம் ஆற்றல்
கைவரப் பெற்ற அப்துல்
காதிரின் மேன்மை கண்டு
மெய்சிலிர்த் திட்டார் ஆங்கே
மேவிய பெருங்கூட் டத்தார்
சைவர்கள் இசுலாம் மக்கள்
புத்தர்கள் கிறித்தைச் சார்ந்தோர்!

உயர்ந்தவுள் ளொளியாய் உண்மை
ஒழுக்கநற் கவிஞன் சொல்லுக்
கியற்கையும் பணியுங் கண்டீர்
இத்தகைப் புதுமை வையம்
வியந்தெழ நயந்து போற்ற
வேறிடங் களிலுஞ் சென்று
பயத்தனர் பலநாள் நோய்கள்
பறந்திடப் புலவர் வேந்தர்!

# வணக்கம்

இத்துணைப் பெருமை வாய்ந்த
எங்களின் புலவ ரேரும்
வித்துப தீபத் தின் நூல்
விரும்பி நீர் கற்றல் வேண்டும்
மெத்தவே அன்னூர் ஆற்றல்
மேதினி பரப்பி எங்கள்
முத்திரை பதிக்க வேண்டும்
முடித்துவாழ் வீர்வ ணக்கம்.

தெல்தோட்டை, என்சல் கொலீஜ்
முஸ்லிம் மஹா வித்தியாலயம்
வித்துவ தீபம் நூற்றுண்டு விழா,
30-8-65.

# பகிடிவதை

## கடவுள் வணக்கம்

என்னரும் பிள்ளையார் இரங்கு வாரெனின்
இந்நில வுலகதன் இயல்பை முன்னவர்
சொன்னநன் னெறியினில் துரந்து பேணிட
மன்னுயர் கவிதைகள் மலர்தல் திண்ணமே!

## அவையடக்கம்

பெருமைகொள் தலைவ சொக்கன்
    பீடுசால் கவிஞர் சான்றோர்
அரியவிவ் விழாவை ஏற்றி
    அவையினை அழகு செய்யும்
குருகுலத் தார்க்கு மன்னர்
    குணமுடை மாண வர்க்கும்
உரியநல் வணக்கம் எம்மை
    உவந்தழைத் தோர்க்கென் நன்றி!

## பகடிவதை

அம்மா வுன்றன் அன்பான
    அஞ்சல் பெற்றேன் அதுவும்பார்
எம்மா லாகும் செயலுண்டோ
    எல்லாம் அவனின் அருளென்றே
சும்மா தூங்கிக் கிடந்தேற்குத்
    துணிவை வலுவைத் தந்தேற்றிச்
சிம்மா சனம்வைத் துளதம்மா
    சிங்கம் போன்றிங் கிருக்கின்றேன்!

வெறும்வாய்ப் பேச்சில் நேரத்தை
    வீணுக் காமற் பொறுப்போடு
உறுநோக் கொன்றே கருத்தாக
    ஊன்றிக் கற்று முறையாகத்
திறமை காட்டி வருந்தேர்வில்
    தெரிவைப் பெறுதல் வாழ்நாளிற்
பெறுமோர் பேறென் றெழிலார்தண்
    பேரா தனைப்பல் கலைக்கோயில்—

இறுமாப் புற்றே வந்துள்ள
    இளமான் கூட்டப் புதியோரை
வெறிநோய் ஒன்றால் மிகவாடும்
    வெடிவால் முதியோர் சுழியோடிச்
சிறுமீன் தன்னை உறுமீன்கள்
    தின்னல் போலே பண்பொன்றும்
அறவே யின்றி அளவின்றி
    அலைத்தாய்க் கினைசெய் கின்றார்கள்!

வெருட்டல் மிரட்டல் மயிர்வெட்டல்
வெள்ளை உடையிற் சாணத்தை
உருட்டி யடித்தே ஓநாய்போல்
ஊளைச் சிரிப்பால் உயிர்வாங்கல்
சுருட்டுக் குடியா தான்வாயிற்
சுருட்டைத் திணித்துத் தீ வைத்தல்
குருட்டுக் கேள்வி பலகேட்டுக்
குழப்பிக் கூக்காட் டிக்கொல்லல்—

என்றிப் பகிடி வதையெல்லாம்
இளக்கம் என்றே இவ்வாண்டில்
ஒன்றி எல்லா முதியோரும்
ஊன்றி வதைக்கப் பெருந்திட்டம்
ஒன்றை வகுத்தார் இதற்குற்ற
ஒருகா ரணமுண் டென்னென்றால்
சென்ற ஆண்டிற் புதியோர்கள்
சேர்க்கப் படவில் லைக்கண்டாய்!

காய்ந்த மாடு கம்பினிலே
விழுந்த கதைதான் வாய்த்தவழி
மேய்ந்து தள்ள வேண்டுமென
விழைந்து கண்ட நின்றபடி
பாய்ந்து பாய்ந்து வதைக்கின்றார்
பாவம் கீவம் பாராமல்
மாய்ந்து தேய்ந்து புதியோர்கள்
மறைவிற் பொங்கிக் கொதிக்கின்றார்!

விறுமத் தடியர் அன்றோர்நாள்
　　வெளியில் இழுத்தோர் புதியோனை
உறுமிக் கேட்டார் பைதன்னில்
　　உண்டோ காசென் றில்லையென
கறுமிப் பயலென் றேங்கியவன்
　　கன்னஞ் சிவக்க வெழுத்திட்டான்
பொறுமை கொண்டப் புதுப்பையன்
　　சிறுமை வென்ற திறங்கண்டேன்!

பின்னர் திக்குப் பலிச்சங்காய்
　　பீப்பா வாயால் சிரித்தாங்கே
என்னிற் கண்ணை வைத்தார்கள்
　　எங்கே தாரும் பேனவைப்
பின்னர் தருவேன் என்றேரரள்
　　பிடுங்கிச் சென்றுன் பின்னென்ன
இன்னும் இல்லைக் கேளம்மா
　　இனியும் இல்லை அதுநிற்க—

எங்கள் பொன்னம் பலத்தாரின்
　　இராசேந் திரன்தான் முழுமுச்சாய்ப்
பொங்கி ஆர வாரித்துப்
　　புதுக்க வந்த மாணவரை
எங்கே கண்டா லும்வதைத்து
　　இருக்குங் காசை அடிக்கின்றூர்
தங்கம் போன்ற பெடியனெனச்
　　சாலப் புகழ்வார் ஊரினிலே!

இவர்தான் எம்மை வந்தோர்நாள்
இரங்கிக் காய்ச்சல் கீய்ச்சல்முன்
எவர்க்கும் அண்மைக் காலத்தில்
இருந்த துண்டோ எனக்கேட்டார்
இவரின் அன்பிற் படுசூழ்ச்சி
இருக்கும் எனநாம் இலையென்றேம்
சுவரோ ரத்தில் நின்றொருவன்
சவர்க்கா ரத்தண் ணீரோடு—

உடனே ஓடி முன்வந்தான்
ஒழுங்காய் நில்லும் எனச்சொல்லிக்
குடியும் இதிலோர் சொட்டென்று
கொடுத்தான் உறுக்கி மறுத்தாலோ
அடியுங் கொடுக்கத் தயாராக
அரைவட் டத்திற் பலர் நின்றார்
உடலுக் குறுதி எனக்கூறி
ஊத்தைச் சீப்பாற் கலக்கியதை—

பருக்கப் பருக்கப் புதியோர்கள்
அருக்கி அருக்கிக் குடித்தார்கள்
இருக்க மாட்டா மல்ஒருவன்
எனக்குக் காய்ச்சல் வந்ததென்றான்
பருக்கு முதலில் அவனுக்குப்
பறக்கக் காய்ச்சல் எனச்சொல்லிப்
பருக்கி விட்டார் இருகோப்பை
பாவம் இப்போ கடுங்காய்ச்சல்!

## வேறு

இவ்வாறு முதியோர்கள்
எல்லை யின்றி
இன்புற்றின் புற்றுள்ள
எங்கள் பண்புக்
கொவ்வாத முறைகொண்டே
யுறவை விட்டு
உணர்வின்றிப் பொறுப்பின்றி
ஊன்றி ஊன்றி

வெவ்வேறு வழிபார்த்து
வெளியும் உள்ளும்
விசர்நாய்கள் போலெம்மைக்
கலைக்கின்றார்கள்
எவ்வாறு நடந்தாலும்
இனியு மென்ன
இரண்டோர்நாள் தானேயென்
றிருந்த காலை—

நேற்றுன்றன் கடிதத்தால்
நிலைமை மாற
நிகரில்லா வாய்ப்பொன்று
நேரக் கண்டேன்
ஏற்றவோர் திருத்தொண்டை
இரக்கங் கொண்டு
ஆற்றுவார் போலேந்து
பேர்கள் கூடித்—

தேற்றியே அழைத்தார்கள்
தெருவில் நின்று
சென்றதுங் கடிதமொன்
றுமக்குண் டென்றார்
போற்றியான் கைதன்னை
நீட்டும் போது
காற்றிலே விட்டார்கள்
கடிதஞ் சென்று—

கானிலே வீழ்ந்தது
கடிதில் எட்டிக்
காலையான் வைத்ததும்
கவிழ்ந்தே வீழ்ந்தேன்
ஆனதே நினைத்ததென்
றூர்த்தார் 'கே'யென்
றனைபோற் பிளிறினர்
வானம் பாற

மேனியிற் சேற்றோடு
மீண்டேன் பெற்ற
மேலான நின்னன்புக்
கடிதத்தோடு
மானமோ என்னவோ
மனத்தைத் தைக்க
மாறினேன் மறுகணம்
மறந்தேன் என்னை!

## வேறு

போனேன் நேராய் அவன்காதைப்
பொத்தி வெழுத்தேன் பக்கத்துக்
கானில் வீழ்ந்தான் மற்ருேனைக்
காலால் உதைத்தேன் பெருங்கூட்டம்
தானுய்த் தோன்றிச் சண்டைக்குத்
தயாராய் நிற்க நான் முந்திப்
போனுற்போகட் டென்றின்னும்
போனேன் முன்னுற் போய்ச்சொன்னேன்!

மகிடா சுரனுய் மாறிடுவேன்
வன்மை உண்டேல் வந்திடுக
பகிடிக் குமொரு அளவுண்டு
பகிடி முசுப்பாத் திக்கென்ற
மகுடந் தன்னில் மடயர்போல்
மனம்போம் போக்கில் நடப்போர்க்குத்
'தகடு' தருவோ மெனநண்பர்
தட்டிக் கொடுத்தார் பின்னுலே!

நாட்டி யுள்ளேன் தனிமாண்பு
நம்மைக் கொழும்பிற் சென்ருண்டு
வாட்டி வாட்டி வதைத்தார்கள்
வந்தோம் பேராதனைக் கிப்போ
சேட்டை இங்கும் விடுகின்ருர்
காட்டு மிராண்டித் தனமாக
ஈட்டி ஒன்றை எறிந்துள்ளேன்
இறுமாப் போடு திரிகின்ருேம்!

இதனை முடிக்கு மிவ்வேளை
    இராசேந் திரனைத் துணைவேந்தர்
புதியோர் தம்மை வதைத்தன்னூர்
    பொருளைப் பறித்த சதிக்குற்ற
விதியாற் பேரா தனைவிட்டு
    விலக்கி யுள்ளார் இருதவனை
அதிகம் அதிகம் எழுதிவிட்டேன்
    அம்மா அன்பு வணக்கங்கள்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி
செங்குந்த இந்துக் கல்லூரி
'சுடரொளி' பத்தாவது
ஆண்டு மலரின்
வெளியீட்டு விழா
9-11-66

# எழுந்து திசைதிசை விளங்கவே

## கடவுள் வணக்கம்

எள்ளிநீர் நகைப்பினும்
இனியவர் பகைப்பினும்
இடர்கள் வந் துற்றபோதும்
தள்ளிடேன் எண்ணிநான்
சரியெனக் கொண்டதைச்
சாற்றுவேன் கவியில்மேலும்
வள்ளியை வேலவன்
தழுவிட வழியினை
வகுத்தவன் எந்தனுள்ளப்
பிள்ளையார் இருக்கையிற்
பேரருள் பெருக்கையிற்
பிழைவிடேன் பிழைவிடேனே!

## அவையடக்கம்

கனிவுறும் பேச்சும் பாட்டுங்
கைவரும் ஜெயமே
அன்ப
இனியவென் நண்பர் செய்யுள்
இயற்றலில் வல்லார்
கல்வி
துனியறப் பெற்று மிக்கத்
துணிவுடன் செயல்கள்
ஆற்றும்
நனிமிகச் சிறந்த சான்றீர்
மனமகிழ் வணக்கம்
வணக்கம்!

## வேறு

ஆனு முதலாக
அஃகேனு வரையுள்ள
அருநா டகக்கலையின்
சானு அவர்கட்குந்
தனியாகச் செலுத்துகிறேன்
தகைசால் வணக்கங்கள்!

## பட்ட தொல்லே!

இருப்பதோ மாத்தளே
எட்டியாந் தோட்டையில்
உருப்படி யாகவந்
துற்றதோர் கதையிளே—

முறைப்படி கூறிஞல்
முழுகுவீர் கண்ணிரால்
இறத்தலே விட்டுநாம்
இறைவனுற் பிழைத்தனம்!

'இப்போசா' என்னுமோர்
இழவிலே ஏறிஞேம்
கொப்பிலே தொங்குமோர்
குரங்கெனத் தொங்கிஞேம்!

நெருப்பிடி 'வசு'வினே
நிறுத்திஞல் தலேக்கிடி
செருப்படி மிதித்தபின்
சிரிக்கிருர் ஓர் மகள்—

சத்தியை அடுத்தவர்
சட்டையில் எடுத்தனள்
தத்தினர் உள்ளவர்
தவித்தன குழந்தைகள்!

முறைப்படி குடைப்பிடி
முதுகிலும் மூக்கிலும்
பொறித்தன வடுக்களை
புழுங்கினேம் புழுக்களாய்!

இத்தனை அளப்பதேன்
செத்தனம் சிவசிவா
சத்தியும் முத்தியுஞ்
சரிவரக் கண்டனம்!

## நன்றி

கைத்தொழில் இலக்ச பானு
கவினுடை அபடீன்
வீழ்ச்சி
தத்தியே களனி காட்டித்
தவழ்ந்திடும் பேறுஞ்
செல்வம்
மெத்தவே வழங்கும் இறப்பர்
மிகவளர் வலயத்
தோட்ட
மத்தியில் விளங்கும் பேறும்
வான்சிறப் புடனே
எங்கள்—

மட்டிலாத் திறமை கொண்ட
மாண்புறு தமிழர்
வாழுங்
கிட்டிடாப் பேறும் பெற்று
கிளர்ந்திடும் எழிலார்
தண்ணூர்
எட்டியாந் தோட்டைப் பள்ளி
எடுத்திடும் விழாவிற்
காட்டுங்
கட்டிநீர் கவிதை என்று
கனிந்தவர் ஈழக்
குமாரே!

முன்பெலாம் கவிஞர் என்றால்
முடிச்சுப் பொன்
முடிச்சுத் தந்தார்
என்பதை எண்ணும் போது
ஏங்கிடும் நெஞ்சம்
இன்றே
அன்புடன் வாய்ப்பை அள்ளி
அளிப்பவர் வள்ளல்
ஆவர்
என்பதால் அன்பர் கோமஸ்
ஈழக்கு மார்க்கென்
நன்றி!

## பொருள்

எழுந்து திசைதிசை விளங்க வேயெனும்
ஏற்ெருரு தலைப்பினைத்
தந்தனர்
விழுந்து தலைகெட வணங்கி ஞர்நிலை
விளக்கிடும் பொருளினைக்
கொண்டது
அழுந்தி அடிமையில் அலைந்து வாழ்பவர்
அறிந்ததற் கானவை
ஆற்றிட
எழுந்து கவிஞர்கள் இடித்த லேற்றவை
இயற்கையாம் சான்றவர்
உதவுவீர்!

## எழுந்து திசைதிசை விளங்கவே!

தலைவர் செய்த வேலை யாலே
தவிக்கும் மக்கள் தங்கள்
தமிழைக் கூடக் கற்க வில்லை
தம்மை யறிய வில்லை!
கலைகள் இல்லைக் காட்சி யில்லை
கனிந்து கனிந்து பேசிக்
கடைசிக் கட்டம் பார்த்து மெள்ளக்
காலை வாரி விட்டார்!

அலைகி றார்கள் உலைகி றார்கள்
அணைக்க யாரு மின்றி
ஐய கோஇப் பாட்டை இங்கு
யார்க்கெ டுத்து ரைப்போம்!
நிலைமை மிக்கக் கெட்டுக் கட்டம்
நீறு காணும் போதும்
நினைத்த வாறு குட்டிக் குட்டி
நிறுத்தி வைக்கி றார்கள்!

கேட்டுக் கேட்டு வந்த இந்தக்
கீழ்மை கண்டு மின்னும்
கேட்கி றார்கள் கேட்கி றார்கள்
கெஞ்சி அஞ்சிக் கெட்ட
மாட்டுக் கூட்டம் போன்ற டாஏ
மாந்து போகி றார்கள்
மாட்சி யில்லை மீட்சி யில்லை
வழிகள் காட்டுந் தலைவர்
சாட்டுப் போக்குச் சொல்லித் தம்மைத்
தஞ்ச மென்று நின்று
தவிக்க வேண்டு மிவர்க ளென்ற
தன்ன லத்தைத் தழுவி
தோட்ட மக்கள் கண்ணில் மண்ணைத்
தூவித் தூவி வெளியிற்
தோர ணங்கள் கட்டி மிக்கச்
சோக்குப் பண்ணு வார்கள்!

சொந்த நாடு நீ யுழைத்துத்
தூக்கி விட்ட நாடு
தொல்லை யென்ன இன்ப மென்ன
தொடர்ந்து வாழும் நாடு
இந்த நாடு இதனை யன்றி
எந்த நாடு மில்லை
என்ற உண்மை இடித்துச் சொல்ல
இங்கு யாரு மில்லை
தந்தை என்ன பேரன் கூட
இந்த மண்ணிற் பிறந்து
தவழ்ந்துள் ளார்கள் வெட்கக் கேடு
சான்று காட்ட இல்லை
விந்தை எங்கள் நிலைமை இதனை
விளக்கிச் சொல்லின் உலகம்
விழுந்து விழுந்து சிரிக்கும் இல்லை
வீரத் தலைவர் கண்டீர்!

முன்னி ருந்து மூசி மூசி
மூட்டை லும்பு தெறிக்க
முந்தி நின்று வெந்து வெய்யில்
முற்று மழையுந் தோய்ந்து
சொன்ன சொன்ன வாறு வேலை
சோர்ந்தி டாது செய்தும்
தோட்ட மெங்கு மாக்கி நன்கு
தொடர் வளங்கள் தந்தும்

என்ன கண்ட மிச்சம் வாழ்வில்
என்ன பெருமை உண்டு
ஏனெமக்கு இந்தச் சிறுமை
யாரி தற்குப் பொறுப்பு
மன்னர் என்ற பட்டம் மயக்கி
வாங்கப் பெரிய ஆசை
மக்கள் வாழ்க்கைச் சிக்கல் தீர்க்கும்
வலிமை மட்டு மில்லை!

வீடு வாசல் காணி பூமி
விளங்குங் கல்வி இல்லை
பாடு பட்டு உழைத்து நாளும்
பயன் வழங்கு வோர்க்கு
நாடு கூட இல்லைப் பாரில்
நம்மைப் போல யாரும்
நடைப்பி ணங்க ளாகப் பெருமை
நாட்டும் உரிமை யின்றி
கேடு கெட்ட வாழ்க்கை தன்னில்
கிடந் தழுந்து வாரோ
கேலி கிண்டல் செய்வர் மிக்கக்
கெட்டி யாக வாழ்வோர்
வாடி மாளும் வாழ்க்கை யோடு
வசைச்சொல் லம்பு வேறு
நாடி யான வழி வகுக்கும்
நல்லர் இல்லைக் கொல்லோ?

## வேறு

தெரிந்த கதையிதைச் சொல்லியேன்
தேம்பித்
திடத்தினைக்
கொல்லுவான்
இரிந்து சாதலை விட்டுடன்
எழுந்து
தோள்களைக்
கொட்டியே
வரிந்து கட்டிநம் காளையர்
வந்து
சேர்ந்திடின்
நாளையே
புரிந்து நற்செயல் நோக்குடன்
புதிய
வாழ்க்கையை
ஆக்கலாம்!

பொறுமை பூண்டது போதுமே
பொலியக்
கண்டது
மேதுநாம்
வறுமை வறுமையிற் காய்கிறோம்
வாட்டும்
தொழில்களில்
தேய்கிறோம்

திறமைக் கேற்றது கொள்ளுவோம்
தீராத்
தொல்லைகள்
கொல்லுவோம்
சிறுமை போவென ஓட்டுவோம்
சிறக்கத்
திட்டங்கள்
தீட்டுவோம்!

சொல்லாற் சுவைபட வெல்லுவார்
சூழ்ச்சிக்
கொள்கையிற்
செல்லுவார்
நல்லாய் எங்களை மாய்க்கிறார்
நமதாம்
அறிஞர்க்ள்
ஏய்க்கிறார்
நில்லோம் இவர்வழி நீக்குவோம்
நிலையாய்
ஒருவழி
யாக்குவோம்
வல்லார்க் காயுதம் புல்லுமாம்
வளையா
தவைஇவர்க்
கில்லையாம்!

இனிநாம் யாரையும் நம்பிடோம்
எம்கை
தான்துணை
கும்பலிற்
குனியோம் குட்டிடக் குட்டிடக்
கொடுப்போம்
கொடியவர்
பட்டிட
துனியாய்த் தாளங்கள் போடிடோம்
சார்ந்திங்
கொன்றெனக்
கூடுவோம்
வினைகள் நமக்கென ஆற்றுவோம்
விடியும்
நாளினைப்
போற்றுவோம்!

கடமை உள்ளது நம்மிடம்
கண்ணை
மூடியே
பொம்மையாய்
மடமைக் காரியம் பார்த்தலை
வல்ல
சிந்தனை
தீர்த்திடின்

இடரேன் இயற்றுக நலங்களை
எழுந்து
திசைதிசை
விளங்கவே
திடமாய் நடந்திடக் கெட்டியாய்த்
திறமைத்
தோள்களைக்
கொட்டுக!

## வாழ்க! வணக்கம்.

முற்று மென்றன் கவிதை இங்கு
கற்ற செல்வப் பெரியீர்
சற்றுங் கவனங் குன்றி டாது
உற்றுக் கேட்டீர் நன்றி!
மற்றை யோரும் வாழ்க வென்ற
பற்றுத் கொண்டு செய்து
குற்றஞ் செய்யுங் கொடிய ருக்கு
நெற்றிக் கண்ணைக் காட்டி —

சுற்றந் தன்னைச் சூழ்ச்சி செய்து
விற்றி டாது நோக்கம்
அற்ற வாழ்வு கெட்டு நல்ல
ஒற்று மைக்க ருத்தைப்

பற்றி நின்று கொற்றத் தமிழன்
பெற்றி யோங்க என்றன்
நற்ற மிழ்க்க வித்தி றத்தால்
வெற்றி பெறுக! **வணக்கம்.**

**மாணவர் முத்தமிழ் மன்றம்**
**ஆண்டு விழா**
**எட்டியாந் தோட்டை**
**புனித கபிரியேல் கல்லூரி**
**21-11-1964.**

# உய்யும் வழியிவர்க் கோது!

உய்யும் வழியிவர்க்காய்
ஓதென்னும் பேர்தலைப்பில்
செய்யுங் களியென்று
செப்பிவிட்டார் — சைவ
மாசபையார் நானுமிங்கு
மாண்புபெற வந்தே
ஈசனருள் செய்வா னிருந்து.

சுவையாய்க் கவிபாடும்
சொக்கநா தன்தலைவ
அவையாம் பெரியோரே
அன்புடையீர் —சுவையாய்
இங்குபொருள் நானெடுத்து
இயம்பிடக்கேட் டேற்பீர்
தங்குமருள் யானைமுகன் றருள்.

* * *

ஐயோ இறைவா திருமால் அழகா
மெய்யோ இதுவுன் மேதினி தானோ?

உன்றன் அருளால் உண்மைக் குடைக்கீழ்
ஒன்றுந் தீமை யொழுகா தென்பார்
ஆனால் இங்கே ஆவதைக் காணின்
போனால் என்ன போகட்டும் என்றே
திருப்பாற் கடலில் திருவினை விட்டு
விருப்பாற் போலும் விண்முகில் வண்ணா
அரவ நிழலில் அருட்பால் அடக்கி
இருக்கின் றாயே இதுவென் விந்தை!

அறிதுயில் மாறி அயர்ந்தனை யோகண்
உறுதுயர் கோடி உற்றன எழுவாய்!

நெறிகள் யாவும் நிலத்தினில் அந்தோ
குறிகளு மற்றுக் கூட்டுடன் கெட்டு
கொடுமைகள் மீறிக் குடைபிடித் தாட
அடிமைக ளாயுன் னடியார் கூட்டம்
துடியாய்த் துடித்துத் துவண்டு வெருண்டு
கொடுவாய்த் தொல்லைப் பிடியி லிருந்து
விடுபடத் தவிக்கும் வேதனை கண்ணுற்
பார்ப்பதற் குண்டோ பார்த்தவர் தாமும்
தீர்ப்பதை விட்டுத் தெரியா தவர்போல்
வீசிடுங் காற்றின் வீச்சுடன் ஏகும்

தூசிகள் போலே துணிவுடன் எதிர்த்துக்
காரியம் பார்க்கும் வீரிய மின்றிப்
பேருக் குள்வார் ஊருக் குள்ளே!

காடையர் அதனுற் கண்கண்ட மன்னர்
பேடியர் தாமே பெருவல் லுநர்கள்
மோடுகள் உள்ள மொக்குகள் எல்லாம்
பீடுடை அறிஞர் பெரியோர் மறைவில்
கேடுகள் மிக்கக் கெட்டியாய்ச் செய்யும்
மாடுகள் தாமே மனிதர் சான்ருேர்!

கட்டிய கொள்கை கடிதிற் தானுய்க்
கிட்டிட வில்லை? கீழ்மேல் யாவும்
திட்டுவர் கொட்டித் தீயினுங் கேடாய்ச்
சுட்டிடின் இவரே சொல்லின் செல்வர்!

ஒட்டியே நின்று கூட்டம் ஒன்றில்
முட்டையால் எறிந்தால் முற்போக் காளர்!

திட்டந் தீட்டித் தீர்த்துக் கட்ட
வட்டம் போடும் வஞ்சகர் பெயரோ
கெட்டிக் காரர் கெட்டிக் காரர்!

பட்டம் கைமேற் பயனுய் இப்படி
எண்ணிய வாங்கு இமைவெட் டொன்றில்

நண்ணுவ தாலே நாற்றிசை களிலும்
பல்கலைக் கழகம் பண்ணி இவைகளை
நல்கிடும் நோக்கமும் நாட்டினில் உண்டே!

காசுக் கென்றாற் காரியஞ் செய்வார்
ஊசிக் கண்ணின் ஊடும் நுழைவார்
இல்லை என்றாற் சொல்லைக் கேளார்
செல்லும் அலுவல் செல்லா தென்பார்
வெல்லுங் காசை வெளியிட் டாலோ
பல்லின் காவியும் பளிச்செனத் தோன்றும்
மானம் வீரம் மடியினில் உடனே
ஈனம் ஏனோ இப்படி ஆனார்?

இன்னுஞ் சிலபேர் இயல்புக ளிவ்வா
றென்னும் படியாய் இருப்பது கண்டாய்!

பெட்டிக் கணக்கிற் பெரும்பொருள் மிக்கக்
கட்டிக் கட்டிக் காத்துறை வார்கள்
இருந்தும் என்ன இல்லா தோர்க்கு
மருந்தா யேனும் மறந்தும் ஈயார்
இவரைச் சுற்றி இழுபடும் உலகம்
இவரைத் தவிர எவரையும் மதியா
திருப்போர் யாரும் இரக்கங் கொண்டு
விருப்பால் எதையும் வழங்கிட விரைந்தால்
நறுக்கிட வருவார் நல்லது சொல்லிக்
குறுக்கினில் நிற்பார் விறுக்கெனப் பறப்பார்!

கலவாய் போலே கருத்துகள் இன்றிப்
பலவாய் நாளும் மலையாய்க் குவிக்கும்
வெறுங்குடத் தாரின் வேலைகள் இங்கே
கிறுங்கிட வைக்கும் கேட்டிடு வாயே!

வேலை இல்லார் வேளா வேளைக்
காலை போலே அசைகள் வெட்டி
இவரைப் பற்றி ஆறாய் அவர்க்கும்
அவரைப் பற்றி நூறாய் இவர்க்கும்
கூறிக் குழப்பிக் கொளுவிக் கொளுத்தி
மீறி அவர்கள் மிண்டிப் பகைத்துச்
சீறிச் சண்டை தீவிர மாக
ஆறி இருப்பார் அறியா தார்போல்!

பத்தியிற் கூடப் படியுது பாராய்
இத்தகைச் சேட்டை இதுமிக விந்தை!
இந்தி யாவில் இன்றும் உண்டே
வெந்து நொந்து வெயிலில் மழையில்
நனைந்து தோய்ந்து நாட்கள் பலவாய்
நினைந்து நினைந்து கால்நடை யாக
கடவுள் இருக்கும் இடங்கள் நோக்கி
முடவர் கூட முயன்றே செல்வார்
ஆனால் இங்கே அண்மையில் ஒன்று
நானுங் கண்டேன் நடந்தது கேட்பாய்!
தெருவில் தெய்வம் தேரிற் போனால்
உருகித் தேடி ஓடிச் சென்று
பெருகிக் கண்கள் பெரும்பேர் அழகைப்

பருகும் பத்தர் காலமும் மாறி
எந்தன் தெருவால் எந்தன் வீட்டால்
இந்தத் தெய்வம் வந்தால் என்ன
என்றே குழப்பம் எடுத்தார் தாமும்
நன்றாய் ஊரிந் நகரந் தன்னில்!

இன்னும் உள்ளார் இத்தகை இயல்பாய்ப்
பின்னுக் கான பீடுறும் வேலை
ஒன்றை இரண்டை உருப்படி யாக
இன்றே செய்வோம் என்னும் எண்ணம்
சற்றும் இன்றிச் சதிராட் டத்தில்
முற்றும் காலம் மூச்சாய்க் கழித்து
பொறுப்புணர் வொன்றும் பெருட்படுத் தாது
சிறப்பன வற்றிற் சிந்தனை இன்றி
வெற்றுப் போக்கில் விற்றுப் பொழுதை
அற்றுப் போவார் அவமே அவமே!

போனாற் போகுது வந்தால் வருகுது
ஏனும் எமக்கு எடுபிடி வேலை
என்னும் எண்ணம் ஏற்றம் பெறுகுது
இன்னும் உணர்ச்சிகள் எள்ளள வேனும்
இல்லை இல்லை அதனால் இந்த
தொல்லை தோன்றி ஆளை மெள்ளச்
சுருக்குப் போட்டுத் தொலைத்துத் தள்ள
இருக்கும் நிலைமையை இன்னும் அறியார்!

ஒற்றுமை என்பது ஒருசொட் டேனும்
அற்றவர் ஆனற் கற்றவர் நன்ருய்ச்
செம்மறி யாட்டின் செம்மைகள் கூட
நம்மவர்க் கில்லை நாட்டினில் இன்று
விட்டனர் அதனல் வீரம் மானம்
கெட்டனர் தங்கள் கேடுக ளாலே
பெருமைகள் இல்லை உரிமைகள் இல்லை
எருமைகள் போலே இருந்தத ஞலே
இன்றிந் நிலைமை எய்திய தன்றே!
பொன்றுங் காலம் புகுந்தது வாமோ?

இரணியன் அணவ மெட்டி உதைத்தாய்
தரணியில் நல்லவர் தழைக்க விதித்தாய்
யானைக் கருள்செய் தாயே அன்று
தேனய் இனிக்கும் திருமாற் பெருமான்
அறிதுயில் ஆற்றி நீயெழுந் திட்டால்
உறுதுயர் போகும் உடனெழு வாயே!

எத்தனை அறிவுரை எப்படி எப்படி
முத்தியைப் பெற்றிட முறைமுறை யாக
வைத்தனர் எங்கள் சமயத்து வல்லார்
புத்தர் பிறந்தார் புத்திகள் சொன்னர்
வள்ளுவர் வந்தார் வகைவகை யாக
அள்ளியே தந்தார் அறவுரை கோடி
இயேசு பிறந்தார் என்னென்ன சொன்னர்
வீசி எறிந்தார் அனைத்தும் வீணே!

அறிவோ இறின் ஆற்றலு மின்றி
நெறியும் இன்றிக் குறியோ டுள்ள
நேர்மை நீதி இன்றிப் பண்பின்
நீர்மை இன்றி நிலைத்திடு முண்மைப்
போக்கை விட்டு நோக்கம் கெட்டு
ஆக்கம் பட்டு ஆஊ என்று
ஆசை வெகுளி அழுக்கா றுணவத்
தூசி வலையிற் சிக்கித் துவண்டு
வஞ்சகங் களவு பொய்யினில் வையம்
துஞ்சித் துஞ்சித் துரும்பாய் நாளும்

ஓடுது ஓடுது மாயையில் ஒன்றி
வாடுது வாடுது மணிவண் ணா!ஓ!
எழுவாய் நீக்கி அறிதுயில் எழுவாய்
அழுவார் நல்லோர் அதுமுறை யாமோ
தொழுவார் தொழாஅர் தொல்லைகள்
துடைக்க
எழுவாய் எழுந்துன் அருளால் உடனே
உய்யும் வழியிவர்க் கோதிடல் வேண்டும்
வையம் அறவழி வாழ்ந்திட நன்றே.

* * *

முதுகவி சொக்க நாதன்
முத்தமி ழன்ப ரிங்கு
இதுவரை இருந்து நன்கு
என்கவி கேட்ட தற்கு
இதமுடன் நன்றி நாளும்
இன்னருள் மாலின் தூய
பதமலர் போற்றும் துன்பம்
பறந்திடும் வாழ்க நன்றே!

மகா விஷ்ணு மூர்த்தி உற்சவத்தை
முன்னிட்டு
மாத்தளைச் சைவ மகா சபையினர்
ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்
ஒழுங்கு செய்த
கவியரங்கில்
10-10-63.

# என்றுங்க உங்களைத் தாங்க!

## கடவுள் வணக்கம்

குறிஞ்சிக் குமரன் அண்ணன்
கூடும் ஞானக் குரிசில்
உறிஞ்சிச் சுவைப்பான் இளநீர்
உலகக் கலைகள் பிறக்க
அறஞ்சொல் நெறிகள் சிறக்க
அருளும் அவனின் திருத்தாள்
இறைஞ்சிக் கவிதை இயம்பும்
எனக்கென் குறைகள் இங்கே!

## அவையடக்கம்

பாட்டினை மிக்க நாளும்
பட்டுநம் மக்கள் முன்னாள்
காட்டினைக் கல்லை முள்ளைக்
களைந்தவை திருத்தி யுள்ள
மேட்டினைச் சரிவை யெல்லாம்
மேன்மைகொள் தோட்ட மாக்கி
காட்டிடத் திறமை யேற்றங்
கண்டுயர் வுற்ற இந்த—

காவலில் பலாப்ப ழங்கள்
கடுமையிற் களித்து மந்தி
தாவலிற் தவறி வீழுந்
தண்செழுங் குறிஞ்சிக் காட்சி
ஆவலில் ஆளைக் கட்டும்
அடுத்தடுத் தழகை ஊட்டும்
நாவலப் பிட்டி ஊரில்
நற்றமிழ்ப் பணிகள் செய்யும்—

ஊரறி கதிரே சன்கல்
லூரியி லுவகை கொண்டு
சீர்பெறிவ் விழாவை யாக்கச்
சேர்ந்த்வென் மதிப்பு மிக்கப்
பேரறி ஞர்கா ளான்ற
பெரியவ ரன்பர் யார்க்கும்
பாரறிந் தேற்று மெங்கள்
பைந்தமிழ் வணக்கஞ் சொல்வேன்!

## வென்று நிலைத்திடுவோம்!

மலைநாட் டெழுத்தாளர்
நிலைநாட் டும்பணியில்
ஒன்றாய் முதல்முதலில்
நன்றாய் மூச்சுடனே
கூட்டும் இந்தவிழா
ஏட்டில் இடம்பெறுமே!

சிங்கத் தமிழர்கள்
பொங்கற் றிருநாளிற்
சங்கை ஊதுகிறோம்
எங்கும் ஒலிக்கிறதே
எங்கும் ஒலிக்கிறதே
தங்கும் மலைமுழுதும்
மோதி உலகுரைத்துக்
காதை அதிர்க்கிறது
அங்கக் குருதியெலாம்
பொங்கிக் களிக்கிறது!

நன்று மிகவினிதே
இன்று விதையிடுவோம்
நின்றிங் குழைத்திடுவோம்
வென்று நிலைத்திடுவோம்!

## மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

நிலைநாட்ட நோக்கங்கள்
ஒன்றாய் — செய்ய
நிலையான ஆக்கங்கள்
தமிழ்வாழ நன்றாய்
கலையேட்டி லிடம்பெற்ற
வல்லார் - உய்யுங்
கருத்தாலே உலகத்தைக்
காப்பாற்றும் நல்லார்

தலைகாட்டிக் கைகோத்து
வந்து — தக்க
சமயத்தில் இமயத்து
மூச்சோடு தந்த
மலைநாட்டு எழுத்தாளர்
மன்றம் — என்றும்
வழிகாட்டி உயர்வுற்று
நிலைபெற்று வாழ்க!

ஆக்கங்கள் பண்போடு
வேண்டும் — நல்ல
அறிவோடு நிறைவாக
அழகாக வேண்டும்
போக்கற்ற குழப்பத்திற்
சும்மா — கெட்டுப்
போகாமல் எழுத்தாளர்
நோக்கோடு நம்மோர்
ஏக்கத்தை எழுத்தென்னும்
மருந்தால் — உள்ள
தூக்கத்தைத் துயரத்தைக்
குறைவேறு மிருந்தால்
நீக்குங்கள் நீக்குங்கள்
உடனே — நின்று
நிலைக்கின்ற எழுத்துக்கள்
படையுங்கள் திடமாய்!

## என்னுங்க உங்களைத் தாங்க!

கதையொன்று சொல்கின்றேன்
கட்டி அல்ல
கருத்தோடு காற்ருேடு
கலந்த உண்மை
விதிகெட்ட விதிபோலும்
யாரோ எங்கோ
விளையாட அவையெங்கள்
வினையா யிற்றே
மதியற்ருேர் முறைகேட்டால்
வாட்ட முற்ற
வரலாற்றுக் கதைகோடி
வகைக்கென் ருென்று
பதியட்டும் உரியோரின்
பரந்த நெஞ்சில்
படியட்டும் எண்ணத்தில்
விடிய நாளே!

### வேறு

என்னுங்க உங்களைத் தாங்க
எண்ணிப் பார்க்க வேணும்
சொன்னீங்க பற்பல திட்டம்
சொக்கி நின்றேன் நானும்
என்னுங்க ஆண்டுகள் கூட
எத்தனையோ ஆச்சு
முன்னீங்க சொன்னவை எல்லாம்
முடிச்சு டனே போச்சு!

ஊரேது பேருமிங் கேது
உழைச்ச மிச்ச மேது
சீரேது சிந்தனை யேது
சிரிச்ச வேளை யேது
நீரேதோ நீட்டிநி மிர்ந்து
நினைச்ச பாட்டில் வாழும்
ஆராரோ சொல்வதை யெல்லாம்
அமிழ்த மென்று கேளும்!

உடலேது உயிர்தன்னு மேது
உழைச்சு உழைச்சு நம்ம
சடலங்கள் கொஞ்சமுஞ் சத்தி
இன்றி நொந்து வெந்து
புடலங்காய் போலவு மாச்சுப்
புல்லு முள்ளுக் கல்லு
இடமெல்லாம் தோட்டங்க ளாச்சு
எம்மை வறுமை கொல்லும்!

ஏறாத மலைகளு மில்லை
ஏற்றம் மட்டு மில்லை
ஆறாது வேலைகள் செய்தோம்
ஆக்கஞ் சற்று மில்லை
மாறாத நோய்களுங் கோடி
மருந்து சொட்டு மில்லை
சேறாச்சு நம்முடை வாழ்க்கை
செக்கு மாட்டுத் தொல்லை!

நாம்வாழப் போய்ப்பிறர் கையை
நக்க வேணு மாசீ!
நாமுழைக்கம் கொண்டுழைத் திட்டால்
நாளை துன்பம் தூசி
நாம்வாழ நம்மடை கையே
நமக்கு வழிகள் காட்டும்
நாம்யார்க்கும் குடியிலை எங்கும்
நமனை அஞ்ச மாட்டோம்!

ஏதேது இப்படி யேநாம்
இருக்கும் பிள்ளை குட்டி
வேதாள வேதனை யாலே
வெட்டி முறிந்து கெட்டு
போதாத துட்டினுக் கென்று
பொழுது முழுதும் பட்டுக்
கோதாக விட்டிடுங் கொள்கை
குற்ற முங்க குற்றம்!

பள்ளியிலே பிள்ளைக ளைநாம்
படிக்க வைக்க ணுங்க
அள்ளியட நாலிங்கி லீசு
அவங்க பேச ணுங்க
மெள்ளஅவர் கல்வியி னுலே
மேலே போக ணுங்க
வெள்ளைத்துரை மார்களின் தோட்டம்
வேண்டி ஆள ணுங்க!

பொல்லாத வேலையில் எந்தப்
பொழுதும் தலையை மாட்டி
இல்லாத தொல்லைகள் கோடி
இழுத்து வாரிப் போட்டு
வெல்லாது வெந்தும டிந்தோம்
விழுந்து சிரிக்க ஊரும்
நல்லாய்நாம் வாழ்ந்திடப் பாதை
நன்கு முயன்று பாரும்!

அம்மாளே தண்ணியில் மட்டும்
அழிஞ்ச காசெம் மட்டு
சும்மாபோய்ப் போட்டுட்டுத் துள்ளும்
சொகுசில் என்ன கிட்டும்
நம்மாலே ஆனதைச் செய்து
மடியில் நாலைப் பத்தை
உம்மாணைச் சேர்த்திட வேண்டும்
குடியை விடுங்க உய்வோம்!

வெள்ளைச்சி கையிலைப் போயி
வெறியிற் பிடிச்சி முத்தீர்
துள்ளிப்போய்த் தோளப்பன் காலை
துணிஞ்சு வெட்டி அத்தா
மெள்ளப்போய் மறியலி ருந்து
மேலும் என்னை உச்சி
கள்ளத்தால் உள்ளப ணத்தைக்
கரைத்திட் டீரே சிச்சீ!

சேலைகளை வளையலை நல்ல
செவத்தைக் கல்லுச் சிமிக்கி
ஓலைகளை விற்றட யாவும்
ஒழிச்சுச் சூதில் அமுக்கித்
தாலியையும் விற்றிவிட் டீங்க
தவண்டை அடிக்க நாங்க
சோலிகளை இன்றுதொட் டேனும்
தொலைச்சி டுங்க ஏங்க!

## வேறு

என்றென்றே யிவ்வாறும்
மின்னு மின்னும்
இன்பொங்கல் சுவைத்தோய்வி
லிருந்த வேளை
நன்முன பொறுப்புள்ள
நங்கை சொன்னுள்
நன்னுளிற் கணவர்க்கு
நல்ல சொல்லை
நன்றென்றே உம்உம்மென்
றிருந்து கேட்டு
வென்றுளு முறக்கத்தில்
விழுந்து பட்டான்
என்றுங்க நாமுய்யுங்
கால மென்முள்
எழுப்பாதே தூங்கட்டு
மென்முள் பாட்டி!

# நன்றி! நன்றி!

முற்றும் யாவு மெங்கள் வேலே
முடிவி லென்ன சொல்வேன்
பெற்றி கண்டெ மக்கு மிந்தப்
பெரிய வாய்ப்பைத் தந்த
உற்ற கார்மே கத்துக் கெங்கள்
உள்ளங் கொண்ட நன்றி
மற்றும்மன்ற நண்பர் கட்கும்
மலேயின் பண்பில் நன்றி!

பண்டைக் காலப் புலவர் பாடிப்
பரிசு பெறுவர் கோடி
இண்டைப் புலவர் பெறுவர் பாடி
இருமல் செருமல் இரைச்சல்
அண்டிக் கேட்கு மன்பர் சற்றும்
பொருளே அறிந்தி டாது
துண்டைத் தூக்கித் தோளிற் போட்டுத்
தூரச் செல்வர் ஓடி—

என்று சொல்லும் வழக்கை நீங்கள்
இல்லே யென்று காட்டி
நன்று கேட்டுக் கவிஞர் சொல்லின்
நயத்தைச் சுவைத்து வந்தீர்

நன்றி நன்றி கவிஞர்க் குண்டு
நல்ல கால மினிமேல்
நின்று பாட நேர மில்லை
நன்று வாழ்க வணக்கம்!

**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்**
**பொங்கல் விழா**
**கதிரேசன் கல்லூரி**
**நாவலப்பிட்டி**
**கவியரங்கம்**
**தலைவர் கவிதை**
**14-1-1964.**

# நாவலர் பெருமான்

## அவையடக்கம்

தன்னம் பிக்கைவழி
        தங்கக் கதைசமைக்கும்
பென்னம் பெரியபுலி
        பொன்னுத் துரைத்தலைவ!
கன்னற் கவிதைகளாற்
        காத்திவ் வையகத்தார்
இன்னல் துடைத்துயரும்
        இன்பக் கவிஞர்களே!
மன்னர் நாவலரின்
        மாசில் ஒழுக்கவளம்
தென்னந் தோப்புவளம்
        தென்றற் காற்றுவளம்
மன்னும் நீர்கொழும்பின்
        மாண்புச் சிவப்பெரியீர்
சின்னஞ் சிறியகவிச்
        செம்மை வணக்கங்கள்!

## நன்றி

நாவலர் பெருமை பாட
நல்லதோர் வாய்ப்பை இந்த
மேவுசீர் அவையில் தந்த
மேன்மைகொள் சைவர்க் கென்றுங்
கூவுவேன் நன்றி கொஞ்சி
விநாயகன் கூட நின்றே
ஏவிட இறைஞ்சி ஏத்தி
எடுக்கின்றேன் என்றன் பாடல்!

## இன்றிருந் தாலெங்கள் நாவலர்

இன்றிருந் தாலெங்கள் நாவலர் — தனி
ஏறென வேயொரு காவலர்
நன்றிருக் கின்றன ரென்பதால் — தமிழ்
நங்கை யிருப்பள்வீற் றின்பமாய்!

இக்கட்டி லேங்கித் தவிப்பளோ — பல
இன்னலில் நெஞ்சை யவிப்பளோ
கக்கட்டி கண்களி லாகுமோ — கமழ்
கால்கள்கண் ணீரினில் வேகுமோ?

மட்டற்ற மாட்சிக் கொலுவிலே — புகழ்ப்
பட்டொளி வீசும் நிலவிலே
பொட்டிட்டுப் பூவிட்டி ருப்பளே — எழிற்
புன்னகை மெள்ள விரிப்பளே!

துள்ளித் திரிந்தவ ளாடுவாள் — பகை
தூக்கி யெறிந்துடன் சாடுவாள்
எள்ளி நகைப்பவர் யாரையா — எம
தேற்றங் குறைத்திடின் போரையா!

தோசை வடைக்கதை தோன்றுமோ — பிற
தூற்றற் கதைகளிங் கூன்றுமோ
கூசிப் பழிப்போர் கெடக்கெட — குறை
குத்திக் குடைவர் சுடச்சுட

பேச்சில் எழுத்தில் நடையிலே — வெளிப்
பூச்சினில் விட்டுப் படுபிழை
மூச்சினில் நாளும் முன் னேறுவார் — இங்கு
முந்தி முளைப்பரோ கூறுவீர்!

சேட்டைக் கதைகள் வலுக்குமோ — தலை
சில்லறைக் கூட்டஞ் சிலுப்புமோ
நாட்டு நடப்புக் குடங்குமோ — உயர்
நற்றமிழ்ப் பேரும் மடங்குமோ?

தங்கள் நலத்திற் கிடப்பவர் — எனின்
தக்கவ ரென்று நடப்பவர்
மங்கிட. மாண்புடைப் பண்புகள் — அட
எங்களுக் கேனிந்த வம்புகள் —

என்று விலத்தியே தாவுவார் — என
எங்கள் பெருமகன் நாவலர்
இன்று பொறுத்திடு வார்கொலோ — வகை
இன்றித் தவித்திடு வீர்களோ?

குற்றமெனின் குத்திக் காட்டுவார் — பிழை
கூடிலோ பாய்வரோர் ஈட்டியாய்
முற்றித் தவறுகள் வெல்லுமேல் — உடன்
நெற்றிக்கண் ணுலவை கொல்லுவார்!

## வேறு

நாவல ரின்றிருந்தால் — எங்கள்
நற்றமிழ்ப் புகழினைப் பார்முழுதும்
ஆவலில் விரித்திருப்பார் — அவர்
ஆற்றலுக் காய்வுநர் பணிந்திருப்பார்
ஏவலுக் காயிரவர் — அவர்
எண்ணங்கள் பரப்பிட எழுந்திருப்பார்
ஆவியி னருங் குருவாய்த் — தமிழ்
அவனியர் தொழுதுவ லம்வருவார்!

கூடி வணங்கு மிடம் — குறை
குற்றங்கள் போக்கிட வேண்டுமிடம்
கோடி அறம் வளரும் — திருக்
கோயிலின் வாயிலில் ஆர்ப்பரித்தே
ஆடுகள் கோழிகளை — அட
ஆ! இந்த மானிடர் வெட்டுவரோ
காடையர் செய்கைதனை — ஒரு
கணத்தினிற் பேச்சின்றி ஒழித்திருப்பார்!

சற்றிளம் பெண்களென்றால் — அவர்
சாயலில் நெஞ்சினைப் பறிகொடுக்கும்
பற்றுடைச் சாமிகளும் — ஒரு
பயனுடைத் தொண்டுசெய் யாதவரும்
கொற்றவன் இன்றிருந்தால் — இந்தக்
கோலத்து டன்தலை காட்டுவரோ
பெற்றியைக் கற்றறிவான் — படு
பேயரின் போலியைச் சுட்டெரிப்பான்!

நெற்றியில் நறுமணங்கள் — பல
நீட்டிடும் ஒருவகை நீறணிவார்
பெற்றொரு தாடியினை — எழில்
பிறந்திட நறுக்குவர் நெய்தடவி
சுற்று தல் காவியுடை — எனின்
சூழ்பவர் வியந் திடும் பட்டினுள்ளே
நற்றிற வுணவுகளில் — மிக
முற்றி விளைந்துடல் முறுக்கெடுக்கும்!

பொய்யரும் புலையர்களும் — அரும்
    பொழுதினைச் சுருக்கிடும் போலியரும்
உய்திடச் சைவநெறிப் — பெரும்
    உண்மை விளக்கிடும் நூல்களின்னும்
செய்தவன் அளித்திருப்பான் — தெளி
    தேனடை மென்சரி வெளிமையிலே
மெய்யுறை தமிழ் விழியும் — உரை
    மேன்மையிற் கவர்ச்சிபெற் றிலங்கிடுமே!

## ஐந்தாங் குரவர்

வெந்தார் ஊழி நீறனருள்
    விழியால் முன்னோர் அருந்தவத்தால்
நந்தா விளக்காய்த் தோன்றிவழி
    நமக்குக் காட்டி உய்ய வைக்கும்
ஐந்தாங் குரவர் நாவலரின்
    ஆற்றல் அறிவைப் போற்றியவர்
செந்தாள் வணங்கிச் செந்தமிழும்
    சிவநன் னெறியுஞ் சேர்ந்திடுமே!

முன்னாள் நம்மோர் வாழ்க்கையினை
    மூடிப் படர்ந்த இருளதனை
தன்னா னலமென் பேரொளியால்
    தண்ணார் நிலவா மெழுத்துகளாற்

சின்னு பின்ன மாக்கியநஞ்
செந்நா வலரின் திருப்பெயரைச்
சொன்னுற் போதும் தொல்லேதுயர்
தொலேயும் அமைதி தோன்றிடுமே!

போக்கித் தன்னுள் ஆசையெலாம்
பொதுநற் றுெண்டில் ஊறியரும்
ஆக்கம் பலவாய் அருளிவிட
அயரா துழைத்த ஆன்றவரின்
போக்கை உணர்ந்தால் வாழ்க்கையதன்
பொருளும் பயனும் புரிந்துவிடும்
நோக்கம் வெளிக்கும் நொடியினிலோர்
ஊக்கம் பிறக்கும் உயர்வதற்கே!

மலேயாய்த் தடைகள் வந்திடவும்
மறைவாய்ச் சூழ்ச்சி முந்திடவும்
அலேயா துலேயா தமைதியுடன்
அறிவுக் கூர்வே லாயுதத்தால்
நிலேநேர் உறுதி கொண்டெறிந்து
நெருப்பாய் வென்ற நாவலரைத்
தலேமேற் கொண்டால் தழைப்பதற்காய்த்
தன்னம் பிக்கை பிறந்திடுமே!

எந்நாட் டவரும் இறைஞ்சியெழும்
எங்கோ மான்பேர் வல்லவனைத்
தன்னீர் கண்ணின் நனிமேலாய்
சைவந் தமிழைக் காத்தவனைத்

தன்னே ரில்லா நாவலரைச்
சரியாய்க் காணின் தலைநிமிரும்
தன்மா னத்தால் தமிழுலகம்
தன்னு லோங்கிச் செழித்திடுமே!

## கலங்கரை விளக்கினுன்

நற்றவப் பயனுற் சைவ
நாகரி கத்தை நாட்ட
உற்றருந் தோன்றல் மிக்க
உறுதியன் உண்மை நெஞ்சன்
சொற்றிறம் பாதான் தொண்டுச்
சுகத்தினைச் சுவைத்தான் தாழாப்
பெற்றியன் பெருமை எல்லாப்
பிறப்பிலுஞ் சிறக்க மாதோ!

உயிரினும் ஒழுக்கம் மேலாய்
ஓம்பினன் அற்றோர் தம்மை
மயிரினும் இழிவாய்த் தானும்
மதித்திலன் அவரைக் காணல்
துயரினுந் துயராய்க் கொண்டான்
துடைத்துறும் பழிகள் பண்புச்
செயல்களிற் சிறந்த ஞானித்
திறன்திகழ்ந் தோங்க மாதோ!

இலக்கிய இலக்க ணங்கள்
இன்னருஞ் சைவ நூல்கள்
விலக் கிடா துன்னி யுள்ள
வேறுபல் சமய மெல்லாம்
துலக்கமாய்க் கற்ற மேதை
தூற்றியார் மிண்டி னும்
கலக்கினுன் அறிவுக் கூர்மை
காலத்தை வெல்க மாதோ!

நீறுகொள் நெற்றி யானை
நேரிய நோக்கி னானை
ஏறுநன் னடையி னானை
இறைஞ்சியாம் ஏத்து வோனை
பீறிவீ றறிவி லூறும்
பீடுநா வலனைப் பெற்ற
பேறுதா னென்ன ஈழப்
பெருமைதான் என்ன மாதோ!

இலங்குமேற் சைவ நேர்மை
எடுத்திடித் தோதி மக்கள்
மலங்கெட முத்தி கிட்டும்
வழியொளி நீட்டி வாழும்
கலங்கரை விளக்கி னானைக்
கடவுள்மா முனியைப் பெற்ற
இலங்கையின் பேற்றிற் கிங்கு
ஈடிலை வாழ்க மாதோ!

## வணக்கம்

நாவலர் நற்புகழ் பாடுகையிற் — பெரும்
ஓவியப் பண்பினில் ஊன்றிநல்ல
ஆவலில் ஆவலிற் கேட்டருந்தித் — தனி
ஆர்வத்தை ஆ!மிக ஊட்டி விட்டீர்!

பாவலர் காவலர் நல்லதம்பி — இன்று
பார்த்திடின் இன்னுமென் மாண்புமிகும்
நாவலர் நீதியைக் காத்திடுவீர் — இனி
நான்விடை கொள்ளுகின் றேன்வணக்கம்!

நீர்கொழும்பு
இந்து வாலிபர் சங்கம்
நாவலர் விழா
26-12-65.

1-7-69 ல் நாவலர் சபை
யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் எடுத்த
நாவலர் பெருவிழாவிலும்
இக்கவிதை படிக்கப் பெற்றது.

பல நாவலர் விழாக்கள்.

## கடவுள் வணக்கம்

மெள்ளவே அம்மை அப்பரைச் சுற்றி
மெய்க்கனி பெற்றனை — பின்னர்
வள்ளியை வேலன் கொள்ளவே வந்து
வம்புகள் பண்ணினாய் — எந்தன்
பிள்ளையா ரப்பு பிள்ளையா ரப்பு
பேர்பெறக் கவிதையால் — நின்று
அள்ளிவா ரப்பு ரப்பு அள்ளிவா ரப்பு
அரியநின் னருளினை!

## அவையடக்கம்

முருகையன் கவிதை யென்றால்
மூவைந்து முறைகள் கூட
அருமையோ அருமை யென்று
ஆர்த்துநான் படிப்ப துண்டப்
பெருமைகொள் தலைவ பொங்கிப்
பெய்திடுங் கவிதை கண்டு
திருநடம் வாணி செய்யும்
திறமைசால் கவிஞர் காளிவ்

வவையினை அழகு செய்யும்
ஆசிரி யர்க்கு மன்னர்
சுவையிலே ஊன்றி யோங்கும்
துணிவுடை மாண வர்க்கும்
நவிலுவேன் வணக்கம் இந்த
நல்லதோர் வாய்ப்பைத் தந்து
கவிஞரின் திறமை போற்றும்
கருத்துடை யார்க்கென் னன்றி!

## வீரம்

சேரர் சோழர் பாண்டியர் வன்மைத்
திண்மைகள் நாம் கண்டோம்
போரரா மென்றுற் பொங்கி எழுந்தே
புலியெனக் களம் பாய்ந்தே
நேராய் நின்று நெஞ்சினை நீட்டி
நேர்மையிற் போர் செய்த
வீரத் தமிழர் மேன்மைகள் கேட்டால்
மெய்ம்மயிர் சிலிர்க்காதோ!

பாரீ ரந்தப் பண்டைய வீரப்
பரம்பரை யார் பாட்டை
ஊரில் நாமும் உள்ளன மென்று
உலவுகி றுர்பேடாய்க்

கேரிக் கேரிக் கிழடுகள் தட்டுங்
　　கெட்டித்த னங்கொண்டார்
மாரித் தவக்கை மாதிரிச் சிலபேர்
　　மானச்ச மாவைப்பார்!

தட்டிக் கொட்டிப் பல்லினைக் கையிற்
　　தந்திடு வேனென்பார்
சுட்டுத் தள்ளிப் பொசுக்குவ னென்ன
　　சொட்டைகள் சொன்னுயோ
மட்டிப் பயலே மண்டையை இப்போ
　　மசித்திடு வேனென்றே
குட்டிக் கரணம் போட்டொரு போட்டி
　　தொடங்கிடுங் குதிரையைப்போல்—

சுட்டித் தனங்கள் சுழன்றுசெய் வார்கள்
　　சுண்டெலிப் பயில்வான்கள்!
கிட்டச் சென்றங் கெதிரிச் செத்தல்
　　தட்டியுங் கேட்டாலோ
விட்டுச் சென்றே வேருெரு நாளில்
　　வில்லங்க மாய்வந்து
எட்டுப் பத்துப்பேர்களை முன்விட்
　　டெட்டத்திலே நிற்பார்!

வெள்ளைத் துரைமார் போல விருப்பார்
வள்ளிக் கொடி வீரர்
சுள்ளித் தடியர் கள்ளிம ரத்தர்
துள்ளிக் குரைத்தோடும்
கள்ளப் பெட்டை நாயினுங் கீழோர்
கண்டறி யாவீரர்
கள்ளுத் தண்ணி கிண்ணியைப் போட்டால்
கதறியெ ழும்வீரம்!

இந்தக் காலப் பெடியளின் வீரம்
இன்னும் படுமோசம்
சொந்தத் தாயைத் துண்டுதுண் டாகத்
துணிப்பதைக் கண்டாலும்
முந்திக் கையிற் மூச்சினை வைத்தே
வறுகுவர் முதற்காணும்
சந்திற் பொந்திற் தவழ்ந்து பதுங்கித்
தப்புதல் பெருவீரம்!

உய்யும் வைர நெஞ்சிருந் தாள
உடலுரம் வேண்டாமோ
கைகள் பயிற்றங் காயெனின் பாரும்
கால்கள் முருங்கைக்காய்
மெய்யோ புடலை மிதந்துள வயிறோ
வேறென்ன மட்டுவிற்காய்
பொய்யென் றிதனைப் புலம்பிடச் சமயம்
போற்றுதல் விட்டாரோ!

நெற்றிப் புருவம் நிமிர்ந்திட வேண்டும்
நெஞ்சினில் உரம் வேண்டும்
குற்றம் புரியும் கொடியவர் மீறின்
குடலினைப் பெயர்த்திங்கே
அற்றுப் போகும் அறத்தினை நாட்ட
ஆற்றல் முதல் வேண்டும்
வெற்றித் தாயின் இன்னருள் இன்றேல்
விடிவுந மக்கில்லை!

அன்றவ் வசுரன் ஆணவம் தீர்த்த
அன்னையைப் பணி நெஞ்சே
பொன்றும் பொய்ம்மைக் கதைகளை விட்டுப்
புகழ்வரும் வழிநின்று
நன்றுன் எண்ணம் நலம்பெற வையம்
வென்றுநிலைத்தோங்க
சென்றே துர்க்கைத் தேவியின் தாள்கள்
சேர்வரும் பேர்வெற்றி!

## செல்வம்

திரைகடல் ஓடித் தன்னும்
திரவியம் தேடென் றூர்கள்
பொருளிலார்க் கில்லை இந்தப்
புவியெனும் பொய்யில் வேதம்

திருமகள் கடைக்கண் வீச்சின்
அருமையை அறிந்த ஆன்றோர்
உரையிவை உணர்ந்து பார்த்தால்
உடல்பொருள் ஆவி கல்வி!

பொருளிலே ஆசை இந்தப்
புவியிலே உள்ள யார்க்கும்
வருவதோ ரியல்பே யாயின்
வான்புகழ்த் தமிழர் பற்றிப்
பொருளிலே வைத்த காதல்
போன்றுமற் றெவர்தான் வைத்தார்
திருவருள் முன்ன ரீந்த
பெருவரம் தமிழர்க் கீதே!

ஆசைக்கோர் அளவு முண்டோ
அடிபிடிப் பட்டு முந்தி
ஊசிக்குள் ளாலே சென்று
உலக்கையால் வந்து தங்கள்
வாசிக்குச் சட்ட திட்டம்
வகுத்தெலாப் பொருளு மள்ள
ஆசையிக் காசா லன்றோ
அன்பையும் அளக்கின் றார்கள்!

நடக்குமோர் பணச்ச டங்கில்
நாலைந்து ரூபாய் போட்டால்

வெடிக்குமவ் வீட்டார் உள்ளம்
 வெறுப்பொன்று விறுக்கென் றேறும்
மடக்கியோர் நூறைக் கீறை
 மடியில் வைத்தால் இன்சொல்
அடுக்குவார் ஆர்ப்ப ரிப்பார்
 அவனல்லோ அன்ப னென்பார்!

பொருளினைத் தேட நம்மோர்
 புதுமையில் ஆய்ந்து கண்ட
அரியநல் வழிகள் கேளீர்
 அடைவுகள் பிடித்தல் சும்மா
திரிதல்பின் திரிந்து விட்டு
 திருடுதல் திருடல் இன்னும்
விரிவுறும் பலவாய் ஒன்று
 விளங்கிடும் வெட்டுக் கொத்து!

அஞ்சாது சுருட்டல் அப்பல்
 அசுக்கிடா தடித்தல் என்று
துஞ்சாது வழிவ குத்துத்
 தொல்லையை விலைக்கு வாங்கா
தஞ்சாறைச் சம்ப ளத்துக்
 கதிகமாய்க் காட்டா ராயின்
பெண்சாதி வீட்டி லேசிப்
 பிழிவளென் றேங்கு கின்றார்!

பஞ்சாகப் பறந்தான் நேற்று
கஞ்சிக்கும் வழியில் லாமல்
அஞ்சாறு நாளுக் குள்ளே
அமெரிக்கன் வீடு கட்டி
உஞ்சாலில் ஆடு கின்றான்
உவனுக்கெங் காலை காசு
கஞ்சாவை அபினை விற்றல்
கள்ளச்சா ராயங் காய்ச்சல்!

பொருளினாற் போட்டி முற்றிப்
போட்டியால் நீதி நேர்மை
திரிவுறப் பண்பு போகச்
தீச்செயல் அழுக்கு வஞ்சம்
கரவுபொய் களவு சூது
கவிந்திட மனைகள் விட்டுத்
திருமகள் சென்று செந்தா
மரையினிற் றிளைக்க லுற்றாள்!

பெருமுழைப் போடு நேர்மை
பிறங்கிடா துவந்து நாளும்
தரணியில் அறங்கள் ஓங்கத்
தண்டமிழ்க் கலைக ளோங்கப்
பொருளினை அருள்க வென்று
பொருந்துவார் கோயி லன்றித்
திருமகள் பொய்யர் வீட்டில்
திகழ்வளோ நின்று தேர்வீர்!

## கல்வி

கல்வி கண்ணைத் திறந்து வைக்கும்
கற்கும் முறையிற் கற்று நின்றால்
கல்வி அடக்கம் அமைதி தரும்
கடமை பொறுப்பை வளர்த்து வரும்
கல்வி உள்ளத் தூய்மை தரும்
கவலை இல்லா வாழ்வ ளிக்கும்
கல்வி உலகப் புகழ் வழங்கும்
கவ்வும் பிறவிப் பிணியறுக்கும்!

மெத்தக் கற்றுச் சிறப்ப டைந்தார்
மேன்மைத்தமிழர் உலக மெலாம்
ஒத்துக் கொள்ளும் உண்மையிது
உணர்தல் வேண்டும் மாணவர்கள்
பித்துப் பிடித்துத் தெருவழியே
பிதற்றித் திரியும் நம்பெடியள்
கத்தல் கரைதல் விட்டெமது
கல்விச் சொத்தைப் பேணுவரோ?

இந்தச் சொத்தை இளைஞர்களின்
இயல்பைக் காணும் முதியவர்கள்
மந்தி பெற்ற மாலையென
மயங்கி நெஞ்சம் புழுங்குகிறார்

விந்தை இவர்கள் படிப்புநிலை
மந்தப் போக்கில் வீழ்கிறது
கந்தற் கூதைகள் போடுவர்வாய்ப்
பந்தல் ஊர்வெள் ளாடுகள்மேல்!

ஆற்றல் இல்லை இவர்களுக்கென்
றுருங் கூறுர் ஆயினரும்
ஆற்றல் வீணே காட்டுவழி
அலைந்தே ஓடிக் கடற்படுமோர்
ஆற்றைப் போன்றே அழிகிறது
அருமைத் தமிழர்க் கென்றுரிய
போற்றும் ஊக்கம் உழைப்புடனே
போயிற்றுமோ பொறுப்புணர்வு!

கவனம் இல்லை ஆசிரியர்
கருத்தோ டூன்றிச் சொல்வதெலாம்
அவமே போட்டுப் பாறையிலே
அருநெல் விதைக்கும் பழங்கதைதான்
சவமாய்ச் சடலம் வகுப்பிருக்கச்
சரோஜா தேவி எம்.ஜீ ஆர்.
இவரைச் சுற்றி மனம் அலைய
என்ன இழவைக் கற்பிப்பதாம்!

ஆசைப் பட்டிம் மாணவர்கள்
ஆ! ஊ என்றே அக்கறையாய்
வாசிக்கின்ற சரக்குகளை
வரிசைப் படுத்திப் பார்க்கையிலே

பேசும் படந்தான் முதலுளது
பெற்ருேர் உணவுக் காய்க்கொடுத்த
காசுக் கன்ருே வாங்கியிதைக்
கல்லூ ரியிலே படிக்கின்ருர்!

அன்றைக் கொருநாள் பள்ளியிலே
அதுவும் க.பொ.த. வகுப்பில்
ஒன்றைக் கேட்டேன் உண்மையிதாம்
இன்றெம் நாட்டின் தினத்தாள்கள்
ஒன்றன் பெயரைச் சொல்கவென
உடனே ஒருவன் தினத்தந்தி
என்ருன் மற்ருேன் சுதந்திரனும்
இராணி என்ருன் வேருெருவன்!

எல்லாச் செய்தித் தினத்தாளும்
எங்கள் பள்ளி மண்டபத்தில்
நல்லா யாருங் கண்டிடலாம்
நாட்டங் கற்கச் சிறிதளவும்
இல்லார் எங்கள் பிள்ளைகளில்
இருக்குங் குறையை ஆராய
இல்லை யாரும் மேல்நாட்டார்
இயல்பைச் சும்மா திணிக்கின்ருர்!

ஒன்றை உணர்வீர் மாணவர்காள்
உற்றுக் கேட்டல் கேட்டதைப்பின்
சென்றே வீட்டில் விருப்புடனே
திரும்பத் திரும்பக் கற்றுணர்தல்
நன்ருய்க் குருவின் சொல்மதித்தல்
நாடிப் பண்பு வழிநிற்றல்
என்றிக் குணங்கள் திகழிடமே
இருப்பாள் நாடிக் கலைமகளே!

## வேறு

காற்றிலேகடற் பேற்றிலேமணல்
ஊற்றிலேவள ஆற்றிலே
காவிலேகவர் பூவிலேதெளி
நாவிலேஉயர் பாவிலே
மாற்றிலாமறைக் கூற்றிலேநிறை
சாற்றிலேதிரு நீற்றிலே
மணியிலேமுறை அணியிலேசெழுங்
கனியிலே விழும் பனியிலே
ஆற்றலார்தொழில் அறிஞரின்விழி
ஆன்றவர்வழி சேய்மொழி
ஆய்விலேபெறுங் கருவிலேயதன்
விரிவிலேவரும் உருவிலே

வீற்றிருந்தெனை ஈர்த்துநின்னருள்
வார்த்தழைத்திட ஆர்த்துநான்
வேர்த்துநின்றுளம் பூத்துவாழ்கிறேன்
கூர்த்தமெய்க்கலை வாணியே!

1. நீர்வேலி
அத்தியார் இந்துக் கல்லூரி
நவராத்திரி விழாக்
கவியரங்கம்
19. 10. 1966.
2. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்,
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,
யாழ் இந்துக் கல்லூரி
முதலிய பல கல்லூரிகளின்
நவராத்திரி விழாக்கள்

# வாருங்கள் போவோம்

## கடவுள் வணக்கம்

நற்றமிழ் ஆளவும் நலிவு மாளவும்
ஒற்றுமை ஓங்கவும் உயர்வு தாங்கவும்
உற்றதண் பாடல்வந் தூறிப் பாய்ந்திட
நற்றுணை யாகுவான் நாதன் பிள்ளையே!

## அவையடக்கம்

இலங்கு பொருளார் கவிதைகளால்
ஏற்ற புகழ்சேர் அவைத்தலைவ
கலங்கி டாத நெஞ்சமுடன்
கடனென் றெண்ணிக் காலமெலாம்
நலன்கள் பொலியும் பொலன்கவியால்
நாட்டின் பண்பை நன்னெறியில்
துலங்கச் செய்யுந் துணிவுடைய
துங்கப் புகழார் கவிஞர்களே!

எங்குந் தமிழின் இசைபரப்பி
எம்மோர் உள்ளத் தொளிபெருக்கி
இங்கிவ் வவை யில் வீற்றிருக்கும்
ஏற்றம் மிகுந்த அறிஞர்களே
தங்கும் நண்பர் நங்கையர்காள்
தகைசால் அன்பர் அனைவருக்கும்
அங்கச் செந்நீர் பொங்கியெழுந்
தார்க்க வணக்கஞ் செலுத்துகிறேன்!

## வாருங்கள் போவோம்

பொய்கள் சொல்லுந் தலைவர்களும்
பொருளைத் திரிக்கும் அறிஞர்களும்
கையை விரிக்குஞ் செல்வர்களும்
காசிற் கிடக்கும் வறியவரும்
தெய்வம் தெளியாச் சாமிகளும்
திருடித் திரியும் பத்தர்களும்
மெய்ம்மை காணு மற்றவரும்
விளங்கா ஊரும் ஊராமோ?

கொச்சை எழுதும் பண்டிதரும்
கோள்கள் மூட்டுஞ் சான்றவரும்
அச்சங் கொள்ளும் வீரர்களும்
அடுப்பே காணு மங்கையரும்

மச்சந் தின்னும் பிராமணரும்
மாட்டைக் கொல்லுஞ் சைவர்களும்
இச்சை கொள்ளுந் துறவிகளும்
இல்லா நாடும் நாடாமோ?

பூக்கள் இல்லாக் கொண்டைகளும்
புகைக்கும் புதுமைப் பெண்டுகளும்
சோக்குப் பண்ணி வாழைப்பழத்
தோலிற் சறுக்கி விழுபவரும்
தேக்கிப் பதுக்கும் பெருவணிகர்
ஊக்கம் விரும்பா உழைப்பாளி
பார்க்கப் போனல் இவரின்றிப்
பாழே புகழார் யாழ்ப்பாணம்!

அருப்பு மீசை கண்டவுடன்
ஆசை கொள்ளும் பெடிச்சியளும்
விரும்பிக் காதல் செய்துபினர்
விட்டே யோடும் விசர்ப் பெடியள்
கரும் பென் றெண்ணிச் சீதனத்தைக்
காட்டிப் பெற்ற பெண்களுக்கு
இருப்பைக் கட்டி வைப்பவர்கள்
இல்லாமலுமா யாழ்ப்பாணம்?

நல்ல தேநீர்க் கடையென்று
நான்கு வேறூர் நண்பருடன்
செல்ல முன்னர் இலையான்கள்
சேர்ந்து வரவேற் காதகடை
கல்லை மண்ணைச் சாப்பாட்டிற்
கலக்கு மாற்றல் அற்றகடை
இல்லை யென்றால் அடமுருகா
என்ன பெருமை எமதூர்க்கே!

சினிமாப் பார்க்கப் போய்நன்கு
சீழ்க்கை அடித்துக் கைதட்டி
மனம்போம் போக்கில் மற்றவரை
மதியா தங்கிங் கென்றூர்த்தே
அனுமான் கூட்டச் சேட்டைகளை
அதிகம் காட்டித் தாம்பெரிய
பனையூர் மக்கள் எனவுணர்த்தும்
பண்பில் லாத ஊர் ஊரோ?

பள்ளிக் கூடம் எனச்சொல்லிப்
பனங்கூ டலிலே முகாமிட்டுக்
கள்ளுக் குடிக்கும் மாணவர்கள்
கண்டித் திடிலோ ஆசிரியர்
துள்ளிக் கேட்கும் பெற்றோர்கள்
சொன்னால் ஒன்றும் கேளாத
பிள்ளைப் பாசம் இவ்வாறு
பெருகா ஊரும் ஊராமோ?

*

திருமணத் துக்கும் வெடி வெடிப்பார்
செத்தவீட் டுக்கும்வெடிசுடுவார்
அரைவெறி போட்டு அவிட்டடிப்பார்
ஆசுவத் திரியிற் போய்க்கிடப்பார்
ஒருசிறு வேலை பொறுப்புடனே
சரிவரச் செய்யத் தெரியாத
குரு குருப் பான்கள் உருவாக்கும்
பரபரப் பில்லா ஊர் ஊரே?

*

போட்டி போட்டுக் கோயிலிலே
போற்றிச் செய்யும் விழாவினிலே
ஆட்டக் காரக் குமரிகளை
அழைத்து வந்தே ஆடவிட்டு
வேட் டை நாய்கள் போல்வளைத்து
விடியும் வரையும் ஆர்ப்பரித்துச்
சேட்டைக் கதையில் திளைப்பவர்கள்
திகழா ஊரும் ஊராமோ?

சாரா யத்தின் வெடிலுள்ள
தண்ணீர் முழுதும் அடிக்கின்ற
ஊரார் போற்றும் கீரிமலை
ஒன்றின் நோக்கம் இன்றென்றுய்ச்
சீர்கே டாகிப் போனாலும்
சிந்தித் தான வேலைகளைப்
பாரா திருக்கும் பெருமக்கள்
[illegible] ஊரும் ஊராமோ?

எல்லா இயல்பும் ஆராய்ந்தே
என்றும் நாட்டின் நலன் எண்ணும்
நல்லார் ஒன்றைச் செய்தக்கால்
நடுவில் நின்று புழுக்கத்தால்
பொல்லா வேலை இதனுலெப்
பொழுதும் தொல்லை எனக்கத்தி
இல்லா மற்செய் திடவல்லார்
இல்லா மலுமோர் ஊராமோ?

பெருமை மனைவி தனைத்திட்டிப்
பேசி எடுத்த நகைதன்னைப்
பெருமாள் அடைவு கடைவைத்துப்
பெற்ற பணத்தைப் பிறர்சேரத்
தருமர் வெளியூர் மதுக்கடை.யில்
தானும் கண்விண் தெரியாமற்
சரியாய்ப் போட்டு மற்றவரின்
சரியும் பிழையும் விவாதித்து—

சரசுவதி 'மார்க்' பீடியுடன்
தள்ளா டிச்சென் றடுத்துள்ள
முருகன் 'கோட்டல்' மீன்பொரியல்
முட்டை இறைச்சி தின்று 'தமிழ்ப்

பெருமை' என்னும் படம் பார்க்கப்
பிந்திச் சென்று சட்டங்கள்
பெரிதும் பேசிக் கடைசியிலே
தெருவில் தள்ளி விடவீழ்ந்து—

உடுக்கை யின்றி நடுத்தெருவில்
ஓலமிட்டுப் பலர் சிரிக்கக்
கிடக்கும் வாழ்க்கை முறை யென்னும்
கீழைத் தேசக் கொடி மூலே
முடக்கு யாவும் பறந்தெங்கள்
மூத்த பண்பைத் தினம்படமாய்ப்
பிடிக்க வேண்டும் இல்லையென்முற்
பெருமை எங்கே புகழெங்கே!

## வேறு

இத்துணைப் பெருமை சான்ற
தெங்களூர் இதனிற் பற்று
வைத்தவர் போக மற்ருேர்
வாருங்கள் போவோம் மெள்ளப்
புத்தியாய்ப் பண்பு வாய்ந்த
புதியவூர்க் கென்று கூவப்
பித்தனே யானும் விட்டுப்
பிரிவதோ பிறந்த மண்ணே!

மண்ணிலே பண்பு கெட்ட
மாந்தரெங் கில்லை நாளும்
எண்ணிலாத் தொல்லை செய்வார்
இவர் பொருட் டுலகொன் றில்லைத்
திண்ணமாய் முறைமை பேணிச்
செயற்படும் மேலோர் சால்பு
எண்ணியே உலகம் நாளும்
இயங்குதல் அறிவோ மன்றோ?

புத்தூர்த் தமிழ் விழா
20. 9. 68.

# பண்புடையார்ப் பட்டுண்டுலகம்

## அவையடக்கம்

நாடுபுகழ் இரசிகமணி
பீடுமிகு கவிஞர்களே
பேரறிவுச் சான்றவர்காள்
சீரியநல் நண்பர்களே!

## நன்றி

பெரியபுகழ் யாழ்நகரில்
அரியசெயல் ஆற்றிவரும்
இலக்கியவட் டந்தமிழர்
நிலைக்களனாய் வாழ்ந்துவரும்
மன்னுபுகழ் வள்ளுவர்க்கிவ்
இன்னரிய விழாவெடுத்து
வைத்தபெருங் கவியரங்கில்
எத்துணையும் பெருமையிலா
என்னையுமிங் கேற்றிவிட்டார்
அன்னவர்க்கென் நன்றிநன்றி!

## கடவுள் வணக்கம்

ஞானகுரு நான்வணங்கும்
யானைமுகன் உள்ளமதில்
வீற்றிருக்கும் பெருமிதத்தால்
சாற்றுகிறேன் என்கவிதை!

## "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்"

பின்னுபின் னென்று பின்னி
பிழைமிகத் தாறு மாறாய்
மன்னுசீர் முறைக ளெல்லாம்
மாறுகொண் டெழுந்த காலை
என்னஏன் எங்கே எப்போ
எப்படி என்று கேள்வி
உன்னியே எழுப்பி வாழ்வின்
உயிர்த்துடிப் புணர்ந்து சான்ற—

தெள்ளுதண் மொழியில் யாவும்
சிறந்திடத் திடமாய்ச் சொல்லி
அள்ளுசெந் தமிழர் வாழ்வை
ஆளக விளக்காய் ஓங்கும்

வள்ளுவப் பெரும நின்றன்
வாய்மொழி வெல்க போற்றி!
கள்ளவன் போக்கி லோடும்
காலமிக் காலங் கேள்தி.

## வேறு

சொட்டை சொல்லும் பழக்க மின்னும்
விட்டுப் போக வில்லை
ஒட்டி நின்று விடுப்புப் பார்க்கும்
ஒற்றைக் கண்ணர் தொல்லை
பட்டு மாளும் நாளும் இந்தப்
பக்கங் கூட இல்லை
கட்டை ஏறுங் கால மெந்தக்
காலங் கழுதைக் குணங்கள்!

அண்டை வீட்டுக் குறைகள் பற்றி
ஆய்ந்து தோய்ந்து மாய்ந்து
ஒண்டைப் பத்து நூறில் வைத்து
ஒழுக வாயில் துப்பல்
கண்ட நின்ற பேர்க ளோடு
கதைக்க வில்லை என்றால்
மண்டை வெடித்துப் போகு மென்ற
வாழ்க்கை யுறுதி யாச்சு!

தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு
    தப்பி ஓடி னனே
வேலிப் பக்கஞ் சென்ற வேளை
    விடியக் கண்ட தாகப்
போலிச் செய்தி வைத்துக் கொண்டு
    புளுகு வார்கள் மடியில்
கூலி கொடுக்கத் தேவை யில்லைக்
    கும்பல் கூடும் நொடியில்!

நெஞ்ச முக்கில் நீந்து வார்க்குக்
    கொஞ்ச மேனு மந்தோ
பஞ்ச மில்லைத் துஞ்சி டாது
    பாடு பட்டு யாரோ
கஞ்சி கூடக் குடித்தி டாது
    கையில் நாலு காசை
மிஞ்சச் சேர்த்து வாழ்தல் கண்டு
    மெலிவர் வயிறெ ரிந்தே!

ஒட்டை வாயர் உலுப்பிக் கொட்ட
    உமிழ்ந்து நீரை விழுங்கி
யோட்டுப் பேயர் கேட்டு விட்டு
    முழுக்க நம்பிச் செயலிற்
காட்ட முந்திக் கையை நீட்டிக்
    கம்பி எண்ணு வார்கள்
மாட்டி வைத்த வீரர் வந்து
    வம்பு பண்ணு வார்கள்!

சட்டை என்ன தைய லென்ன
சாச்ச பழைய பாணி
முட்டி என்ன சட்டி என்ன
மூன்று நாட்கள் நில்லா
கிட்ட எமது பொருட்க ளோடு
கிடக்குந் தகமை இவைக்குச்
சொட்டு மில்லை நாங்கள் முன்னர்
சொல்லிச் செய்த தென்று—

பெட்டி போட்டுக் கரையுங் கட்டிப்
பெரிய இடத்துப் பேயர்
கொட்டி வைத்துத் தங்கள் பேரைக்
கொடியிற் கட்டி அளப்பர்
மட்டி போல நின்று கேட்கின்
விட்டு வைக்க மாட்டார்
வெட்டி மட்டந் தட்டி ஞலும்
செட்டுக் கார னென்பார்!

ஏட்டி லெக்கச் சக்க மாக
ஏற்ற வாழ்வு முறைகள்
காட்டி யுள்ள போதும் மிக்கக்
கற்ற தமிழர் காணுர்
கூட்ட மேறி மட்டும் நன்கு
பேட்டுக் கோழி போல
வீட்டி லொன்றும் பற்றி டார்கள்
வெளுத்து வாங்கு வார்கள்!

சொன்ன சொல்லை மிஞ்சி மீறிச்
சுட்டெரித்து முறைகள்
மூன்னுக் கோடி மூஞ்சை போக
முயங்கி முழிக்கும் வேளை
தன்னுஞ் செய்த தவறை எண்ணும்
தன்மை தரணி போற்றும்
பென்னம் பெரிய தமிழ னுக்குப்
பெரிது மில்லை யேன்னே!

எண்ணு முண்டு எழுத்து முண்டே
என்ன பயனைக் கண்டோம்
கண்ணி ருக்கு நீதி நேர்மை
காணத் தெரிய வில்லை
பண்ணு மன்பும் தன்ன லத்தின்
பாதைக் கென்று தோன்றும்
மண்ணி ருக்கு முளைக்கும் யாவும்
வளர்ந்து செழிக்க விடவா?

## வேறு

அறுபத் தெட்டுச் சங்கங்கள்
ஆயிரத் தெட்டு மன்றங்கள்
வெறும்வாய் சப்பும் நோக்கங்கள்
வேற்றுமை வளர்க்குந் திட்டங்கள்!

ஆளாள் தலைவர் ஆகிவிட
அளவை மீறும் ஆசையதால்
கோள்கிள் மூட்டிச் சுழியோடிக்
குலைப்பர் பண்பு முறையெல்லாம்!

ஆற்றல் இல்லை அறிவில்லை
ஆனு லென்ன அவர்தம்மைப்
போற்றப் போர்த்தப் பொன்னுடை
புனுக ஆட்கள் குறைவாமோ?

பரிசுக் கென்றே படைக்கின்றார்
பார்த்துக் கீர்த்துச் சரிக்கட்டிப்
பரிசும் பதுங்கிச் செல்கிறது
தரிசோ கணிப்போர் தலையெல்லாம்!

மிகநல் நூலைத் தந்தாலும்
வெளிநாட் டறிஞர் புகழ்ந்தாலும்
வெகுவாய் நெஞ்சம் புழுங்கிப்பின்
வெடிக்கின் றார்நம் தமிழன்பர்!

கெட்டித் தனத்தைக் கண்டாலோ
கட்டிக் கதைகள் பலநூறு
மட்டந் தட்டி விடுவார்கள்
மறைவில் நின்றே மகிழ்வார்கள்!

கண்டால் உடனே கட்டாடி
காணு ராயின் வண்ணனே
சொண்டால் வழியும் நுனிநாத்தேன்
தொண்டை நிறைய அடிநஞ்சு!

தமிழை வளர்க்கின் றேமென்று
தம்பட்டங்கள் அடிப்போர்கள்
கமழும் எழுத்தா ளர்போனல்
கையை விரிக்கின் ருர்நல்ல—

கூட்டம் வைக்க மண்டபத்தைக்
கொடுக்க மெத்தக் கூசுகிருர்
சாட்டுக் கதைகள் வீசுகிருர்
சாரைப் பாம்புப் பேர்வழிகள்!

எல்லாத் துறையும் இவ்வாறே
இருஞ்சுங் கழுகு நரி கொக்கு
பொல்லாப் பாம்பு புலி கரடி
போச்சோ மனிதப் பண்பெல்லாம்!

இருந்தும் என்ன ஆராய்ந்தால்
இருக்கின் ருர்கள் பண்புடையோர்
மருந்தாய் அதனல் மண்புக்கு
மாயா துலகு பிழைத்ததுவே!

## வணக்கம்

படியும் திருக்குறளே
பண்பை மிகப்பேணும்
திடமாய்க் குறள்வாழ்க்கை
செய்வோம் புவிகாக்க
அடியேன் கவிசொல்ல
அழகாய் இருந்திங்கே
வடிவாய்ச் செவிசாய்த்தீர்
வாழ்க! வணக்கங்கள்!

**யாழ் இலக்கிய வட்டம்**
**வள்ளுவர் விழா**
**மாநகரசபைப்பொழுது போக்கு மண்டபம்**
**6-6-1966.**

# ஆசுகவி வேலுப்பிள்ளை

## கடவுள் வணக்கம்

வீடு சேரவை முன்னே — உள்ள
மேடை யான்துணிந் தேறி
கூடும் நின்னரு ளாலே — சுவை
யோடு வந்துபி றந்த
கேடி லாவுயர் பாட்டை — மிகப்
பாடி நின்றிறன் காட்ட
ஓடி வந்தருள் செய்செய் — விளங்
கோம்பொ ருட்கண பதியே!

## அவையடக்கம்

நேர்த்தியாய்க் கற்ற செல்வர்
நிகரிலாக் கவிதை பாடும்
சீர்த்தவென் னண்பர் அன்பர்
திகழ்வயா விளானில் வந்த
கூர்த்தமெய்ப் புலவன் ஆசு
கவிபுகழ் கொண்டு போற்ற
ஆர்த்தெழுந் தவையி லுள்ள
அனைவர்க்கு மென்வ ணக்கம்!

திருவருள் கல்வி பண்பு
சிறந்தபே ரறிஞர் அன்பர்
பொருள்தரு பயிர்க ளாலே
பொலிவுறு செல்வம் என்று
வர வர வளரு கின்ற
வயாவிளான் ஊரில் இன்று
பெருநயப் புலவன் வேலுப்
பிள்ளைக்கு விழாவெ டுக்கும் —

இந்தமே லான வேளை
ஏற்றவோர் கவிய ரங்கில்
செந்தமிழ்ப் புலவர் வேலுப்
பிள்ளையின் திற னைப் பாடிச்
சிந்தையைக் களிக்க வைத்துத்
திக்கெலாம் புகழ் பரப்ப
வந்துமுன் நிற்கின் றார்கள்
வண்டமிழ்க் கவிஞர் நால்வர்—

வளமான நாக ராசன்
வற்றாத காரை சேசு
தெளிவாகப் பாடு மையாத்
துரையோடு திறமை மிக்க
ஒளிர்கின்ற விசயன் நும்முன்
உள்ளார்கள் ஆறுய்ப் பாய்ந்தே
உளமீர்க்க முன்னர் யானிங்
கொருசொல்லுக் கூறக் கேளீர்!

## ஆசுகவி வீசுபுகழ்

மாசுமறு வற்றதமிழ்
மாந்தியெதிர் நிற்கப்
பேசுகவி வாணர்களுங்
கூசுமதி நுட்ப
ஊசிநிகர் உட்பொருள்கள்
ஊறுகவி செய்த
ஆசுகவிப் பிள்ளையவர்
வீசுபுகழ் வாழி!

செட்டுவிழக் குட்டவிழத்
தீப்பொறியைப் போன்று
சுட்டுவருங் கெட்டவரைத்
துப்புரவு செய்யும்
மட்டமதி கொண்டவரைத்
தட்டிவரும் நெஞ்சைத்
தொட்டுவரும் ஆசுகவிக்
கெட்டித்தனப் பாட்டு.

வேகமனம் ஒன்றுவரும்
வேதனையைத் தீர்க்கும்
சாகவரும் ஒன்றுபுகழ்
சாற்றிவரும் ஒன்று
போகவர நிற்கச் சவை
பொங்கிவருங் காள
மேகமெனும் ஆசுகவி
மேன்மை புவி வெல்க!

கூடுதமிழ்ச் சொற்பொருளைக்
கொண்டுமதி யாலே
கோடுகளி லேறிவழக்
காடியவை வென்ற
பீடுமிகு மாசுகவிப்
பெற்றிபுவி காண
ஈடிணையில் லாததிறன்
பாடிவரு வோமே!

வேற்றுமொழிப் பற்றுமிக
மேன்மையெழில் பெற்றே
ஆற்றலுடன் அன்றுபுவி
யாண்ட தமிழன்னை
போற்றுபவ ரற்றநிலை
மாற்றிவிட வந்து
தோற்றியவன் செந்தமிழைத்
தூக்கியவன் கண்டீர்!

வீறுடைய செந்தமிழன்
ஏறுநடை வீரன்
ஆறுமுக னைப்பரவி
ஆனபொருள் பெற்றோன்
கூறுமுயர் பத்திரிகை
கொண்டுதமிழ் போற்றி
தேறுமுயர் நூல்கள்பல
செய்துமிகத் தந்தோன்!

பேறிவனைப் பெற்றதரும்
    பேறிவனின் ஆன்ற
ஊறுகவி நெஞ்சதனை
    ஊன்றியுல கேத்த
ஆறுநிகர் ஆசுகவி
    ஆனபுகழ் ஓங்கி
மீறிவர நாம் தமிழர்
    மேலும்வகை செய்வோம்!

தலைமைக் கவிதை
ஆசுகவி வேலுப்பிள்ளை நினைவு விழா
யாழ் இலக்கிய வட்டம்
வயாவிளான் - பலாலி தெற்கு
வாலிபர் சங்க சனசமூக நிலைய
மண்டபம்
7-3-69

## கடவுள் வணக்கம்

கும்மாளம் போட்டு நல்லாய்க்
குதியனைக் குத்திப் பின்னர்
சும்மாநான் இருந்து விட்டுச்
சோதனை வந்த நேரம்
எம்மானே பிள்ளை யாரே
எனக்கருள் செய்வா யென்று
கைம்மாறாய் இளநீர் பத்தைக்
கல்லிற்போட் டுடைக்க வில்லை!

ஆங்கலை வடிவாய் நின்றே
அரியநன் முயற்சிக் கெல்லாம்
பாங்குற வருள்பு ரிந்து
பயன்தர வல்ல தூய
ஓங்குகை யுற்ற ஞான
உருவருட் பிள்ளை யாரே
ஈங்குநற் கவிதை பாட
இரங்கிட வேண்டு கின்றேன்!

## அவையடக்கம்

அழகுறக் கவிதை பாடும்
அரியநற் றலைவ ருக்கும்
ஒழுகுதண் சுவைமி குந்த
ஒப்பிலம் பலவி யொத்த
பழகுநற் கவிதை பாடும்
பைந்தமிழ்ப் பாவ லர்க்கும்
எழுமையும் உயர்வு நல்கும்
இன்னறி வூட்ட வல்ல —

தொழுதுல கேற்று கின்ற
தூயவா சிரியர் கட்கும்
பழுதற நாட்டை நாளை
பாலிக்கு மாற்றல் கொண்டு
குழுமிய மாண வர்க்கும்
குறைவிலா வென்றன் பாட்டைப்
பொழிவுசெய் முன்ன ரிங்கு
போற்றியென் வணக்கம் சொல்வேன்!

## வாழ்த்து

பைந்தமிழ்ப் பண்போ டிசைவுற்ற
பல்கலைக் கல்வித் துறையோங்க

அந்தமிற் சேவை மிகவாற்றி
ஆண்டெழு பத்தைந் தெய்தியநம்
கந்தவ ரோதையக் கல்லூரி
கண்களே மக்கட் களித்துள்ள
சந்தத முந்தன் னிலை போற்றித்
தழைத்தினி தோங்கி வாழியவே!

## எழுதுகோல் தெய்வம்

எழுதுகோல் தெய்வ மிந்த
எழுத்துந்தான் தெய்வ மென்று
தொழுதுபா ரதியார் சொன்னார்
சுவைமிகு மடிக ளென்று
பழுதிலா தெண்ணிச் சொன்னேன்
பக்கத்தே யிருந்து கேட்டுக்
கழுதையுன் போன்றோர்க் கெல்லாக்
கருவாடுஞ் சுவையே யென்று —

சிறியோர் நண்பன் மேலும்
தெழித்திவை கூற லுற்றான்
ஊறுமோர் கவிதை நெஞ்ச
முள்ளபா ரதியா ரிந்த
மாறுபா டுடைய சொல்லை
மாண்பிலாப் பொருளை ஏனோ
கூறினார் தெரிய வில்லைக்
குப்பை யிவ்வடிக ளென்றான்!

எழுகோ லுக்கும் மேலாய்
எழுத்துக்கும் மேலாய் நின்றே
எழுதுவிக் கின்ற தெய்வம்
இல்லையோ பார திக்கு
முழுதுமாய் முதலு மாகி
முடிவிலாப் பொருளு மாகித்
தொழுதெலா வுலகு மேற்றும்
தூயவப் பொருளை விட்டு —

ஒழுகுமோர் எழுது கோலை
உதறியும் எழுதா நிற்கும்
பழுதுடை யெழுது கோலைப்
பார்த்தொரு தெய்வ மென்று
தொழுவதும் தொட ரெழுத்தும்
தூயவோர் தெய்வ மென்று
மொழிவதும் தெளிவில் லாத
இழிவுகொள் கூற்றுக் கண்டாய்!

## வேறு

என்றவன் கூறிமு டிப்ப — ஆங்கு
இன்னொரு நண்பன் எழுந்துரை செய்வான்
நன்றுநீ சொல்லினை யப்பா — இந்த
நானிலம் வாழ வழிவகை கூறும்
இன்றிரு வள்ளுவ னரின் — தூய
எழுத்தினைத் தானுமோர் தெய்வமென் றேற்று
இன்றைய காலத்தி லிந்தக் கூற்றை
எப்படி யேற்பது மெய்ப்பொரு ளில்லை!

மெய்ப்பொரு ளென்பதைக் கேட்டுத் — துள்ளி
வேறொரு நண்பன் மறுத்துரை சொன்னான்
மெய்ப்பொருள் எங்களுக்கெல்லாம் — வெறும்
மேனி மினுக்கிற் பொதிந்துள்ள போது
இப்பொருள் எங்ஙன மெட்டும் — விட்டு
ஏதுங் கறிக்கடை கள்ளுக் கடையில்
துய்த்திடும் தூவானப் பேச்சு — எனின்
தோன்றிடு மாயிரம் மெய்ப்பொரு ளன்றோ?

கட்டிய காளையை விட்டுக் — கள்ளக்
காதல னோடவள் ஓடின ளென்றால்
விட்டுள வேலைக ளெல்லாம் — அதில்
வேறுவே றானநல் மெய்ப்பொருள் தோன்றக்
கொட்டிய லசியா ராய்வர் — அதிற்
கூடும ரியபொ ருள்களி லூறி
மட்டில் மகிழ்வெய்து வார்கள் — இந்த
மாந்தர் விரும்பும் பொருள் அறியோமா?

அன்னதா னக் கதை யென்றால் — அன்றி
அண்ணமார் கோயிலில் வேள்வியா மென்றால்
சின்னமே ளக்கதை யென்றால் — இன்னும்
சினிமா நடிகையொ ருத்தியின் மின்னும்
கன்னத்தி லோர்பரு வென்றால் — அட
என்னென்ன சன்னதங் கொள்ளுவா ரின்னோர்
மன்னுதி ருவள்ளு வர்தன் — எழுத்தை
வாழ்த்தியோர் தெய்வமென்
றேத்துவர் கொல்லோ?

## வேறு

என்றே கூற மற்றை நண்பன்
இடையிற் குறுக்கிட்டான்
நன்றே நன்றே சண்டை வேண்டாம்
நானோர் உரை சொல்வேன்
என்றே சொல்வான் வறுமைப் பேயால்
இன்னல் மிகப் பட்டு
பொன்று எழுத்தால் எழுந்தார் உயர்ந்தார்
புரிந்தே பாரதியார் —

வளமாய் வாழ்வை வைத்த எழுத்தை
வணங்கித் தெய்வமென
உளமா ரத்தான் உணர்ந்தார் அதனால்
உமக்கேன் பிணக் கின்னும்
வளமாய் வாழ்வைப் பிறர்க்கும் ஈந்து
வகைசெய் எழுத்தெல்லாம்
ஒளிசெய் தெய்வம் என்னல் பிழையோ
உளதே சான்றின்னும் —

தெய்வம் கணவன் மனைவிக் கென்பார்
சிறக்க இல்வாழ்வு
தெய்வம் குருமா ணக்கர்க் கென்பார்
தெளிய அறிவெல்லாம்
தெய்வம் பெற்றோர் பிள்ளைக் கென்பார்
தெரிய உலகெல்லாம்
தெய்வம் ஆன்றோர் சொல்லும் எழுத்தும்
செம்மை நெறி காட்ட —

மெள்ளக் கேட்டோர் நண்பன் சொல்வான்
 மேலும் இவ்வாறே
கள்ளுந் தெய்வம் குடிப்போ ருக்குக்
 கவலை தீர்த்தற்கே
கள்ளச் சாரா யமுந்தான் தெய்வம்
 காசைச் சேர்த்தற்கே
வெள்ளிக் காசுந் தெய்வம் கையை
 விரியா தாருக்கே —

நில்லா யென்றே மற்ருேன் சொல்வான்
 நிற்கும் விளேவெண்ணிப்
பல்லாற் ருனும் பயன்கள் நல்கும்
 பணிகள் அல்லாது
எல்லா இழிவுச் செய்கை களிலும்
 இறைவன் இருப்பானே?
நல்லா யிருக்குன் நியாய மென்றே
 நகைத்துச் சொல்கின்ருன் —

சொல்லப் போனல் இன்னும் மேலாய்ச்
 சொல்லல் முடியாதோ
கல்லுந் தெய்வம் புல்லுந் தெய்வம்
 கடதாசியுந் தெய்வம்
பல்லுந் தெய்வம் மூக்குந் தெய்வம்
 பரதேசியுந் தெய்வம்
எல்லாப் பொருளு மாகி உள்ளான்
 இல்லான் இறைவனென —

எங்கள் சமயம் கூறும் உண்மை
இன்னும் அறியீரோ
எங்கும் எதிலும் தங்கும் இறைவன்
எழுத்தில் தங்கானோ
பங்கம் இல்லைப் பாட்டுக் கொருவன்
பாரதி யார்கூற்றில்
எங்கள் பேச்சை இனிதே முடிப்போ
மென்றே எழுந்தார்கள்.

## வேறு

சிந்தனை செய்ய லானேன்
நண்பர்கள் சென்ற பின்னல்
அந்தமில் லழகு தூய்மை
ஆற்றலென் றிவைகள் கொண்டு
விந்தையார் பயன்கள் முந்தி
விளைத்தென்றும் நிலைக்க வல்ல
எந்தநல் லெழுத்தி லேனும்
இறைவன் வீற்றிருப்பா னுண்மை!

சுன்னுகம்
ஸ்கந்தவரோதையக் கல்லூரி,
75 வது ஆண்டு நிறைவு
இலக்கிய விழா
18-7-69

# எது மாண்பு?

## கடவுள் வணக்கம்

கூடல் குளக்கரைகள்
        குளைக்காட் டரங்கங்கள்
மேடு பள்ளவயல்
        வெளிகள் வெட்டைபுனல்
ஓடை ஆலமர
        ஊஞ்சல் சம்புக்கழி
ஓடி விளையாடி
        உலவி வருந்தோறும்
கேடில் மணியோசை
        கேட்டுக் கிறுங்கியெழுந்
தாடி நினையண்டி
        யமர்ந்த பயனாலே
கூடுந் திருஞானக்
        கோலங் கிராய்க் கோவே
பாட எழுகின்றேன்
        பணிந்து தொழுகின்றேன்.

## அவையடக்கம்

இந்தநற் கவிய ரங்கை
இசைமுடன் நடத்த வந்த
பைந்தமிழ்ப் புலவ ரேறே
பழுத்தபே ரறிஞ ரேறே
அந்தமிழ் புகழ்ம ணக்கும்
யாழ்ப்பாண மாம்ப ழம்போற்
சிந்தையைக் கவரப் பாடுந்
திறன்மிகு நண்பர் கட்கும் —

உன்னத வதிப ருக்கும்
ஒப்பிலா சிரிய ருக்கும்
மின்னலும் முகிலும் மீனும்
வேல்பிறை கமுகு முத்தும்
மன்னிய சோலை மானும்
மயில்முழு மதியும் பூவும்
அன்னமும் அணிவ குத்தே
அளப்பருந் தொகையில் வந்து —

கூடிய தாமோ வென்று
குதித்தெழும் வண்ண மிங்கே
ஆடிவேற் கூட்ட மன்ன
அலைந்திடா தமைதி யாக
நாடியிங் கமர்ந் திருக்கும்
நங்கையர் அனைவ ருக்கும்
பீடுகொள் கவிஞர் பெற்றி
பிறங்குநல் வணக்கஞ் சொல்வேன்!

## எது மாண்பு?

பாரில் தமிழ்க்குலத்தின்
பாரம் பரியமதைத்
தேரின் திளைத்தெழுந்து
மேனி சிலிர்க்கிறதே
அன்புத் தமிழ்மொழியை
ஆற்றல் தமிழர்களின்
பண்புச் செயற்றிறனைப்
பாங்கைப் பலகலையை
இங்கே நினைக்கையில் ஆ!
எண்ணம் மிகவளர்ந்தென்
அங்கக் குருதிமிக
ஆர்த்துக் களிக்கிறதே!

பெண்ணின் பெருமையினை
மண்ணில் முதன்முதலில்
எண்ணித் தமிழ்க்குலந்தான்
ஏற்றி மதித்ததெனின்
உண்மை புகழ்ச்சியிலை
வண்மைத் தமிழ்மரபிற்
பெண்மை கொலுவிருக்கும்
பெற்றி உலகறியும்
மாதர்க் குரியகுணம்
மாட்சி இவையிவையென்
றோதித் தமிழர்களே
அழகாய் வரையறுத்தார்.

தாவ ணியைப் போட்டால்
தாமும் மகளிரெனப்
பாவனைகள் பண்ணும்
பகிடி வடிவங்களும்
பாரதியார் கண்ட
பச்சைப் புதுமைமிகு
வீர மகள் போன்று
விளக்கக் குறைவாலே
நாணம் அச்சம்இவை
நாய்கட் காகுமெனும்
கோணல் விளையாட்டும்
பெண்மை கொடுக்காது!

பெண்ணென் பார்யாவர்
பெருமை சிறப்பென்ன?
பெண்ணென்ற சொல்லுப்
பேசும் பொருள்யாது?
தற்காத்துத் தற்கொண்டார்ப்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வில்
லாதாளே பெண்ணென்று
பொய்யிற் புலவன்
புகன்ற இலக்கணத்தால்
வையகத்தில் இன்று
வாழும் மகளிர்தமை
வையகமேன் வேண்டாம்!
வளமார் தமிழீழத்
தையலர்கள் காட்டுந்
தகைமை அளப்போமேல்

நெல்லுக்கு ளாங்காங்கு
நெருங்கி உலவுகின்ற
புல்லுக்கும் வேறு
பாடு புரியவரும்

புரிந்து பெருநெறியிற்
றிரிந்து தமிழ்ப் பெண்கள்
இருந்தும் இலாதாராய்
இருக்கும் பெயர் புகழை
அழிக்கும் அவமான
அற்பப் பிராணிகளின்
பழிக்குப் பரிகாரம்
தேடல் படித்தறிந்த
நும்போல் மகளிர்க்கு
நுனிப்பார் மாண்புதரும்
எம்போல் புலவோர்க்கும்
இறுமாப் பெழுந்துவரும்!

பெண்ணு முதற்பிள்ளை?
ஐயோ பெருப்பாவம்
மண்ணே இனிவாழ்க்கை
என்று வாழ்த்துவரும்
இரண்டொன்றைக் கூட
ஏற்கும் வரம்பெற்றோர்
மிரண்டு விறைவிறைத்து
வில்லங்கப் பட்டோடி

ஐந்தாய்ப் பலபத்தாய்
ஆயிரமாய்ச் சேகரிக்கப்
பஞ்சாய்ப் பறக்கின்றார்
பட்டினியும் கிடக்கின்றார்!

இணுவில் தனிலோர்நாள்
இறைவன் ஒருபெண்ணுக்
கணியாய் ஒருபிள்ளை
அளித்தான் பெண்பிள்ளை
பிறந்த பெருஞ்செல்வம்
பெண்ணென் றறிந்தாள்தாய்
நிறைந்த கண்ணீரால்
நிலத்தைக் கழுவாமற்
கழுவி அழலானாள்
கற்ற மகள்தானும்
பழுதிந் நிலைகண்டீர்
பழுதிந்நிலை கண்டீர்!

பெண்ணென்றாற் பெற்ற
பெண்ணே அழுகின்றாள்
பெண்ணின்று கண்ட
பெருமை இவ்வளவுதான்
ஏனிவ் வவலநிலை
எண்ணின் எழுச்சிவரும்
மானம் கிளர்ச்சிகொளும்
மாதர் நலங்குறித்துப்

பொறுப்போ டுழைக்கமனம்
பொங்கும் ஈனநிலை
சிறக்க வழிசமைத்தாற்
சேரும் சிறப்பினிதே!
வடித்த தமிழ்மரபின்
வாழ்க்கை முறையறிந்த
படித்த நும்போன்ற
பண்பார் பாவையரால்
இன்றைத் தமிழ்ப்
பெண்கள் ஏற்றம் பெறவேண்டும்!
ஒன்றி யொருசங்க
முடனே அமையுங்கள்
ஊர்தோறுஞ் சென்றே
யுயர்ந்த பழக்கங்கள்
பேர்பெற்ற எங்கள்
பிழையா வழக்கங்கள்
புவிக்குத் தமிழ்ப்பண்பு
புரிய நடவுங்கள்
இவற்றை உணர்த்துங்கள்
எழுந்து துணியுங்கள்
ஆண்களுக்குங் கொஞ்சம்
அறிவு புகட்டுங்கள்
மாண்புவரும் உண்மை
வாழ்க வணக்கங்கள்!

கோப்பாய் அரசினர்
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
ஆறுவது தமிழ் விழா
24.7.70.

*

கவிஞர் வி. க. வின்

பிற நூல்கள்

1. $1\frac{1}{2}$ ரூபாய்
2. சிட்டுக் குருவி
3. இலக்கிய உலகம்
4. ஏனிந்தப் பெருமூச்சு?
5. கூ[illegible]யின் சாதனை
6. கிரிமலையினிலே
7. முறிகண்டிப் பத்து
8. நுணுவிலூர்
9. நல்லூர் நாற்பது
10. குரும்பசிட்டி விநாயகர் பத்து
11. வித்தியானந்த மாலை
12. பாடு மனமே
13. பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?
14. புன்னையம் பதிகம்
15. உய்யும் வழி

Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.